www.padippakam.com



# புதிய கலாச்சாரம்

ஜூலை 2010
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00

## செயற்கை உயிர்:

**படைப்புரிமை இழந்த பழைய கடவுளும் காப்புரிமை கோரும் புதிய கடவுளரும்!**

படிப்பகம்

www.padippakam.com

ஒரு கிலோமீட்டர் தூரத்துக்கு தோரணமும், கொடியுமாக தெருவே பளபளவென்று மின்னியது. ''உன்னை எங்கெங்கு தொட்டாலும் இளமை'' என்று இசைத்தட்டு வழியாக எம்.ஜி.ஆர் தெருவில் பாடிக்கொண்டிருந்தார். குரல் வந்த திசையை நெருங்கிப் போகப் போக தெருவோரத்தில் ஆங்காங்கே கரைவேட்டியுடன் அ.தி.மு.க. கட்சிக் காரர்கள் பளிச்சிட்டனர். சூழ்நிலையின் பரபரப்பும், தெருவின் புதுப்பொலிவும் அங்கு என்னதான் நடக்கிறது என்ற ஆவலைத் தூண்டியது.

திடீரென புதுப்புது ஸ்கார்பியோ, இன்னோவா கார்கள் ஒரு ஐந்தும் சுமோ, மாருதி ஆம்னிகளும் சர்சர் ரென்று சீறிப்பாய்ந்து வர, ஹாரன் சத்தம் கிலியூட்ட, போகிற வருகிறவர்கள் சடா ரென விலகி நின்று வேடிக்கைப் பார்த்த னர். நாலைந்து கார்கள் அஞ்சு நிமிசத் துக்கு முன்னால்தான் புதுசாக தரைக்கு இறக்கியது போல இருந்தது.

கார்தான் புதுப்பொலிவு என்றில்லை. காரிலிருந்து இறங்கிய கரைவேட்டிப் பேர்வழிகளோ, இப் பொழுதுதான் கஞ்சிபோட்டு இஸ்திரி பண்ணியவர்கள் போல புதுமிடுக்கு டன் தென்பட்டனர். ஆளோடு சேர்ந்து அயர்ன் பண்ணியிருப்பார்களோ?! என் பாட்டுக்குப் போனவனை சூழ்நிலை சுண்டியிழுத்தது. தொலைவி லிருந்து பார்க்கக் காட்சிகள் துல்லியம் பத்தாததால் பந்தலை நெருங்கினேன்.

''சூளைமேடு நாலாவது வட்டம் சார்பாக அண்ணனுக்கு இந்த பொன்னா டையை....'' முழு வார்த்தையை முடிப்ப தற்குள் ''சூளைமேடு இளைஞர், இளம் பெண் பாசறை சார்பாக, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பா தங்களை வணங்கி இந்த பொன்னா டையை''... வரிசையாக வந்த எந்த பொன்னாடையும் முழு வாக்கியமாக முடியவில்லை. ''பகுதிக் கழகக் செயலாளரும், சங்கு ரியல் எஸ்டேட் தொழிலதிபருமான அண்ணன் சங்கு பாஸ்கரை தலைமையேற்று நடத்தும்படி இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்..!

பேசி முடிப்பதற்குள் கிடுகிடுவென விழுந்த பொன்னாடைகள், அப்புறம் தோரணம், கொடிகள்,மைக்செட்டு என எல்லாவற்றுக்கும் என் மனம் செலவுக்க ணக்கை போட்டுக் கொண்டிருக்கும் போதே, ''அம்மா வாழ்க! புரட்சித் தலைவி அம்மா வாழ்க!'' என்று ஒருவர் சாமி வந்தது போல கத்த, சுத்தியிருந்த கரைவேட்டிகள் தோளில் கிடந்த துண்டு எகிற கத்தினர். மின்னல் வேகத்தில் பந்த லுக்குப் பக்கத்தில் கூட்டத்தை பிளந்து கொண்டு ஒரு பளப்பள இன்னோவா வர, யாரும் எதிர்பார்க்காதபடிக்கு சர வெடி ஏரியாவையே பிளந்து கட்டியது.

மார்க்கெட் மாடு தெருவில் வெருண்டு ஓடி பந்தல்பக்கம் வர.. ''தங்கத் தாரகை அம்மா வாழ்க!'' என்ற காட்டுக் கத்தல் ஒலிபெருக்கியில் காற்றைக் கிழிக்க மாடு திக்கு திசை புரி யாமல் வேறுபக்கம் ஓடியது. சத்திய மாக ஒரு ஐம்பதாயிரம் வரை செல வாகி இருக்கும் என மனசுக்குப் பட்டது.

மைக்கை இரண்டு முறை பிடித்து பிடித்து விட்ட சங்குபாஸ்கர் கருணா நிதியை ஒரு பிடிபிடித்தார். ''புரட்சித் தலைவி இதயதெய்வம் அம்மாவைப் பார்த்து கேள்வி கேட்க இந்த கருணா நிதிக்கு அருகதை உண்டா? யார் இந்த அழகிரி? யார் இந்த கனிமொழி?... பேச்சு சூடேறி ஒரு கட்டத்தில் ''நான் சவால் விடுகிறேன்! எச்சரிக்கிறேன்! ஏ! ஸ்டாலினே புரட்சித் தலைவி, ஏழைகள் வீட்டுத் தங்கம், திராவிடச்சிங்கம் அம்மா அவர்களைப் போல உன்னால் நாலுவார்த்தை இங்கிலீஷ் பேச தெரி யுமா? வருங்கால முதல்வர் அம்மா என்பதை வரலாறு சொல்கிறது! கோபா லபுரத்து கொள்ளைக்காரர்களே...

தொடர்ச்சி 35-ம் பக்கம்

# தண்ணிப் பானை ஜாக்கிரதை





படிப்பகம்

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே!**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: 27
- குரல்: 9-12, 1-2
- பிப். - ஜூலை 10

உள்நாடு: ரூ. 10.00
ஆண்டுச் சந்தா: ரூ. 150.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா ரூ. 750.00

*சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்*

இரா. சீனிவாசன்,
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை - 600 083.

தொலைபேசி: 044-23718706
9941175876

மின் அஞ்சல் முகவரி:
pukatn@gmail.com.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் மாலை 5 மணி வரை.

*அட்டை வடிவமைப்பு:*
ஸ்பார்ட்டகஸ்

# முள்ளிவாய்க்கால்-போபால்

1983 ஜூலையில் இலங்கையில் நடத்தப்பட்ட இனப்படுகொலைக்கும் 1984 போபால் நச்சுவாயு படுகொலைக்கும் நேரடித் தொடர்பு இல்லை. முள்ளிவாய்க்கால் முடிவுக்கும் போபால் நீதிமன்ற தீர்ப்புக்கும் இடையிலேயும் நேரடித் தொடர்பு இல்லை. விசவாயுப் படுகொலையை நடத்திய யூனியன் கார்பைடு தலைவர் ஆண்டர்சன் இந்தியாவிலிருந்து வழியனுப்பி வைக்கப்பட்டதற்கும், முள்ளிவாய்க்கால் படுகொலை நாயகன் ராஜபக்சேவுக்கு இந்தியாவில் வரவேற்பு வழங்கப்பட்டதற்கும் கூட நேரடித் தொடர்பு இல்லைதான். எனினும் இவ்விரு பிரச்சினைகளிலும் இந்திய அரசும், ஆளும் வர்க்கமும் கடைப்பிடித்த அணுகுமுறைகளில் ஒரு தொடர்பு இருக்கத்தான் செய்கின்றது.

போபால் நச்சுவாயுவால் உயிரிழந்தோரின் குடும்பத்தினரும், ஊனமடைந்த மக்களும் நிவாரணம் கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க முடியாமல் அவசரமாக தலையிட்டு சட்டம் இயற்றித் தடுத்த இந்திய அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் பெற்றுத்தரும் பொறுப்பைத் தானே ஏற்றுக்கொள்வதாக வாக்கும் கொடுத்தது. தற்போது போபால் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கண்டு அதிர்ச்சியுற்றதைப் போல நடிப்பவர்கள் அனைவரும் இப்படியொரு தீர்ப்பை வரவழைப்பதற்காகத்தான் எல்லா முனைகளிலிருந்தும் காய் நகர்த்தினார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. மத்திய, மாநில அரசுகள், சி.பி.ஐ, உச்சநீதி மன்றம் ஆகிய அனைவரும் இணைந்து நடத்திய நாடகத்தின் முடிவுதான் 26 ஆண்டுகளுக்குப் பின் வெளிவந்திருக்கும் இந்தத் தீர்ப்பு.

1983 ஜூலையில் சிங்கள இனவெறி அரசு நடத்திய ஈழத்தமிழினப் படுகொலைக்கு எதிராக தமிழகம் கொந்தளித்தபோது, பல போராளிக் குழுக்கள் ஈழ மண்ணில் தோன்றியபோது. போபாலைப் போலவே இதிலும் தலையிட்ட இந்திய அரசு, ஈழத்தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை பெற்றுத்தரும் பொறுப்பைத் தானே ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தது. போராளிக் குழுக்களை இந்திய உளவுத்துறையின் கைப்பாவைகளாகச் சீரழித்து, பின்னர் ஈழத்தை ஆக்கிரமித்து, முடிவில் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவத்துக்கு களத்தில் உடன் நின்று வழிநடத்தியது இந்திய அரசு. ஜூலை படுகொலை நடந்த 26 ஆண்டுகளுக்குப் பின், அம்மக்களின் போராட்டம் முள்ளிவாய்க்கால் படுகொலையும், முட்கம்பி வேலிக்குப் பின்னால் 3 இலட்சம் ஈழத்தமிழ் அகதிகளும் என்று போபாலைப் போலவே ஒரு துயரமாக முடிந்தது

ஆண்டர்சனை அன்று சிறப்பு விமானத்தில் வழியனுப்பி வைத்தது முதல் வழக்கைச் சீர்குலைத்தது வரையிலான நடவடிக்கைகளுக்குப் பின்புலமாக இருந்த காரணமும், இன்று கிரிமினல் வழக்குகளில் கைது செய்யப்பட வேண்டிய டக்ளஸ் தேவானந்தாவுடனும், இனப்படுகொலையாளன் ராஜபக்சேயுடனும் மன்மோகன் சிங்கை குலுக்குவதற்கான காரணமும் வேறு வேறல்ல. அமெரிக்க மேலாதிக்கத்தின் அடியாளாகவும், தெற்காசியப் பிராந்திய வல்லரசாகவும் நிலைபெறத் துடிக்கும் இந்தியத் தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவத்தினுடைய வெறியின் வெளிப்பாடுதான் இந்த நடவடிக்கைகள். 1983 இலிருந்து தில்லியில் 9 அரசுகள் மாறிமாறி வந்திருந்த போதும், ஒன்றுபட்ட இலங்கை என்ற கொள்கைதான் எல்லா அரசுகளையும் வழிநடத்தி வருகிறதென்று ப.சிதம்பரம் சமீபத்தில் கூறியிருப்பதை, போபால் படுகொலைக்கும் பொருத்தலாம். யூனியன் கார்பைடு நிறுவனத்தை விடுவிப்பதிலும் கூட 9 அரசுகளும் ஒத்த கருத்துடன்தான் செயல்பட்டிருக்கின்றன. இறுதிப் போரின் போது கொல்லப்பட்ட இந்திய இராணுவ அதிகாரிகளின் பிணங்கள் இந்திய அரசின் போர்க்குற்றத்தை அம்பலப்படுத்தியது போலவே, யூனியன் கார்பைடுக்கு எதிரான எல்லா வழக்குகளையும் முடித்துக் கொள்வதன் மூலம் அமெரிக்க முதலீடுகளை பெருமளவில் ஈர்க்கலாமென்று ஆலோசனை அளித்த ப.சிதம்பரம், கமல்நாத் ஆகியோரின் குற்றமும் இப்போது அம்பலமாகியிருக்கின்றது.

தமது சுரண்டல் ஆதிக்க நலனுக்காக சொந்த நாட்டு மக்களில் சுமார் 25,000 பேரின் உயிரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பலிபீடத்தில் காணிக்கையாகச் செலுத்துவதற்கும் தயங்காத இந்திய ஆளும் வர்க்கத்தின் இரக்கமின்மைக்கும், இலங்கையின் மீது தனது விரிவாதிக்கக் கால்களைப் பதிப்பதற்காக முள்ளிவாய்க்கால் படுகொலையை முன்நின்று நடத்திய அதன் கொலைவெறிக்கும் நேரடித் தொடர்பு இல்லையா என்ன? போபால் வேறு, முள்ளிவாய்க்கால் வேறுதான்; ஆண்டர்சன் வேறு, ராஜபக்சே வேறுதான்; விமானமும், சிவப்புக் கம்பளமும் கூட வெவ்வேறு பொருட்கள் என்பது உண்மைதான். எனினும் இரண்டிற்கும் பொருள் ஒன்றுதான்.

www.padippakam.com

## செம்மொழி மாநாடு:

# கருணாநிதி தமிழுக்கு செலுத்தும் இறுதி மரியாதை!

கோவையில் நடக்க இருக்கும் உலகத்தமிழ் செம்மொழி மாநாடு தமிழ்நாட்டின் இப்போதைய முக்கிய மான செய்திகளில் ஒன்று. துணை முதல் வரும் ஏனைய அமைச்சர்களும் தொடர்ந்து கோவையை பார்வையிட்டு வருகிறார்கள். இது கருணாநிதியின் வாழ்நாள் கனவு என்பது போன்ற ஒரு கருத்து எல்லா அச்சு ஊடகங்களாலும் உமிழப்படுகிறது.

கோவை மக்கள் அகலமாக்கப் படும் சாலைகளைப் பற்றியும் புதைந்து போன வீடுகளைப் பற்றியும் பேசுகிறார் கள். அமைச்சர்கள் கோவைக்கு வரப் போகும் உள்கட்டமைப்பு வசதிகளைப் பற்றி பெருமை பேசுகிறார்கள். பொது வாக கவனிக்கவேண்டிய செய்தி யாதெ னில் ஒருவரும் தமிழைப் பற்றி மறந் தும்கூட பேசுவதில்லை.

தொன்னூற்று மூன்றாம் வருடம் தஞ் சாவூரில் நடந்த எட்டாவது உலகத்தமிழ் மாநாட்டின்போது நான் எட்டாம் வகுப்பு மாணவன். அப்போது எனக்கி ருந்த அறிவுக்கு மாநாடு என்றால் அதில் என்ன செய்வார்கள் என்பது பற்றி எந்த ஆர்வமும் எழவில்லை. ஊரைச் சுற்றி போடப்பட்ட சாலைகளும் ஒரு மிதவைப்பாலமும் ஒரு ரூபாய்க்கு போடப்பட்ட பொன்னி அரிசி சாதமும் மட்டுமே நான் விவாதிக்கப் போதுமா னதாக இருந்தது.

இப்போது ஒட்டுமொத்த தமிழ்நா டும் அதே மனோநிலையில் இருப்பதா கத் தோன்றுகிறது. அன்றைய தமிழ் மாநாட்டின்போது ஜெயலலிதாவின் கட் அவுட்டுக்கள் தஞ்சை நகரெங்கும் பய முறுத்தின. இப்போது அதே நிலைதான் நீடிக்கிறது. கருணாநிதி ஸ்டாலினின் மண்டைகளைப் பார்க்காமல் நீங்கள் இங்கு கால் கிலோமீட்டர்கூட பிரயா ணம் செய்ய முடியாது, அத்தனை பேனர்கள் வீதிகளை ஆக்கிரமித்திருக் கின்றன.

ஈழத்துப் பேரழிவுக்குப் பிறகு மக் கள் அந்த சோகத்திலிருந்து மீளாத தரு ணத்தில் கருணாநிதியால் இந்த மாநாட் டின் அறிவிப்பு வெளியிடப்பட்டது. உல கத் தமிழாய்வு மன்றத்தின் ஒப்புதலில் லாமலே உலகத்தமிழ் மாநாடு என்ற அறிவிப்பு வெளியானது. அந்த நிறுவ னத்தின் தலைவர் நெபுரு கராஷிமா ஒரு மானம் மரியாதை உள்ள ஒரு ஆள் போலிருக்கிறது அதனால் கருணாநிதி யின் 'தேவையை' அவரால் ஏற்க இயல வில்லை. நீண்டகாலமாக தி.மு.க.வின் தலைவராக இருப்பதால் உலகில் சில மானஸ்தர்களும் இருக்கக்கூடும் என்பது அவருக்கு தோன்றவில்லை போலும்!

நெபுரு கராஷிமாவால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட பிறகு உலகத்தமிழ் செம்மொழி மாநாடாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இம் மாநாடு கருணாவின் தனிப்பட்ட நோக் கங்களுக்காக திட்டமிடப்பட்டது என்ப தற்கான ஆதாரங்கள் இந்த புள்ளியிலி ருந்தே கிடைக்கத் துவங்குகின்றன.

அதன் பிறகு சட்டமன்றத்தில் பேரா சிரியர் அன்பழகன் உலகத்தமிழாய்வு மன்றம் செத்துவிட்டது என்று அறிவித் தார். ஈழத்து படுகொலைகளின் சோகம் அகலாத சூழலில் இந்த மாநாடு தேவையா என்று கேள்வி எழுப்பப்பட்ட போது கனிமொழி சொன்னார் ' மாநாட் டில் நமது ஒற்றுமையை உலகுக்கு காட் டுவதன் மூலம் நாம் ஈழத்தமிழருக்காக இன்னும் அழுத்தமாக குரல் கொடுக்க லாம்'. ஒன்று மட்டும் உறுதி, இன்றைய ஊடக ஆதரவுச் சூழலில் கருணாநிதி முகச்சவரம் செய்துகொள்வதுகூட ஈழத் தமிழர் நலனுக்காகத்தான் என்று கனிமொழியால் கூசாமல் சொல்லிவிட முடியும்.

சட்டமன்றத் தேர்தலை விரைவாக நடத்தும் எண்ணத்திலிருந்த கருணா இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டின் துவக்கத்தில் இம்மாநாட்டை நடத்தத் திட்டமிட்டார். அறிஞர்கள் ஆய்வுக்கட் டுரை சமர்ப்பிக்க இவ்வளவு குறுகிய காலம் போதாது என்று என்று கோரிய தன் பிறகு மாநாடு ஜுன் மாதத்துக்கு தள்ளி வைக்கப்பட்டது. முத்தமிழ் செக் யூரிட்டிக்கு (காவலருங்க) ஆய்வுக்கட் டுரை என்பது ஜெகத்ரட்சகனுடைய சொறிந்துவிடும் வாழ்த்துரையையைப் போல எளிமையானதான தோன்றி யதை என்னவென்று சொல்வது?

தமிழை ஒழித்துக்கட்டும் முயற்சி ஏதோ ஜெயலலிதா காலத்தில் துவங்கி கருணாநிதி காலத்தில் நிலை பெற்றதாக பலர் கருதுகிறார்கள் - சில தமிழறிஞர் கள் உட்பட. தமிழ் மொழி காமராஜர் அண்ணாதுரை காலம்தொட்டே அரசி னால் கைவிடப்பட்ட ஒன்றாகவே இருக் கிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் தான் அண்ணாதுரையை அரியாசனத் தில் அமர்த்தியது. தமிழின் வளர்ச்சிக்கு அவர் செய்தது என்ன? இன்னும் சொல் லப்போனால் இந்தி எதிர்ப்புப் போராட் டத்தில் அவர் மாணவர்ளை காட்டிக் கொடுக்கும் வேலையைத்தான் செய் தார்.

லட்சக்கணக்கிலான தமிழ் மக்களை மட்டுமே கொண்டிருக்கிற இலங்கை யில் பொறியியலும் மருத்துவமும் தமி ழில் கற்றுத்தரப்படும்போது இதற்கான முதல் முயற்சிகூட அண்ணா காலத்தில் செய்யப்படாதது ஏன்? 1968ல் அண்ணா துரையால் நடத்தப்பட்ட இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டில் ஏராளமான சிலைகள் சென்னையில் திறக்கப்பட்டன அலங்கார ஊர்திகள் மாநாட்டில் ஊர்வ லம் சென்றன, வேறென்ன நடந்ததென் றால் யாருக்கும் தெரியாது. நாடகத்

•••

**இது கருணாநிதி தனது ஓய்வுக்கு முன்பு சர்வதேச அளவில் நடத்திக்கொள்ள விரும்பும் ஒரு பாராட்டுவிழா முயற்சி. தான் விரும்பியது யாவையும் உடனே கிடைக்கவேண்டும் என்று விரும்பும் பணக்கார இளைஞர்களைப் போல கருணாவும் தன் வாழ்நாள் கனவுகளை தனது ஆட்சிக்குள் அல்லது ஆயுளுக்குள் செய்துகொள்ள விரும்புகிறார்.**



படிப்பகம்

www.padippakam.com




துறையில் இருந்தவர் என்பதால் அரங்கம் அமைப்பதைத் தவிர வேறெதையும் அவரும் செய்யவில்லை.

அதன் நீட்சியாக கருணாநிதியும் மொழிக்கு அவர் செய்யப்போகும் சிறப்பு பற்றி ஒரு எழவும் பேசியதாகக் காணோம் எப்போதும் மாநாட்டுப் பூங்காவில் தொடங்கி அரசுக் கழிப்பிடம் கட்டுவது வரையிலான கட்டுமான விவகாரங்களைப் பற்றித்தான் ஆய்வுக்கூட்டம் நடத்துகிறார். மாநாட்டுப் பாடலை கருணாநிதி எழுத ஏ.ஆர்.ரகுமான் இசையமைக்க கவுதம் மேனன் இயக்கியிருக்கிறார். நல்லவேளையாக நமீதா நடனமாடாத காரணத்தால் தமிழினம் தப்பிப் பிழைத்தது.

அண்ணாதுரை காலத்தில் துவங்கிய ஜனரஞ்சகமான மாநாடு எனும் பழக்கம் இப்போது கருணாநிதியின் கதை வசனம் எழுதப்பட்ட படங்களைப் போல சகிக்க முடியாததாக வளர்ந்திருக்கிறது. மொழியைக் காப்பதற்கு ஏதாவது செய்பவர்தானே அதை வளர்ப்பதற்கும் தகுதியுடையவராவார்? கருணா தமிழைக் காப்பதற்கு என்ன முயற்சியை இதுவரை எடுத்திருக்கிறார்?

தமிழில் கலைச்சொற்களை உருவாக்குவது, மற்ற மொழி அறிவியல் புத்தகங்களை தமிழாக்கம் செய்வது (இவை இப்போதும் சீனா ஜப்பான் நாடுகளில் மின்னல் வேகத்தில் செய்யப்படுகின்றன) ஆகியவற்றுக்கான முன்முயற்சிகள் மயிரளவுகூட தமிழக அரசுகளால் மேற்கொள்ளப்படவில்லை. தமிழின் தொன்மையில் நான்கில் ஒரு பங்குகூட இல்லாத கன்னட மொழியின் இலக்கியங்கள் மலிவுப்பதிப்பாக கர்நாடக அரசால் மக்களுக்குத் தரப்பட்டன. இங்கு அதுபோன்ற முயற்சிகள் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

தாய்மொழிக் கல்வியை அரசுப் பள்ளிகள் மட்டுமே நடத்த முடியும். பொதுவாகப் பார்க்கையில் அரசுப்பள்ளிகளது தரம் குறைவது என்பது எதேச்சையானது அல்ல. இது பல ஆண்டுகளாக திட்டமிட்ட வகையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு வகையில் அரசின் கல்விச் செலவினத்தை குறைக்கவும் இன்னொருபுறம் தனியார் வசம் கல்வியை ஒப்படைக்கவுமே அரசு விரும்புகிறது. இப்போது அரசு நிர்ணயம் செய்த கல்விக்கட்டணத்தை ஏற்க மறுத்து பள்ளிகளை திறக்க மாட்டோம் என்று அரசை மிரட்டும் தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு சொல்வது என்ன? நாங்கள் இல்லாவிட்டால் பின்னாளில் தரமான கல்வி பெற்றவர்களே தமிழ்நாட்டில் இருக்க மாட்டார்கள் என்கிறது.

ஆயிரக்கணக்கான பள்ளிகளை நடத்தும் அரசுக்கு இதைவிட பெரிய அவமானம் இருக்க முடியுமா? ஓராண்டுக்கு முன்பு கல்வியாளர் வசந்திதேவியால் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்வித்தரம் மிக மோசமானதாக இருக்கிறது என்று முடிவு வந்திருக்கிறது. ஐந்தாம் வகுப்பு பூர்த்தி செய்த அரசுப் பள்ளி மாணாக்கர்கள் எளிமையான வாக்கியங்களை அமைக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ தெரியாதிருக்கிறார்கள் என்கிறது அவ்வறிக்கை.

பெரும்பாலான கிராமப்புற பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகள். நிர்வாகப் பணியையே செய்யத் திணறும் ஆசிரியரால் எப்படி ஐந்து வெவ்வேறு வகுப்பு மாணவர்களுக்கு பாடம் நடத்த முடியும்? இப்படியான சூழலில் நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிக்கு வரும் மாணவர்கள் அந்தப் பாடச்சுமையை எப்படி எதிர்கொள்வார்கள்? பெரும் சதவிகிதமான மாணவர்கள் பன்னிரெண்டாம் வகுப்பு முடிவதற்குள் படிப்பிலிருந்து விலகுகிறார்கள். அரசும் அதையே விரும்புகிறது. ஏழைகள் எல்லோரும் படிக்கத் துவங்கினால் பிற்பாடு அவர்கள் உயர்கல்வி கேட்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? ஆகவே அரசுப்பள்ளிகளை தரமில்லாமல் வைத்திருப்பது அரசுக்கு மிக அவசியம்.

இந்த ஆண்டு +2 தேர்வில் மிக அதிக தேர்ச்சி விழுக்காடு காட்டிய விருதுநகர் மாவட்டத்தில் ஒரு அரசுக் கல்லூரிகூடக் கிடையாது. கேட்டால் சிறிய மாவட்டம் அதனால் அரசுக் கல்லூரி அமைக்க முடியாது என்கிறார் உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி. ஆனால் அங்கு ஏறத்தாழ இருபது தனியார் கல்லூரிகள் இருக்கின்றன. இப்படி வறிய மக்கள் போகக்கூடிய ஒரே இடமான அரசுக் கல்லூரிகள் இல்லாத பட்சத்தில் ஏழைப் பெற்றோர்கள் எந்த நம்பிக்கையில் பள்ளிக்கு தம் பிள்ளைகளை அனுப்புவார்கள்?

மற்றொரு வாதம் தமிழ்வழிக் கல்வியை மக்கள் விரும்புவதில்லை என்பது. இது ஏறத்தாழ உண்மையே. ஆயினும் மக்களை அந்த சூழலுக்கு தள்ளியவர்கள்தான் தமிழ்நாட்டை நாற்பதாண்டுகளாக ஆள்கிறார்கள். இவர்கள்தான் ஆளுக்கொருமுறை தமிழ் மாநாட்டை நடத்தினார்கள் மற்றும் நடத்துகிறார்கள். மருத்துவம் மற்றும் பொறியியல் உட்பட எந்த ஒரு உயர்கல்வியும் தமிழில் இல்லாததால் மக்கள் எல்லோரும் இயல்பாகவே ஆங்கிலவழிக் கல்விதான் சிறந்தது என்று முடிவெடுக்கவே செய்வார்கள்.

ஒருவேளை தமிழ் வழியிலேயே தமது பிள்ளைகளை படிக்க வைக்க விரும்புபவர்களுக்கு இங்கு போதுமான பள்ளிகளும் கிடையாது. ஆக



படிப்பகம்

www.padippakam.com




ஏழை மக்களாக இருந்தாலும் சரி தமிழ் வழியில் தம் பிள்ளைகளை படிக்க வைக்க விரும்பும் நடுத்தரவர்க்க மக்களாக இருந்தாலும் சரி அவர்கள் ஏமாற்றத்துக்கு ஆளாவது உறுதி. இப்படி சிறுகச்சிறுக மக்கள் தமிழ் வழிக் கல்வி மீது அலட்சியத்தை உருவாக்கிய அரசுதான் இப்போது செம்மொழி மாநாட்டை நடத்துகிறது.

இப்போதும் ஆயிரக்கணக்கிலான ஆசிரியர் பணியிடங்கள் தமிழ்நாட்டில் காலியாக இருக்கின்றன. அதில் மற்ற பாடங்களுக்கு நிரப்பப்படும் அளவுக்கு தமிழாசிரியர்கள் நிரப்பப் படுவதில்லை அல்லது நிரப்பப்படு வதே இல்லை. தமிழை முதன்மைப்பாட மாக இல்லாமல் ஒரு பாடமாக படித்த வர்கள் மட்டுமே தமிழாசிரியர்களாக தற்போது பணியாற்றுகிறார்கள். தமிழ் மொழியை உயர்கல்வியாக படித்த மாணவர்கள் மாநாட்டு அறிவிப்பின் போது மேற்கூறிய காரணத்தைச் சொல்லி தமிழ் மாநாட்டின்போது தற் கொலை செய்துகொள்ளப் போவதாக ஒரு போராட்டத்தை அறிவித்தார்கள். அரசும் இதை கண்டுகொள்ளவில்லை, கருணாவின் தமிழுக்கான வாரிசு கனி மொழியும் இதைக் கண்டுகொள்ள வில்லை. அப்போது ஃபேஷியல் செய்துகொள்ளப் போய்விட்டாரா என்று தெரியவில்லை. ஆக தமிழ் வழி யில் படிக்கவும் வாய்ப்பு கிடையாது படித்தவனுக்கும் வாய்ப்பு கிடையாது.

இந்தப் பின்புலத்திலிருந்துதான் நாம் உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டை அணுகவேண்டும். தமிழ் மொழியை இந்தத் தலைமுறையோடு தலைமுழுக வைக்கும் காரியங்கள் முழு வீச்சில் நடக்கின்றன. பிரந்தியமொழி யில் ஒரு வார்த்தைகூட கற்காமல் பட்ட மேற்படிப்புவரை கற்க முடியும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். பள்ளிகளில் தமிழ் கட்டாயம் எனும் முந்தைய திமுக அரசின் சட்டம் என்னவானது என்றே தெரியவில்லை.

மருத்துவப் பட்ட மேற்படிப்புத் தேர்வை தமிழில் எழுதி படாதபாடுபட் டார் மருத்துவர் ஜெயசேகர், அது எப் படி முடியும் என எள்ளி நகையாடியவர் தி.மு.க.வின் அப்போதைய தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்க்குடிம கன். இப்போதும் தமிழ் மாநாட்டுப் பணிகள் தொடர்பாக பத்திரிக்கை யாளர்களுக்கு அனுப்பப்படும் அறி விப்புக்களில் பல ஆங்கிலத்தில் இருப்ப தாக தினமலரே சொல்கிறது. மாநாடுக் காக துவங்கப்பட்ட வலைதளம் பல மாதங்களாக முன்னேற்றமில்லாமல் கிடந்தது. இம்மாநாடு ஒரு சதவிகிதம் கூட தமிழுக்காக நடத்தப்படவில்லை என்பதற்கு இதைவிட வேறு சான்றுகள் தேவையில்லை.

எத்தனை சான்றுகளை கொட்டினா லும் இக்கட்டுரை முடியாது. இது கரு ணாநிதி தனது ஓய்வுக்கு முன்பு சர்வ தேச அளவில் நடத்திக்கொள்ள விரும் பும் ஒரு பாராட்டுவிழா முயற்சி. தான் விரும்பியது யாவையும் உடனே கிடைக்கவேண்டும் என்று விரும்பும் பணக்கார இளைஞர்களைப் போல கரு ணாவும் தன் வாழ்நாள் கனவுகளை தனது ஆட்சிக்குள் அல்லது ஆயுளுக் குள் செய்துகொள்ள விரும்புகிறார். கட் சிக்கு கிடைக்கும் கட்டுமான கமிஷனை யும் கோவை வட்டாரத்தில் திமுகவை வலுப்படுத்தும் நோக்கத்தையும் இதில் இணைத்ததில்தான் கருணாநிதியின் சாணக்கியத்தனம் இருக்கிறது. மற்றபடி இது தமிழுக்காக செய்யப்படும் முயற்சி என்றால் அதை திமுககாரன்கூட நம்ப மாட்டன். ஆறு மாதத்தில் வீணாகப் போகிற சாலைகளும் ஜூலை மாதத்தி லிருந்து கவனிப்பாரில்லாதுபோகும் பூங்காக்களுமே கோவை மக்களுக்கு மிச்சமாகப் போகிறது.

சரி நம் மொழியைக் காக்க என்ன தான் செய்வது என்று கேட்கிறீர்களா? அது ஒன்றும் அவ்வளவு சிரமமான தில்லை. மொழி எப்போதும் பாமர மக் களால்தான் காப்பாற்றப்படுகிறது. இன்று உலகை ஆள்வதாக சொல்லப் படும் ஆங்கிலம் பேசுவது ஒரு காலத் தில் இங்கிலாந்திலேயே கவுரவக்குறை வாக கருதப்பட்டது. இங்கிலாந்தின் அன்றைய பிரபுக்கள் குடும்பங்களிலும் ஏன் பாராளுமன்றத்திலும்கூட பிரெஞ்சு மொழிதான் பயன்படுத்தப்பட்டது (தேவாலயங்களில் லத்தீன்). நிலப்பிர புத்துவம் வீழ்த்தப்பட்ட பிறகுதான் ஆங் கிலமே அங்கு தலையெடுத்தது. கோடிக் கணக்கான மக்களுக்கு அன்றாட உணவே நிச்சயமற்றதாகிவிட்ட சூழ் நிலையில் நாம் நம் மொழி குறித்து மட்டும் கவலைப்பட்டால் அது ஒரு சத விகிதம்கூட பலன்தராது. இனத்தைப் பற்றி கவலைப்படாமல் மொழியை மட்டும் நேசிப்பது அயோக்கியத்தனம். மொழியை கண்டுகொள்ளாமல் இனத் தைப் பற்றி கவலைப்படுவதாகச் சொல் வது அவ்வாறானதே.

ஏழ்மை, சுரண்டல், சாதிவெறி மற் றும் மொழிப்புறக்கணிப்பு யாவையும் ஒன்றோடொன்று தொடர்புடையவை. இதில் ஒன்றை விடுத்து மற்றொன்றை நம்மால் சரி செய்யவே முடியாது. தமிழ் சினிமாவுக்கு தமிழில் பெயர் வைத்தால் வரிவிலக்கு தரும் இழிநிலைக்கு நாட்டை தள்ளிய கருணாநிதியால்தான் மொழியைக் காப்பாற்ற முடியும் என்று இனியும் சுப.வீரபாண்டியன் வகைய றாக்கள் சொன்னால், அழுத்தமாக பதில் சொல்லுங்கள் 'என் மொழி கருணாநிதி யால் காப்பாற்றப்படுவதைவிட அழிந்துபோவதே மேல், ஏனெனில் என் மொழியின் கவுரவம், அது பிழைத்தி ருப்பதைக் காட்டிலும் முக்கியமானது'.

**• வில்லவன்**

**(செம்மொழி மாநாட்டுக்கு முன் எழுதப்பட்ட கட்டுரை)**



படிப்பகம்

www.padippakam.com

## செயற்கை உயிர்:

# படைப்புரிமை இழந்த பழைய கடவுளும் காப்புரிமை கோரும் புதிய கடவுளரும்!

ஒரு நுண்ணுயிரின் (பாக்டீரியா) மரபணுக் குறியீடுகளுக்குரிய (டி.என்.ஏ) வேதியியல் மூலக்கூறுகளை செயற்கை முறையில் உருவாக்கி வைத்துக் கொண்டு, வேறொரு பாக்டீரியாவிலிருந்து அதன் மரபணுக்களை நீக்கிவிட்டு, எஞ்சியிருக்கும் அதன் கூட்டுக்குள் அவற்றை உட்செலுத்தி செயற்கை முறையில் திருத்தியமைக்கப் பட்ட புதிய உயிர்தான் சிந்தடிகா.

சிந்தடிகா என்பது இயற்கை தனது இயக்கத்தின் போக்கில் தானே படைத்த புதியதொரு உயிரல்ல; ஏற்கெனவே இருக்கின்ற ஒரு உயிரின் மரபணுவை பிரதி எடுத்து குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட டாலி ஆட்டினைப் போன்ற நகலும் அல்ல. மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி அல்லது தக்காளியைப் போன்றதும் அல்ல. இயற்கை படைத்த கூட்டுக்குள் நுழைக் கப்பட்டிருக்கும் செயற்கை என்று இதைச் சொல்லலாம்.

வேர்க்கடலையின் பருப்பை நீக்கி விட்டு தோலுக்குள்ளே செலுத்தப்பட்ட முந்திரிப் பருப்பைப் போன்றது இந்தப் படைப்பு. இந்த முந்திரிப்பருப்பு முந்திரியின் மரபணுவிலிருந்து நேரிடையாகப் படைக்கப்பட்டதல்ல. அந்த மரபணுவின் வேதியியல் மூலக்கூறுகளை சோதனைச்சாலையில் ஒன்றிணைத்து அதன் மூலம் உருவாக்கப்பட்டது. அந்த அளவில் இது உயிரற்ற சடப்பொருளிலிருந்து உருவாக்கப்பட்ட உயிர்.



ஏங்கெல்ஸ்

மைகோபிளாஸ்மா மைகோய்டஸ் என்ற பாக்டீரியாவின் குரோமோசோம் அமைப்பை கணினியின் உதவியுடன் பகுத்தாராய்ந்து, அவற்றின் மரபணுத் தொகுப்பை (ஜெனோம்) சுமார் 10 இலட்சம் வேதியியற் குறியீடுகளாக மொழிபெயர்த்தனர் கிரேக் வென்டர் குழுவினர். பின்னர் அந்த வேதியியற் குறியீடுகளின் அடிப்படையில் வேதிப் பொருட்களை ஒன்றிணைத்து, செயற்கையான மரபணுத் தொகுப்பை (ஜெனோம்) உருவாக்கினர். பின்னர் மைகோபிளாஸ்மா காப்ரிகோலம் என்ற பாக்டிரியாவிலிருந்து அதன் மரபணுத்தொகுப்பை 'சுரண்டி' எடுத்து விட்டு, எஞ்சியிருந்த கூட்டுக்குள் (அணுவின் உட்கரு) தாங்கள் உருவாக்கிய செயற்கையான மரபணுத் தொகுப்பில் சில மாற்றங்களும் செய்து உட்செலுத்தினர். இந்தப் புதிய கூட்டிற்குள் குடியேற்றப்பட்ட மைகோபிளாஸ்மா மைகோய்டஸ் என்ற பாக்டீரியாவின் வேதியியற் பொருட்கள் கூட்டில் பொருந்தி, ஒரு புதிய உயிராக இயங்கத் தொடங்கியது.

செயற்கையாக ஒரு மரபணுத் தொகுப்பை உருவாக்கும் பொருட்டு அதன் வேதியல் சேர்க்கையைக் கண்டறிதல்; அதனை வேறொரு செல்லில் உட்செலுத்தி, அவ்வாறு உட்செலுத்தப் பட்ட (செயற்கையான) மரபணுத் தொகுப்பின் இயங்குமுறையை தனதாக்கிக் கொள்ளுமாறு புதிய செல்லுக்கு (அணு உட்கரு - கூட்டுக்கு) புரிய வைக்கத் தேவையான உயிரியல் மொழியைக் கண்டறிதல் - இவை இரண்டும்தான் வென்டர் குழுவினர் தீர்வு கண்ட பிரச்சினைகள்.

உடல் வேறு, உயிர் வேறு என்று கருதுகின்ற புராணங்களில் விவரிக்கப்

உயிர் என்பதை பொருள்முதல்வாதத்தின் எல்லைக்கு அப்பாற்பட்ட விடை காண முடியாத புதிராகச் சித்தரித்து வாதிட்டவர்களுக்கு இயற்கையின் இயக்கவியல் என்ற தனது -லில் (1886) எங்கெல்ஸ் பதில் அளித்தார். இயங்கியல் பொருள்முதல்வாதக் கண்ணோட்டத்தில் இயற்கை விஞ்ஞானம் அன்று கண்டிருந்த முன்னேற்றங்களின் துணை கொண்டு 'உயிர்' என்பதற்கு எங்கெல்ஸ் அளித்த அற்புதமான பொருள்முதல் வாத விளக்கம் அது.

''புரதப் பொருட்களின் இருத்தலின் பாங்கே உயிர்.... இரசாயன ரீதியாகப் புரதப் பொருள்களைத் தயாரிப்பது என்பது எப்போதாவது வெற்றி பெறுமெனில் அப்போது அவை உயிரின் இயல் நிகழ்ச்சியை நிச்சயமாகவே வெளிப் படுத்தும்...''

''.. மனது - பொருள் என்பதையும் மனிதன் - இயற்கை என்பதையும் உடல் - ஆத்மா என்பதையும் வேறுபடுத்தி எதிர்நிலைப்படுத்துகின்ற, பொருளற்ற, இயற்கைக்கு முரணான கருத்து இனிமென்மேலும் சாத்தியமில்லாமல் போகும்.''

''புரதப் பண்டங்களின் ஆக்கம் அறியப்பட்டவுடன் உயிருள்ள புரதத்தைத் தயாரிக்கும் வேலையில் இரசாயனவியல் இறங்கும். மிகச் சாதகமான சூழ்நிலைகளில் எதை இயற்கை ஒரு சில வான்கோள்களில் செய்து முடிக்கப் பத்து இலட்சக்கணக்கான ஆண்டுகள் பிடித்தனவோ, அதைப் பொழுது விடிவதற்குள் இரசாயனவியல் சாதிக்க வேண்டும் எனக் கோருவது ஒரு மந்திரவித்தையைக் கோருவதற்கு ஒப்பாகும்.''

1886-இல் எதனை மந்திர வித்தை என்று எங்கெல்ஸ் குறிப்பிட்டாரோ, அந்த மந்திர வித்தையைச் சாதிக்கும் திசையில் இரசாயனவியல் இன்று வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

•••

சிந்தடிகா - Synthetica. அமெரிக்காவின் கிரேக் வென்டர் என்ற விஞ்ஞானி தனது சோதனைக் கூடத்தில் மே 20, 2010 அன்று உருவாக்கியிருக்கும் புதியதொரு நுண்ணுயிரின் பெயர். செயற்கையாக உருவாக்கப்பட்ட உயிர் என்ற பொருள்படும் வகையில் சூட்டப் பட்ட பெயர். சடப்பொருள் வேறு, உயிர்ப்பொருள் வேறு; உடல் வேறு ஆன்மா வேறு என்று கூறி வரும் மதக் கோட்பாடுகள் மற்றும் பல கருத்து முதல்வாத கோட்பாடுகள் அனைத்தின் முகத்திலும் பூசப்பட்டிருக்கும் கரி - சிந்தடிகா.



படிப்பகம்

www.padippakam.com

படும் 'கூடு விட்டுக் கூடு பாய்தல்' என்ற புனைகதையை, நடைமுறையில் சாதித்துக் காட்டியிருக்கிறது இன்றைய அறிவியல். ராமசாமியின் உடலுக்குள் கோவிந்தசாமியை நுழைத்து, இனி கோவிந்தசாமியாகவே நடந்து கொள்ள வேண்டும் என்று ராமசாமியின் உடலுக் குப் புரிய வைக்கப்பட்டிருக்கின்றது என்றும் இதனை எளிமைப்படுத்திக் கூறலாம். ஆனால் அணு உட்கரு (உடல்) என்பது வெறும் கூடு அல்ல, மர பணு (டி.என்.ஏ) என்பதே உயிரும் அல்ல. இவற்றின் இயங்கியல் ரீதியான சேர்க்கையும், அவ்வாறு சேர்ந்திருத்த லின் பாங்குமே உயிர்.

தனக்கு வேண்டிய ஆற்றலை இயற் கையிலிருந்து தானே கிரகித்துக் கொள் வதையும், தன்னைத்தானே மறு உற் பத்தி செய்து கொள்வதையும் உயிரின் இலக்கணமாகக் கூறுகிறது அறிவியல்.

நான் உருவாக்கியது'' என்று அந்த உயி ரிலேயே கையெழுத்தும் இட்டு வைத்தி ருக்கும் ஒரு புதிய உயிரினம் இது. 'பற வையைக் கண்டான் விமானம் படைத் தான்' என்ற வகையிலான 'போலச்செய் தலில்' தொடங்கிய மனிதன், பறவை யைக் கண்டான் பறவையைப் படைத் தான் என்பதை நோக்கியும், இதுவரை இல்லாதொரு புதிய பறவையையும் படைப்பான் என்பதை நோக்கியும் எடுத்து வைத்திருக்கும் அடி இது.

இந்தக் குறிப்பிட்ட ஆய்வுக்கு மட் டும் பத்து ஆண்டுகளும் 40 மில்லியன் டாலர்களும் செலவாகியிருக்கின்றன. கணினித் தொழில்நுட்பமும், அவற்றின் கணக்கிடும் வேகமும் பன்மடங்கு வளர்ந்திருப்பதனால்தான், பல இலட் சம் ஆண்டுகள் எடுத்துக் கொண்டு இயற்கை உருவாக்கியிருக்கும் இந்த நுண்ணுயிரின் கட்டமைப்பை, ஒரு பத்து

•••

''.. மனது – பொருள் என்பதையும் மனிதன் – இயற்கை என்பதையும் உடல் – ஆத்மா என்பதையும் வேறுபடுத்தி எதிர்நிலைப்படுத்துகின்ற, பொருளற்ற, இயற்கைக்கு முரணான கருத்து இனி மேன்மேலும் சாத்தியமில்லாமல் போகும்.''

•••

தன்னைத் தானே மறு உற்பத்தி செய்து கொண்டு பல்கிப் பெருகியதன் மூலம் இந்த இலக்கண வரையறையையும் நிறைவு செய்திருக்கின்றது சிந்தடிகா.

குரோமோசோம் என்பது மரபணுக் களால் ஆனது; மரபணுக்கள் டி.என்.ஏ, மற்றும் ஆர்.என்.ஏ.க்களால் ஆனவை; டி.என்.ஏ, ஆர்.என்.ஏ க்கள் புரதத்தினா லும், புரதங்கள் அமினோ ஆசிட்டுகளா லும் ஆனவை. அமினோ ஆசிட்டுகள் வேதிப் பொருட்களால் ஆனவை ($H_2NCHRCOOH$) என்பது ஏற்கெனவே அறியப்பட்ட அறிவியல் உண்மை. கிரேக் வென்டரின் குழு -ற்றுக்கு -று சதவீதம் வேதிப்பொருட்களைக் கொண்டே உயிரை உருவாக்கிவிடவில் லையெனினும், அந்தத் திசையை நோக்கி குறிப்பிடத்தக்க அளவில் அடி யெடுத்து வைத்திருக்கின்றது.

எப்படிப் பார்த்தாலும், இயற்கை தனது போக்கில் உருவாக்கியவை அல் லது இறைவனால் படைக்கப்பட்டவை என்று நம்பப்படும் பல்லாயிரம் கோடி உயிரினங்களுக்கு அப்பால், மனிதன் தன் சொந்தக் கையால் உருவாக்கி, ''இது

ஆண்டுகளில் மனிதனால் புரிந்து கொள்ள முடிந்திருக்கின்றது.

உயிரை செயற்கையாக உருவாக் கும் ஆய்வுகள் உலகெங்கும் நடந்து வருகின்றன. ஒரேகானில் உள்ள ரீட் கல் லூரியின் தத்துவத்துறைப் பேராசிரிய ரும், முற்றிலும் இரசாயனப் பொருட்க ளிலிருந்தே செயற்கை உயிரை உரு வாக்கும் ஆய்வில் ஈடுபட்டிருக்கும் புரோட்டோ லைஃப் என்ற இத்தாலிய நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகா ரியுமான மார்க் பெடோ, ''கடவுளின் ஏரியா என்று கருதப்படும் பகுதிக்குள் நாம் நுழைந்திருக்கிறோம். உயிர் என் பது மிகவும் வலிமையானது. நாம் நினைப்பதைச் செய்யும்படி ஒரு உயி ரைப் படைக்க முடியுமானால், எல்லா விதமான நல்ல காரியங்களையும் செய் யலாம். பொறுப்புடன் நடந்துகொள் ளும் பட்சத்தில் 'கடவுளின் வேலையை' நாம் மேற்கொள்வதில் தவறில்லை'' என்கிறார்.

கிரேக் வென்டரின் ஆய்வுக்கூடம், வேதிப்பொருட்களைக் கொண்டு தாங் கள் செயற்கையாக உருவாக்கிய மரப

ணுத்தொகுப்பினைக் குடியேற்ற, ஏற்கெ னவே உள்ள இன்னொரு பாக்டீரியா வின் கூட்டினைப் பயன்படுத்திக் கொண் டனர். மார்க் பெடோவின் ஆய்வுக் குழு வோ, மரபணுக்களைக் குடியேற்றும் கூடுகளை செயற்கையான முறையில் தயாரிக்க முயன்று கொண்டிருக்கின்றது. -ற்றுக்கு -று சதவீதம் வேதிப்பொருட் களிலிருந்தே உயிரை உருவாக்குவ தற்கு மேலும் பல ஆண்டுகள் ஆகலாம் என்றும் சில விஞ்ஞானிகள் கருதுகின்ற னர்.

•••

2500 ஆண்டுகளுக்கு முன்னால் கட வுள் கோட்பாட்டை முன்வைத்த பார்ப்ப னிய தத்துவஞான மரபினர், உலகாயத வாதிகளை (பொருள்முதல்வாதிகளை) பார்த்து, ''ஜடப்பொருளிலிருந்து, அந்த ஜடப்பொருட்களின் குணங்களைப் பெற்றிராத புதிய குணங்களைக் கொண்ட உயிர்ப்பொருள் என்பது எவ்வாறு உரு வாக முடியும்?'' எனக் கேள்வி எழுப்பி னர். ''ஜடப்பொருளான அரிசி புளிக்க வைக்கப்படும்போது போதை எனும் புதிய குணம் கொண்ட மதுவாக மாறுவ தைப் போல பஞ்சபூதங்களின் சேர்க்கை யில்தான் உயிர் உருவாகின்றது'' என்று அன்று நடப்பிலிருந்த அறிவின் வளர்ச் சிக்கு ஒப்ப கருத்துமுதல்வாதிகளுக்குப் பதிலடி கொடுத்தனர் பொருள்முதல்வா திகளாகிய சாருவாகர்கள்.

2500 -ற்றாண்டுகளில் அறிவியல் வெகுதூரம் வளர்ந்து விட்டது. எனினும் இன்றும் கூட பை பாஸ் சர்ஜரி செய்து கொண்டு, நேரம் தவறாமல் மாத்தி ரையை விழுங்கிக் கொண்டிருக்கும் பாதிரிகளும், முல்லாக்களும், சங்கராச் சாரிகளும் படுக்கையை விட்டு எழுந்தி ருக்காத நிலையிலும் கூட, ''என்னதான் இருந்தாலும் மனிதனால் ஒரு எறும் பைப் படைக்க முடியுமா? இறைவன் பெரியவன்'' என்று கூறி போலித் தன்ன டக்கத்துடன் ஏளனப் புன்னகையைச் சிந் துகிறார்கள்.

எனினும், செயற்கை உயிரியல் (synthetic biology) என்றொரு ஆய்வுத் துறையே உருவாகிவிட்ட இன்றைய நிலையிலும், சிந்தடிகா உருவாக்கப் பட்ட பிறகும், விஞ்ஞானிகள் யாரும் ஆணவம் கொண்டு திரியவில்லை. புதி யதைப் படைக்கும் முயற்சியில் ஈடுபட் டிருப்பவர்களுக்குத்தான் பழையதை ஆய்வு செய்வதும் கற்றுக்கொள்வதும் அவசியமானதாக இருக்கிறது. அந்த வகையில் செயற்கை உயிரைப் படைக்க முனைந்திருக்கும் விஞ்ஞானிகள்தான் இயற்கை படைத்திருக்கும் உயிர்களை



படிப்பகம்

www.padippakam.com

ஆய்வு செய்வதிலும் அளப்பரிய ஆர்வம் காட்டுகின்றார்கள். 400 கோடி ஆண்டுகளாக நடைபெற்றுவரும் பரிணாம வளர்ச்சியின் போக்கில் இயற்கை படைத்திருக்கும் உயிர்களையும், நுண்ணுயிரிகளையும், செல்களையும் (அணு) அவை பெற்றிருக்கும் ஆற்றலையும் வியப்புடன் விவரிக்கின்றார்கள்.

''நம் விரலை உள்ளே விட்டால் அந்தக் கணமே தசையும், நகமும், எலும்பும் கரைந்து காணாமல் போய்விடும் அளவிற்கான திராவகங்களிலும் உயிர் வாழக் கூடிய நுண்ணுயிரிகள், மனிதர்களைக் கொல்வதற்குத் தேவைப்படுகின்ற அணுக்கதிர் வீச்சைக் காட்டிலும் 1500 மடங்கு அதிகமான கதிர்வீச்சினால் தாக்கிச் சிதறடிக்கப்பட்ட பின்னரும், தன்னைத்தானே தைத்துக் கொண்டு உடனே தன்னை மறுஉற்பத்தியும் செய்து கொள்ளும் ஆற்றல் பெற்ற நுண்ணுயிரிகள், மனிதனும் விலங்குகளும் உறைந்தோ, உருகியோ, சிதறியோ, மூச்சுத் திணறியோ அழிந்து விடக்கூடிய பருவநிலைகளில் சர்வ சாதாரணமாக உயிர்வாழும் நுண்ணுயிரிகள் பல இயற்கையில் இருக்கின்றன. இயற்கையின் பல்லுயிர்ச் சூழல் குறித்து இதுவரை நாம் அறிந்திருப்பது ஒரு சதவீதம் கூட இல்லை என்பதே உண்மை. நாம் படைக்கவிருக்கும் செயற்கை உயிரிகள் என்னவிதமான பணிகளைச் செய்யும் ஆற்றல் பெற்றவையாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, அவற்றைக் காட்டிலும் பன்மடங்கு ஆற்றல் பெற்ற கோடிக்கணக்கான உயிரிகள் இயற்கையில் ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்றன'' என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

''இயற்கையின் மீது நமது மானுட வெற்றிகளை வைத்துக் கொண்டு நம்மை நாம் அளவு கடந்து தற்புகழ்ச்சி செய்துகொள்ள வேண்டியதில்லை... இயற்கையோடு சேர்ந்தவர்கள் நாம், அதன் நடுவில் நிலை வாழ்கிறோம்.. இயற்கையின் நியதிகளைக் கற்றுக் கொண்டு அவற்றைச் சரியாகப் பிரயோகிப்பதில், மற்றெல்லா உயிரினங்களைக் காட்டிலும் நமக்கு அனுகூலம் உள்ளது என்ற உண்மையில்தான் இயற்கையின் மீதான நமது ஆளுமை என்பதன் பொருள் அடங்கியுள்ளது'' என்றார் எங்கெல்ஸ்.

மதவாத அறிவிலிகளின் போலித் தன்னடக்கத்திற்கும் அறிவியலாளர்களின் தன்னடக்கத்திற்கும் உள்ள வேறுபாடு இதுதான். ''தன்னுடைய படைப்பைப் புரிந்து கொள்ளுவதற்கும், அதனை சிறப்பாக கையாள்வதற்குமான பரிசாக தேவன் மனிதனுக்கு அறிவை வழங்கியிருக்கிறான் என்பதற்கு இது (சிந்தடிகா) இன்னொரு நிரூபணம்'' என்று மிகவும் அற்பத்தனமான முறையில் கடவுளை முட்டுக்கொடுத்து நிறுத்த முயன்றிருக்கிறார் இத்தாலிய கத்தோலிக்க திருச்சபையின் கார்டினல் அஞ்சலோ பாக்னசோ.

''தன்னைக் கடவுளாகக் கருதிக் கொள்வதும், கடவுளுக்கே உரிய படைப்பாற்றலை ஏந்திச் சுழற்றுவதும் மனிதனை காட்டுமிராண்டித்தனத்தில் தள்ளிவிடும். படைப்பவன் ஒருவன் மட்டுமே - அவன்தான் இறைவன் என்பதை


கிரேக் வென்டர்

விஞ்ஞானிகள் ஒருக்காலும் மறந்து விடக்கூடாது'' என்றார் மோகேவெரோ என்றொரு பாதிரி. காட்டுமிராண்டித்தனத்தைப் பற்றிப் பேசும் யோக்கியதை கத்தோலிக்க திருச்சபைக்கு உண்டா என்பது ஒருபுறம் இருக்க, சிந்தடிகா குறித்த செய்தி வெளிவந்தவுடனே, 'அழித்தல்' தொழிலில் ஈடுபட்ட சங்கராச்சாரியும் கூட 'ஆக்கல்' தொழிலை பிரம்மனிடமிருந்து மனிதன் அபகரித்துக் கொண்டிருப்பது குறித்து தனது கவலையை வெளியிட்டிருக்கின்றார்.

செயற்கை உயிரின் ஆக்கத்தின் மூலம், கடவுள் உயிர் வாழ்வதற்கான வாய்ப்பை அறிவியல் மேலும் அடைத்து விட்டது. எனினும், கடவுள் கல்லறைக்குச் செல்ல மறுக்கிறார். காரணம், எந்த முதலாளித்துவம் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு மூலதனமிடுகின்றதோ, அதே முதலாளித்துவம் அறிவியலை தனது இலாப நோக்கத்துக்கான கருவியாகப் பயன்படுத்துவதன் மூலம், கடவுள் தொடர்ந்து உயிரோடிருக்க துணை செய்கின்றது.

தனது கொள்ளை இலாப நோக்கத்துக்காக இயற்கை முதல் மனிதர்கள் வரையில் எதையும், யாரையும் அழிக்கத் தயங்காத முதலாளி வர்க்கம் அறிவியலின் துணை கொண்டு நடத்தியிருக்கும் அழிவு வேலைகளைக் காட்டி, படைப்புப் பணியை கடவுளிடமிருந்து மனிதன் பறித்துக் கொண்டால் நேரக்கூடிய விபரீதங்களைக் காட்டி நம்மை மிரட்டுகின்றார்கள் மதவாதிகள். திருச்சபை கூறுவது போல அறிவியல் மனிதனிடம் சிக்கியிருக்கவில்லை. தம்மளவில் மனிதத்தன்மையை அகற்றியவர்களும், மனிதகுலத்திடமிருந்தும் அதனை அகற்ற விரும்புகிறவர்களுமான உலக முதலாளி வர்க்கத்திடம் சிக்கியிருக்கின்றது அறிவியல்.

அணு ஆயுதங்கள், இரசாயன ஆயுதங்கள், உயிரி ஆயுதங்கள், மரபணு மாற்ற விதைகள், புவி சூடேறுதல் மற்றும் இயற்கைப் பேரழிவுகளைத் தோற்றுவித்துள்ள உலக முதலாளி வர்க்கம், அறிவியலால் அகற்றப்பட்ட கடவுளை மீண்டும் அரியணையில் அமர்த்துகின்றது. மதவாதிகளின் அச்சுறுத்தல்களுக்கு அங்கீகாரம் பெற்றுத் தருகின்றது. இதன் விளைவாக, அறிவியலின் சாதனைகள் பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் தருவதற்குப் பதிலாக அச்சத்தையும் அவநம்பிக்கையையும் தோற்றுவிக்கின்றன. சிந்தடிகா - இதற்கு விலக்கல்ல.

•••

புதிய நுண்ணுயிரியை வடிவமைத்து உருவாக்குவதைச் சாத்தியமாக்கியிருக்கும் இந்த முன்னேற்றத்தின் பயனாக, தொற்று நோய்கள் மற்றும் ஆட்கொல்லி நோய்களுக்கான புதிய தடுப்பு மருந்துகளை உருவாக்கலாம். பிளாஸ்டிக் கழிவுகள் போன்ற அழிக்க முடியாத கழிவுகளைக்கூட தின்று செரிக்கும் திறன் கொண்ட நுண்ணுயிர்கள், கரியமில வாயுவை உறிஞ்சும் நுண்ணுயிரிகள், உயிரி எரிபொருளை (பயோ ஃப்யூவல்) தயாரிக்க உதவும் நுண்ணுயிரிகள் போன்ற பலவற்றையும் உருவாக்கலாம்.

அமெரிக்காவில் உள்ள மாசாசூசெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி நிறுவனம், வெவ்வேறு விதமான பணிகளைச் செய்யக் கூடிய சுமார் 2000 உயிரி உறுப்புகளின் டி.என்.ஏ குறியீடுகளைத்



படிப்பகம்

www.padippakam.com

(Bio Brick parts) பட்டியலிட்டுத் தொகுத்து வைத்திருக்கிறது. போல்ட், நட்டுகள், சக்கரங்கள், புல்லிகள், கியர்களை இணைத்து ஒரு எந்திரத்தை உருவாக்குவதைப் போல, இந்த உயிரி உறுப்புகளை இணைத்து விரும்பியபடி ஒரு உயிரி எந்திரத்தை உருவாக்குவதென்பதே அங்கு நடைபெறும் ஆய்வின் நோக்கம். சிலிக்கான் தொழில் நுட்பத்துக்கு மாற்றாக, நுண்ணுயிரிகளைப் பயன்படுத்துவதற்கான ஆய்வுகளும் நடைபெறுகின்றன.

உயிரித் தொழில்நுட்பம் வழங்கும் நேர்மறைப் பயன்கள் கற்பனைக்கெட்டாதவை. எனினும், இந்த அறிவியலும் தொழில்நுட்பமும் யாருடைய ஏக போகத்தின் கீழ் இருக்கின்றன என்பது தான் அறிவியல் வளர்ச்சி செல்லும் திசையையும் அதன் ஆக்கபூர்வமான பயன்பாட்டுக்கான சாத்தியத்தையும் தீர்மானிக்கின்றன. பெரும் பொருட்செலவு பிடிக்கும் இந்த ஆய்வுகள் அனைத்தையும் மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்களோ அல்லது அமெரிக்க இராணுவத்தின் ஆராய்ச்சித் துறையோ தான் கட்டுப்படுத்துகின்றன. உலகச் சந்தையின் மீது வர்த்தக ரீதியான ஏகபோக ஆதிக்கம் அல்லது இராணுவ மேலாதிக்கம் என்பவையே பெரும்பாலான ஆய்வுகளின் நோக்கத்தை தீர்மானிப்பவையாக இருக்கின்றன.

இந்நிறுவனங்களின் கூலி அடிமைகளாக உள்ள விஞ்ஞானிகளும், தொழில்நுட்ப வல்லுநர்களும் ஒரு கண்டுபிடிப்பின் பயன்பாடு குறித்தோ, அதன் எதிர்விளைவுகள் குறித்தோ தாங்கள் அறிந்த உண்மைகளை வெளியிட முடியாமல் ஒப்பந்தங்களால் கட்டுப்படுத்தப்படுபவர்களாகவும், பன்னாட்டு நிறுவனங்களின் சந்தை நலனுக்கு ஏற்ப உண்மைகளைத் திரித்துக் கூறி சான்றளிக்கும் அறிவு நாணயமற்றவர்களாகவும் உள்ளனர்.

தற்போது சிந்தடிகாவை உருவாக்கியிருக்கும் கிரேக் வென்டரின் தனியார் ஆய்வு நிறுவனம், எக்சான் மொபில் என்ற அமெரிக்க பன்னாட்டு எண்ணெய் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துள்ளது. சூழலிலிருந்து கரியமில வாயுவை உறிஞ்சி அதனை ஹைட்ரோ கார்பன்களாக மாற்றவல்ல கடற்பாசிகளை உருவாக்குவதே இந்த ஒப்பந்தத்தின்படி நடைபெறும் ஆய்வு. எண்ணெய் வளங்கள் வற்றி வரும் சூழலில், கரும்பு, சோளம், ஜட்ரோபா போன்ற வற்றிலிருந்தெல்லாம் தயாரிக்கப்படும் உயிரி எரிபொருளைக் காட்டிலும் மலிவானதாக இருக்கும். இவ்வாறு உருவாக்கப்படும் ஹைட்ரோ கார்பனிலிருந்து பெட்ரோலும் டீசலும் தயாரித்து எண்ணெய் விற்பனையில் உலக ஏக போகத்தை அடைவதே எக்சான் மொபில் நிறுவனத்தின் நோக்கம்.

அதே போல, நுண்ணுயிர்களின் மரபணுக்களை செயற்கையாக திருத்தி அமைத்து, அவற்றிலிருந்து ஃப்ளூ காய்ச்சலுக்கான தடுப்பு மருந்து தயாரிக்கும் ஆய்விலும் நோவார்ட்டிஸ் என்ற பன்னாட்டு மருந்துக் கம்பெனியுடன் இணைந்து கிரேக் வென்டரின் நிறுவனம் ஈடுபட்டிருக்கிறது. இரத்தப் புற்று நோய்க்கான மருந்துகளைத் தயாரித்து வந்த இந்திய நிறுவனங்களை, காப்புரிமையைக் காட்டி உற்பத்தியை தடுத்து நிறுத்தி, அம்மருந்துகளின் விலையை -று மடங்கிற்கு மேல் விலை உயர்த்தி விற்று வரும் நிறுவனம்தான் நோவார்ட்டிஸ்.

எக்சான் மொபில் நிறுவனமோ, புஷ் கும்பலுக்கு மிகவும் நெருக்கமானது; இராக் ஆக்கிரமிப்பின் பின்புலத்தில் இருந்தது. இத்தகைய நிறுவனங்கள் மேற்கூறிய கண்டுபிடிப்புகளை எப்படி பயன்படுத்தும் என்பதை விளக்கத் தேவையில்லை.

மருந்து நிறுவனங்கள் மட்டுமின்றி, உணவு தானிய வணிகத்தில் உலக ஏக போகத்தை நிறுவிக்கொள்ளத் துடிக்கும் மான்சான்டோ முதலான பன்னாட்டு வேளாண் வணிகக் கழகங்களும் (Agri business corporations) உயிரி தொழில் நுட்ப ஆய்வுகளில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றன. இந்தியா முதலிய நாடுகளில் அரசுகள், ஆய்வுக் கூடங்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் துணையுடன் தமது ஆய்வுகளின் சோதனைக் களமாக அந்நாடுகளின் விவசாயத்தை மாற்றுகின்றன. மான்சான்டோவின் பி.டி விதைகள் இந்திய விவசாயத்தின் மீதும் விவசாயிகளின் மீதும் ஏவியிருக்கும் அழிவு நமது கண்முன் தெரிகின்ற சான்று.

ஆனால் இந்த அழிவைக் கூட ''சொல்லி அழக் கூடாது, சொல்லாமல் தான் அழ வேண்டும். மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளுக்கு எதிராக அறிவியல் ஆதாரம் இல்லாமல் பேசுவது தண்டனைக்குரிய கிரிமினல் குற்றம்'' என்று கூறும் சட்ட முன்வரைவை நிறைவேற்றுவதற்காக தயார் நிலையில் வைத்திருக்கின்றது மத்திய அரசு.

செயற்கை கடற்பாசி இயற்கையான உயிர்ச்சூழலுக்குள் ஏவப்பட்டால் ஏற்படும் விளைவுகள் - பின் விளைவுகள் என்ன, அவை ஏவப்பட்டிருக்கின்றனவா இல்லையா என்பதைக் கூட எப்படித் தெரிந்து கொள்வது போன்ற கேள்விகளை எழுப்புகின்றார்கள் சூழலியலாளர்கள். இந்தக் கேள்விகளுக்கு விடை காண பெரும் ஆராய்ச்சி தேவையில்லை. யூனியன் கார்பைடு நடத்திய போபால் படுகொலையும், தற்போது அமெரிக்காவின் மெக்சிகோ வளைகுடாவின் கடற்பரப்பு முழுவதும் பரவி கோடிக்கணக்கான கடல்வாழ் உயிரினங்களைக் கொன்று கொண்டிருக்கும் பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்தின் எண்ணெயும் உள்ளங்கை நெல்லிக்கனி போல தெரியும் உண்மைகள். செயற்கை உயிரிகளால் ஏற்படும் ஆபத்துகளை இவ்வாறு பளிச்சென்று நிரூபிக்கக் கூட முடியாது என்பதால், இத்தகைய ஆய்வுகளையே தடை செய்ய வேண்டும் என்று கோருகின்றனர் சூழலியலாளர்கள்.

விபத்துகள் மட்டுமல்ல. நுண்ணுயிரிகளை எளிதில் கண்டுபிடிக்க முடியாத பேரழிவு ஆயுதங்களாகவும் ஏவ முடியும். இராக்கில் குறைந்த கதிர் வீச்சு கொண்ட அணு ஆயுதங்களையும், வியத்நாமிலும், கொரியாவிலும் இரசாயன ஆயுதங்களையும், இராக்கில் விச வாயுக் குண்டுகளையும் பயன்படுத்தியிருக்கும் அமெரிக்கா உயிரி ஆயுதங்களையும் பயன்படுத்தக் கூடும். அவ்வகையில் இக்கண்டுபிடிப்புகள்

•••

**செயற்கை உயிரின் ஆக்கத்தின் மூலம், கடவுள் உயிர் வாழ்வதற்கான வாய்ப்பை அறிவியல் மேலும் அடைத்து விட்டது. எனினும், கடவுள் கல்லறைக்குச் செல்ல மறுக்கிறார். காரணம், எந்த முதலாளித்துவம் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு மூலதனமிடுகின்றதோ, அதே முதலாளித்துவம் அறிவியலை தனது இலாப நோக்கத்துக்கான கருவியாகப் பயன்படுத்துவதன் மூலம், கடவுள் தொடர்ந்து உயிரோடிருக்க துணை செய்கின்றது.**

•••



படிப்பகம்

www.padippakam.com

அனைத்தையுமே அழிவு வேலையின் ஆயுதங்களாகப் பயன்படுத்த முடியும். பயன்படுத்தும்.

இப்பிரச்சினைக்கு இன்னொரு பரிமாணமும் இருக்கின்றது. அறிவியல் தொழில்நுட்ப புரட்சியையும், உலகமயமாக்கலையும் தொடர்ந்து உலக நாடுகளின் மீது திணிக்கப்பட்டிருக்கும் வணிகம் சார்ந்த அறிவுசார் சொத்துடைமை (TRIPS), புதிய கண்டுபிடிப்புகளின் மீது மட்டுமின்றி, தாவரங்கள், நுண்ணுயிரிகள் மற்றும் மரபணுக்கள் மீதும் கூட காப்புரிமை கோரும் அதிகாரத்தை உலக முதலாளித்துவத்திற்கு வழங்கியிருக்கின்றது. வேம்பு மீது அமெரிக்க நிறுவனம் காப்புரிமை பெற்றதும், அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்ப்புகளும் நாம் அறிந்ததுதான். தாவரங்களுக்கு மட்டுமல்ல, மனிதனின் மரபணுக்களுக்கும் கூட காப்புரிமை பெற்று, அவற்றைத் தனிச்சொத்துடைமையாக மாற்றிக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றது உலக முதலாளித்துவம்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தைச் சேர்ந்த கிராட் (39) என்ற பெண்ணுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது மருத்துவ சோதனையில் கண்டறியப்பட்டது. கருப்பையிலும் தனக்குப் புற்றுநோய் வர அபாயம் உள்ளதா என்பதை மரபணுச் சோதனை மூலம் தெரிந்து கொள்ள எண்ணிய அந்தப் பெண், மிரியாட் என்ற சோதனைக் கூடத்தை அணுகினார். புற்றுநோயை உருவாக்கும் மரபணு அந்தப் பெண்ணின் உடலில் இருப்பது சோதனையில் தெரிய வந்தது. வேறோரு சோதனைக் கூடத்தில் மீண்டும் மரபணுச் சோதனை செய்து பார்த்து இதனை உறுதி செய்து கொள்ள கிராட் விரும்பினார். ஆனால் மரபு வழியில் மார்பக மற்றும் கருப்பை புற்றுநோயை உருவாக்கும் இரு மரபணுக்களை முதன்முதலாகக் கண்டுபிடித்த மிரியாட் சோதனைக்கூடம், அவ்விரு மரபணுக்களுக்கான அறிவுசார் சொத்துடைமையை பதிவு செய்து வைத்திருந்தது. மிரியாட்டில் இந்த சோதனைக்கான கட்டணம் 1.5 இலட்சம் ரூபாய். இதைவிட மிக மலிவான கட்டணத்தில் இச்சோதனையைச் செய்வதற்கு பல இடங்கள் இருந்தும், அமெரிக்காவின் வேறெந்த சோதனைக்கூடத்திலும் இந்தச் சோதனையைச் செய்வதற்கு மிரியாட் தடையாணையும் பெற்றிருந்தது.

கிராட்டின் சார்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த அமெரிக்க சிவில் உரிமை யூனியன் ''உடலிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நிலையிலும் கூட மனிதனின் மரபணுக்கள் எனப்படுபவை இயற்கையின் அங்கங்களே. இவை புதிதாக உருவாக்கப்பட்டவை அல்ல'' என்று வாதிட்டன. மார்ச் 2010-இல் அமெரிக்காவின் ஒரு மாவட்ட நீதிமன்றம் மிரியாட் நிறுவனத்தின் இந்தக் காப்புரிமையை ரத்து செய்திருக்கிறது.

மிரியாட் போன்ற உயிரி தொழில்நுட்ப நிறுவனங்களும், மருந்து நிறுவனங்களும் சுமார் 40,000 மனித மரபணுக்களுக்கு காப்புரிமை பெற்று வைத்திருக்கின்றன. இந்தத் தீர்ப்பை ரத்து செய்தால் மட்டுமே தங்களது ஆராய்ச்சியின் 'பயனை' முழுமையாக 'அறுவடை' செய்ய இயலும் என்பதால் இத்தொழில் நிறுவனங்கள் கூட்டணி அமைத்துக் கொண்டு இந்தத் தீர்ப்பை முறியடிக்க முயலும் என்பதில் ஐயமில்லை. சிந்தடிகாவுக்கு காப்புரிமை

**இப்போது அறிவியல் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டு நிறுத்துவது ஆண்டவனல்ல, அறிவுசார் சொத்துடைமை என்ற உலக முதலாளித்துவத்தின் கோட்பாடு. அறிவியலை அடக்கி ஆள்வது திருச்சபை அல்ல, முதலாளித்துவ உடைமை உறவை நிலைநாட்டுகின்ற ஏகாதிபத்தியம் அல்லது உலக வர்த்தகக் கழகம்.**

பெறும் முயற்சி, மேற்கூறிய வழக்கில் பன்னாட்டு நிறுவனங்கள் வெற்றி பெறுவதற்கு மறைமுகமாக உதவும் என்றும் சில விஞ்ஞானிகள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

மனித மரபணுத் தொகுப்பு தொடர்பான ஆய்வில் முக்கியப் பங்கு வகித்த விஞ்ஞானியும், மனித மரபணுவின் மீது காப்புரிமை பெறும் முயற்சிகளுக்கு எதிராக தொடர்ந்து போராடி வருபவருமான மான்செஸ்டர் பல்கலைக்கழக பேராசிரியர் ஜான் சல்ஸ்டன் கீழ்கண்டவாறு எச்சரிக்கின்றார்: ''சிந்தடிகாவுக்கு காப்புரிமை பெறுவதற்காக கிரேக் வென்டர் கொடுத்துள்ள விண்ணப்பம், சிந்தடிகாவுக்கு மட்டும் காப்புரிமையை கோரவில்லை. உயிரி தொழில்நுட்பம் தொடர்பான பல வகையான ஆய்வு முறைகளுக்கும் சேர்த்து காப்புரிமை கோருகின்றது. இது நிராகரிக்கப்படவில்லை என்றால், உலகெங்கும் நடைபெறும் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி முழுவதுமே கிரேக் வென்டர் நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டு, உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சியே மொத்தமாக முடக்கப்பட்டுவிடும்.''

சிந்தடிகாவை உருவாக்கிய கிரேக் வென்டர் எனும் விஞ்ஞானியே உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சிகளின் எதிரியாக மாறி நிற்பதை இப்போது காண்கிறோம்.

இப்போது அறிவியல் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டு நிறுத்துவது ஆண்டவனல்ல, அறிவுசார் சொத்துடைமை என்ற உலக முதலாளித்துவத்தின் கோட்பாடு. அறிவியலை அடக்கி ஆள்வது திருச்சபை அல்ல, முதலாளித்துவ உடைமை உறவை நிலைநாட்டுகின்ற ஏகாதிபத்தியம் அல்லது உலக வர்த்தகக் கழகம்.

உயிரின் வேதியல் மூலத்தை க் கண்டறிந்து, அதனை மாற்றியமைத்து, இதுவரை இல்லாத புதியதொரு உயிரை உருவாக்கவும் தலைப்பட்டுவிட்டது இயற்கை விஞ்ஞானம். உடைமை உறவின் சமூகப் பொருளாதார மூலத்தை மார்க்சியம் கண்டறிந்து சொல்லிய பின்னரும், அதனைப் புரிந்துகொள்ள இயலாத அறியாமையில் சமூகத்தை அமிழ்த்தியிருக்கும் ஏகாதிபத்தியம், உற்பத்தி சாதனங்களை மட்டுமன்றி உயிரணுவையும் தனிச்சொத்துடைமையாக்கும் திசையில் சமூகத்தை இழுத்துச் செல்கின்றது.

இயற்கையின் 400 கோடி ஆண்டு கால 'வரலாறு', பொருள்முதல்வாத நோக்கில் விளக்கம் பெற்றுவிட்டது. சோதனைக்கூடத்தில் நிரூபிக்கப்பட்டும் விட்டது.

மனிதனின் சில ஆயிரம் ஆண்டு கால வரலாறு, பொருள்முதல்வாத நோக்கிலான மாற்றத்துக்காகவும், புதிய சமூகத்தின் தோற்றத்துக்காகவும் ஏங்கி நிற்கின்றது. அதன் காரணமாகவே, அறிவியலும் தேங்கி நிற்கிறது. இந்தத் தேக்கத்தை உடைப்பதற்குத் தேவைப்படுவது - புரட்சி. இதுதான் வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தின் முடிவு.

● மருதையன்



படிப்பகம்

# அங்காடித் தெரு:

## மிகை சோகம் புனையும் மேலோட்டமான மனிதாபிமானம்

அறுசுவைகளில் இனிப்பை மட்டும் ருசியாக கொண்டாடும் பேர்வழிகளைத் தவிர்த்த மற்றவர்களை அங்காடித் தெரு ஏதோ ஒருவிதமாய் பாதித்திருக்கிறது. தமிழகத்தின் புகழ்பெற்ற ஒரு பேரங்காடியில் குவிக்கப்பட்டிருக்கும் வண்ணமயமான பொருட்களோடு பொருளாக, ஆனால் சாயம் போய் வாடிப்போயிருக்கும் உயிருள்ள ஊழியர்களை காட்டுவதற்கு ஒரு தமிழ் சினிமா இயக்குநர் துணிந்திருப்பது பாராட்டத்தக்கதுதான். ஆனால் பாராட்டுபவர்களும், படத்தின் சோகத்தை அருந்தியவர்களும் ஒரு பொதுவான மனிதாபிமானம் என்பதைத் தாண்டி ஒரு அழுத்தமான பாதிப்பை அடைந்திருப்பார்களா என்பதில் நிறைய ஐயமிருக்கிறது.

ஏழ்மையை பார்த்து மட்டுமே ஏற்படும் மனிதாபிமானம் எத்தகையது? விபத்து, தற்கொலை, இரத்தம், எதிர்பாராத அடிகள், துன்பங்கள் என்பதைக் காட்டித்தான் ஏழ்மையைக் காட்ட முடியுமென்று இயக்குநர் நினைத்திருப்பது 'ப' வரிசைப் படங்களின் காலத்திலிருந்து தமிழ் சினிமா மரபு கொண்டிருக்கும் உத்திதான். நல்லதங்காள் கதை கேட்டு வளர்ந்த நாடுதானே இது! ஆனால் இன்று நல்லதங்காள் அன்றாடம் நாளிதழில் அடிபடும் ஒரு செய்தித் துணுக்காக மாறிவிட்டாள்.

கண் முன்னே கொடுரமாகத் தாக்கப்பட்டால்தான் ஒரு எளியவனின் துன்பத்தை உணர முடியுமென்றால் நாம் எந்தக் காலத்திலும் உழைக்கும் வர்க்கத்தின் துன்பத்தை புரிந்து கொள்ள முடியாது. ஏழைகளை மெல்லக் கொல்லும் 'அமைதியான' சகஜகமான வாழ்க்கைக்குள் இழையோடும் துயரத்தை, ஊடுறுவிப் பார்ப்பதற்கு கலை கற்றுக் கொடுக்கவேண்டும். விபத்தில் செத்துத்தான் ஒரு ஏழை தனது துயரத்தைப் புரியவைக்க முடியுமென்றால் சாகாத ஏழைகளின் கதி?

கே.கே. நகர் விபத்து, லிங்கத்தின் தந்தை விபத்து, இரக்கமற்ற முதலாளி அண்ணாச்சி, கொடுரமான கங்காணி அண்ணாச்சி, இதயத்தை உலுக்கும் அந்த காதல் பெண்ணின் தற்கொலை, அவள் காதலனது மனமுடையும் அவலம், கனியின் தங்கை நாகம்மையின் சித்தரிப்பு, நின்ற கால் வியாதியால் சாகும் தொழிலாளி, மந்தைகளைப் போல அடைந்து வாழும் சிப்பந்திகள் என்று படம் முழுவதும் வரும் சோகங்கள்... அவை உண்மையாக நடக்கக் கூடியவை என்றாலும் அதிர்ச்சியை மிகையாக ஏற்படுத்தும் நோக்கம் கொண்டவையாகிவிட்டன. இவ்வாறின்றி தான் தோற்றுவிக்க விரும்பும் உணர்ச்சியை தோற்றுவித்திருக்க முடியாது என்று இயக்குநர் கருதியிருப்பார் போலும்.

அழகான, சுத்தமான, நவீனமான வாழ்க்கையில் முங்கித் திளைத்திருக்கும் நடுத்தர வர்க்கத்தை இப்படிக் காட்டித்தான் அழவைக்க முடியுமென்றால் அந்த அழுகையின் ஆயுள் சில மணித்துளிகள் மட்டும்தான். ஏழைகளின் அவலத்திற்கு காரணமான வாழ்க்கையை வாழக்கூடியவர்களில் நானும் ஒருவன் என்ற குற்றவுணர்ச்சியையோ, இதனைக் கண்டும் காணாமல் சென்றவர்களிடம் ஆழமான மன உறுத்தலையோ இந்தக் கதைக்களம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஏற்படுத்தவில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஜி-8 குழும நாடுகளது அதிபர்களின் கூட்டம் நடந்த போது, மேலைநாடுகளின் தன்னார்வக் குழுக்கள் "Make poverty history" (வறுமையை வரலாறாக்குவோம்) என்ற முழக்கத்தின் கீழ் பணக்கார நாடுளிடம் ஆப்பிரிக்காவுக்காக வேண்டுகோள் விடுத்தார்கள். ஆப்பிரிக்க நாடுகளின் கடன்களை மேலைநாடுகள் இரத்து செய்யவேண்டுமென்பதுதான் அவர்கள் கோரிக்கை.

மேற்கத்திய நாடுகளின் பிரபலமான எல்லாப் பாடகர்களும் அதில் பங்கேற்ற இசைநிகழ்ச்சிகள் உலகம் முழுவதும் ஒரே நேரத்தில் நேரடி ஒளிபரப்பாயின. இசை நிகழ்ச்சிகளின் இடையில் அவ்வப்போது ஆப்பிரிக்க நாடுகளின் வறுமை புள்ளிவிவரங்களையும், காட்சித் துணுக்குகளையும் காட்டினார்கள்.

ஒரு ஆப்பிரிக்க குடிசையில் குழந்தைகள் அம்மாவிடம் ''பசிக்கிறது'' என்று அடிக்கடி பலவீனமான குரலில் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். அம்மாவும் ''சமையல் தயாராகிறது'' என்று அடுப்பையும், பாத்திரத்தையும் காட்டியவாறு இருக்கிறாள். பாத்திரத்திலிருந்து சமையலின் புகை பரவுகிறது. அதைப் பார்த்தவாறே குழந்தைகள் ஏக்கத்தில் தூங்கிப் போகிறார்கள். அந்தப் பாத்திரத்தில் கொதித்துக் கொண்டிருந்தவை சில மரக்குச்சிகள் மட்டுமே என்பதை காமெரா பின்னர் நமக்குக் காட்டுகிறது.

பார்த்தவுடன் செய்திகளாலும் புள்ளி விவரங்களாலும் உணர்த்த முடியாத ஒரு வேதனை தோன்றியது. எனினும், ஆப்பிரிக்காவின் அந்த வறுமையை உற்பத்தி செய்தவர்களே ஜி-8 பணக்கார நாடுகள்தான் என்பதைப் புரிந்து கொண்டவருக்கு ஏற்படும் வேதனைக்கும், ஜி-8 நாடுகளிடம் கருணையை எதிர்பார்ப்பவர் கொள்ளும் வேதனைக்கும் வேறுபாடு உண்டல்லவா? நேரிட்டு பார்க்கும் யதார்த்தம் தானே உண்மையை விளங்கச் செய்து விடுவதில்லை. ஏற்கெனவே பழக்கப்படுத்தப்பட்ட கண்ணோட்டத்தின் வழியாகத்தான் ரசிகன் அதனைப் பார்க்கிறான், புரிந்து கொள்கிறான்.

வசந்த பாலன் அங்காடித் தெருவை எடுப்பதற்காக நிறைய முயற்சிகள் செய்து விவரங்கள் சேகரித்திருக்கிறார். ''உண்மையை உள்ளொளியில் கண்டு கொள்ளலாம்'' என்ற ஜெயமோகனது மேதைமை அவரிடமில்லாதது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் ஒன்றோடு ஒன்று

•••

**ஏழைகளின் அவலத்திற்கு காரணமான வாழ்க்கையை வாழக்கூடியவர்களில் நானும் ஒருவன் என்ற குற்றவுணர்ச்சியையோ, இதனைக் கண்டும் காணாமல் சென்றவர்களிடம் ஆழமான மனஉறுத்தலையோ இந்தக் கதைக்களம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஏற்படுத்தவில்லை.**



படிப்பகம்

www.padippakam.com

இணைந்தும், முரண்பட்டும் தோன்று கின்ற எதார்த்தத்தின் ஊடாக உண்மையைத் துலங்கச் செய்கின்ற பார்வையை இயக்குநரால் வழங்க முடியவில்லை. இதனை ஈடுகட்டுவதற்குத்தான் மிகையான சோகக்காட்சிகள் போலும்.

முதலாளி அண்ணாச்சியின் சித்தரிப்பு ஒரு எடுத்துக்காட்டு. அவர் தீவிர கடவுள் பக்தர், எச்சக்கையை ஆட்டினால் இங்கேயே ஆள் கிடைக்குமென்ற திமிர். விளம்பரத்திற்காக சினேகாவை முந்தானையை விரித்து ஆடச் சொல்வது, பொய்ப் புகார் கொடுத்து கடைச் சிப்பந்தியான லிங்கத்தை போலீசு மூலம் அடிக்க வைப்பது, வியாபார நலனுக்காக இரக்கமின்றி பேசுவது.. எல்லாம் முதலாளி அண்ணாச்சியைப் பற்றிய உண்மையான சித்தரிப்புகள் தான். என்றாலும் அவையே முழு உண்மையல்ல.

அம்பானி, டி.வி.எஸ், ஹூண்டாய் முதலாளிகளெல்லாம் அண்ணாச்சிகள் போல கடுஞ்சொல் பேசி சாட்டையைச் சுழட்டும் நம்பியார் டைப் வில்லன்களல்ல. ஒரு வேளை வசந்த பாலன் அவர்களைப் பற்றி படமெடுக்க விவரங்கள் சேகரித்திருந்தால் அவரால் மணிரத்தினத்தின் 'குரு' திரைப்படம் போலவோ அல்லது அதற்கு கம்மியாகவோதான் எடுத்திருக்க முடியும். எனினும் இந்த நாகரீக முதலாளிகள்தான் 'அநாகரீக' அண்ணாச்சிகளைக் காட்டிலும் கொடூரமாக முழு சமூகத்தையும் சுரண்டுகிறார்கள். சட்டீஸ்கரின் கனி வளங்களைக் கைப்பற்றுவதற்காக பழங்குடி மக்கள் மீது தொடுக்கப்பட்டிருக்கும் உள்நாட்டுப்போரில் டாடாவோ, அனில் அகர்வாலோ கையில் துப்பாக்கியுடன் களத்தில் நின்று கொக்கரிக்கவில்லை. அவர்கள் அங்கே ஆஸ்பத்திரி கட்டுகிறார்கள், ஆலயம் கட்டுகிறார்கள். ஆயினும் அவர்கள்தான் அந்தப் போரின் சூத்திரதாரிகள்.

படத்தின் கதையில் கடைச்சிப்பந்திகளது வில்லன்களாகத்தான் அண்ணாச்சி வருகிறார். ஆனால் முதலாளிகளான அண்ணாச்சிகளது ஆளுமையின் உருவாக்கம் என்பது அவர்களது தனிப்பட்ட பண்புநலன்களால் மட்டுமே ஆனதல்ல. பல்வேறு சமூகக்காரணிகளின் பின்புலத்தில்தான் அவர்கள் 'அப்படி' இயங்குகிறார்கள்.

ஒருமுறை தீபாவளி நாளில் கடையைத் திறந்து வைத்திருந்த அண்ணாச்சியிடம், ''தீபாவளிக்கு ஊருக்கு போகவில்லையா'' என்று கேட்டேன். 'பொழப்புக்காக மஞ்சப்பையை எடுத்



துட்டு என்னைக்கு வந்தமோ அன்னையிலிருந்து தீபாவளியாவது, பொங்கலாவது' என்றார் சலிப்புடன்.

அண்ணாச்சியாக நடித்திருக்கிறார் பழ.கருப்பையா. செட்டியார் சாதிதான் தமிழகத்தின் மரபார்ந்த வணிக சாதி. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வட்டிக்கடையின் மூலம் சொத்து சேர்த்து பர்மாத் தேக்கில் அரண்மனை வீடுகள் கட்டி இன்று ப.சிதம்பரமாகவும், எம்.ஏ.எம். சிதம்பரமாகவும், ஸ்பிக் முத்தையாவாகவும், அரசுவேலை, தொழில் என்று நடுத்தரவர்க்கமாகவும் இருக்கும் செட்டியார்களுக்கும், புதிய வணிக வர்க்கமாக தலையெடுத்திருக்கும் நாடார்களுக்கும் பாரிய வேறுபாடு உண்டு.

பார்ப்பனியத்தின் சாதிய அமைப்பில் கடைநிலையில் இருந்த நாடார் மக்கள் சீர்திருத்தத்தின் மெதுவான முன்னேற்றத்தில் மாறியவர்கள். சுயசாதி முன்னேற்றம் மற்றும் கூட்டுதவியின் மூலம் சற்று நிறுவன மயமான சாதியும் கூட. சிலர் முதலாளிகளாகவும், பெரும் வியாபாரிகளாகவும் வளர்ந்து விட்டாலும், பெரும்பாலானவர்கள் சிறு கடைகளை வைத்து அதற்குமேல் முன்னேற முடியாத நிலைமையில்தான் காலம் தள்ளுகிறார்கள்.

இந்த சிறு கடை அண்ணாச்சிகளின் வாழ்க்கை அங்காடித்தெரு காட்டும் வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் குறைந்ததல்ல. இந்தக்கடைகளில் பயிற்சிக்காகவும், எதிர்கால பிழைப்புக்காகவும் வரும் இளைஞர்களின் நிலையும் அப்படித்தான். சரவணா ஸ்டோர் அண்ணாச்சியைப் போலவோ இல்லை இன்னும் அதிகமாகவோ இந்த சிறு கடை வியாபாரிகள் தனது பணியாட்களை நடத்துவார்கள். 'அப்படித்தான் நானும் கஷ்டப்பட்டு இளமையைத் தொலைத்து, தொழிலைக் கற்று கடைவைத்தேன்' என்று அதை நியாயப்படுத்தவும் செய்வார்கள். இது உழைத்து முன்னேறிய சிறு உடைமை வர்க்கத்துக்கே உரிய உக்கிரமான உடைமை உணர்வு. ஆனால் கடுமையான உழைப்பு மட்டுமே சிறு முதலாளிகளைப் பெரு முதலாளிகளாக்கி விடுவதில்லை. சுரண்டலில் தொடங்கி தில்லுமுல்லுகள், முறைகேடுகள், ஆளும் வர்க்கம் மற்றும் அதிகார வர்க்கங்களுடனான கள்ளக் கூட்டுகள் ஆகியவற்றின் ஊடாகத்தான் ஒரு பெரு முதலாளி உருவாகிறான்.

எனினும், பெரும் கைகளாக உருவெடுத்திருக்கும் சரவணா ஸ்டோர், சரவண பவன், இதயம் நல்லெண்ணெய், தினத்தந்தி குழுமம் போன்றோர் தங்கள் கதையை 'உழைத்து முன்னேறிய' கதையாக மட்டும் கருதிக் கொள்கிறார்கள். நம்மையும் அவ்வாறு நம்பச் சொல்கிறார்கள். பணம் பெருகப் பெருக இந்தக் கருத்து முன்னிலும் உறுதியாகப் பரப்புகிறார்கள். இந்த சுய முன்னேற்ற கொசுவத்தி இமேஜ், சுயசாதி ஏழைகளை ஏய்ப்பதற்கும் நயவஞ்சகமாக சுரண்டுவதற்கும் பெரிதும் பயன்படுகிறது. சுயசாதி ஏழைகளோ சாதிப்பற்று காரணமாகவும், சாதிய அமைப்பு கொடுக்கின்ற நிர்ப்பந்தம் காரணமாகவும் தமது முதலாளிகளிடம் சுயமரியாதை இன்றி அடங்கவும் செய்கிறார்கள்.

சேதுராமன் நடத்தும் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை, கூச்சநாச்சமில்லாத மருத்துவக் கொள்ளைக்குப் பெயர் பெற்றது. அங்கே நோயாளிகளாக எல்லா சாதி மக்களும் வந்தாலும் அங்கே வேலை பார்க்கும் பெரும்பாலான தேவர் சாதி ஊழியர்கள் என்ன பிரச்சினை வந்தாலும் நிர்வாகத்தை



படிப்பகம்

www.padippakam.com

விட்டுக் கொடுக்க மாட்டார்கள். டிவிஎஸ் முதலான நிறுவனங்களில் பார்ப்பனர்கள், கோவை ஈரோடு மாவட்டங்களில் கவுண்டர், நாயுடு சாதியினர், சென்னையில் மார்வாரிகள், அம்பானியின் நிறுவனத்தில் கணிசமான பங்குதாரர்களாக இருக்கும் பனியாக்கள்.. என்று சாதியும் வர்க்கமும் பிணைந்திருக்கும் இடம் இது. வெறும் சரவணா ஸ்டோர் விவகாரம் அல்ல.

அங்காடித்தெரு அண்ணாச்சியின் எடுபிடிகளது இரக்கமற்ற நடைமுறைகளும் இந்த சுயசாதி பலத்தை வைத்தே ஆடுகின்றன. சில வலையுலக மேதைகள் படம் பார்த்த எழுச்சியில் கம்யூனிஸ்டுகள் சரவணா ஸ்டோரில் ஏன் சங்கம் கட்டவில்லை என்று அதிகார தோரணையில் கவலைப்படுகிறார்கள். சரவணா ஸ்டோரில் சங்கம் கட்ட முயன்று தோல்வியடைந்த கதையை வைத்து இதைவிட உண்மைக்கு நெருக்கமான ஒரு படத்தை எடுத்திருக்க முடியும்.

தலித்துக்கள், ஏழைகள் போன்ற ஒடுக்கப்படும் மக்கள் அவர்களது மூடியிருக்கும் அவர்களுடைய உலகத்தில் இருந்து கொண்டு மட்டும் விடுதலை உணர்வைப் பெற இயலாது. ஒரு தலித் அவனது வாழ்க்கைத் தேவைக்காக கிராமத்தை விட்டு வெளியேறலாம் என்ற ஒரு சூழல் உருவாகி நகரத்துக்கு சென்று அங்கே சமத்துவத்தை கண்டு, அனுபவித்து பின்னர் தனது கிராமத்துக்கு திரும்பும் போது தீண்டாமையை எதிர்க்க வேண்டுமென்ற உணர்வைப் பெறுகிறான். அடுப்படியில் அடைபட்டிருக்கும் பெண்கள் கூட ஆண்கள் நிறைந்திருக்கும் சமூகவெளியில் புழங்கும்போதுதான் தமது சமூக அடிமைத்தனத்தை உதறவேண்டுமென்ற விருப்பத்தை அடையமுடியும்.

அங்காடித் தெரு அந்த 'வெளிப்பார்வையை'க் கொண்டிருக்கவில்லை. மிகைப்படுத்தப்பட்ட காட்சிகளின் மூலம் ஊழியர்களின் சோகத்தை காட்டியிருப்பதற்குப் பதில் வெளியுலகோடு அங்காடித்தெரு கொண்டிருக்கும் பிணைப்புகளை யோசித்திருந்தால் 'அமைதியான' முறையிலேயே இந்த 'அவலத்தை' இயக்கும் விதிகளைப் பார்வையாளர்களுக்கு விரித்துக் காட்டியிருக்க இயலும்.

அந்தப் பேரங்காடியில் அண்ணாச்சியின் கருங்காலிகளாக வேலை பார்ப்பவர்கள் ரவுடிகளைப் போல இருக்கிறார்கள். அதைக் காட்டிலும், வேறு வழியற்ற நிர்ப்பந்தம் இருந்தாலும், ஊழியர்களிடையே நிலவும் 'அமைதி'தான் நம் கவனத்துக்குரியது. இடித்துரைக்கப்பட வேண்டியது. தன் காதலியின் மீது கைவைத்தான் என்று சூபர்வைசரை பந்தாடும் லிங்கம், கூடவே அமைதியான அடிமைகளாக இருக்கும் தனது சக ஊழியர்களையும், வார்த்தைகளால் சுட்டிருக்க வேண்டும்.

கடை ஊழியர்களை நாயக நாயகியாக்கியிருப்பதற்குப் பதில் ஒரு சூபர்வைசரை மையமாக்கி அங்காடி தெருவின் கதையைச் சொல்ல முயன்றிருந்தால் சரவணா ஸ்டோரின் எல்லா வகைப் பரிமாணங்களையும் ஒரு இழையில் காட்டியிருக்கலாம் என்று தோன்றுகிறது. பேஜ்-3 படத்தின் இயக்குநர் மது பண்டார்கர் முதலில் அந்தப் படத்தை மேட்டுக்குடியினரது வாகன ஓட்டுநர்களின் பார்வையில் சொல்ல நினைத்து பின்னர் மாற்றிக் கொண்டாராம். அந்த மேட்டுக்குடி உலகத்தின் சுயரூபத்தை அந்த உலகித்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஒரே நேரத்தில் வாழும் வாய்ப்புப் பெற்ற ஒரு பெண் பத்திரிகையாளரின் வழியாக விவரிக்கிறது அந்தத் திரைப்படம். ஒரு ஓட்டுநரின் பார்வையில் கதை சொல்லப்பட்டிருந்தால் நிச்சயம் அந்த உலகத்தின் வக்கிரத்தை பார்வையாளன் தெரிந்து கொண்டிருக்க இயலாது.



இயக்குநர் வசந்தபாலன்

சூபர்வைசர்கள் சிப்பந்திகளாகவோ இல்லை அண்ணாச்சியின் உறவினர்களாகவோ இருந்து வந்திருக்கலாம். அவர்களுக்கு கீழ்மட்டத்தின் இயக்கமும், முதலாளியின் இயக்கமும், கடையின் வெற்றிக்கான பின்னணியும் தெரியும். நேர்மையானவராகவும், மனிதாபிமானியாகவும் ஆரம்பிக்கும் ஒரு சூபர்வைசர் பின்னர் அமைப்பின் இயங்கு தளத்தில் மெல்ல மெல்ல பக்காவான சூபர்வைசராக மாறி, அதில் நிலை கொள்ள முடியாமல் தத்தளிக்கும் ஒருவரது பார்வையில் இந்தப்படம் சொல்லப்பட்டிருந்தால் அது நாமறியாத அந்தப் பேரங்காடியின் முழுமையை உணர்த்தியிருக்கக் கூடும்.

ஏழைகளும், நடுத்தர மக்களும் சரவணா ஸ்டோரை ஏன் விரும்புகிறார்கள் என்பதும், அதற்கு அண்ணாச்சி என்ன செய்தார் என்பதையும் அங்காடித் தெரு மருந்துக்கு கூட காட்டவில்லை. மற்ற கடைகளை விட மலிவு என்ற முறையில் மக்களிடம் இருக்கும் அங்கீகாரத்தை கேள்விக்குள்ளாக்காமல் என்ன புரிதலை அல்லது சோகத்தை ஏற்படுத்த முடியும்?

சரவணா ஸ்டோரின் விலை மலிவுக்கு என்ன காரணம்? வால்மார்ட்டின் மலிவுக்கான வலியை சீனத் தொழிலாளிகள் சுமப்பது போல ரங்கநாதன் தெருவின் மலிவுக்காக பல சிறு முதலாளிகளும், அவர்களது தொழிலாளிகளும் சுமக்கிறார்கள். எவர்சில்வர் பாத்திரங்களை தயாரிப்பவர்கள், பிளாஸ்டிக் பொருள் சிறு முதலாளிகள், தங்க நகை ஆசாரிகள், பட்டு நெய்யும் நெசவாளிகள் எல்லாரும் சரவணா ஸ்டோருக்காக கொத்தடிமைகளாக வாழ்கிறார்கள்.

அற்ப கூலிக்காக பீஸ் ரேட்டில் நெஞ்செலும்பை இழைத்து பாத்திரங்களை பளபள வைக்கும் அந்த தொழிலாளிதான் படோபடமான அங்காடித் தெருவின் அடிப்படை. சரவணா ஸ்டோர் போன்று பெரிய ஆர்டர்கள் வரும் போது அதை ஏற்கும் சிறு முதலாளிகளும் தமது மார்ஜினை தக்கவைப்பதற்கு தொழிலாளிகளை மேலும் சுரண்ட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். ஆக ஏழைகளுக்கு கிடைக்கும் மலிவு விலைக்கு



படிப்பகம்

இன்னொரு ஏழைதான் தன் ஊதியத்தை தியாகம் செய்கிறான்.

சரவணா ஸ்டோருக்கு வரும் கூட்டத்தை கட்டுப்படுத்துவதே அங்கிருக்கும் ஊழியர்களின் மையமான வேலையாக இருப்பதை பலமுறை பார்த்திருக்கிறேன். பண்டிகைக் காலங்களில் மலிவு விலைக்காக இத்தகைய கடைகளை மொய்க்கும் மக்கள் பன்றிக் கூட்டத்தைப் போல நடத்தப்படுவர் என்பதையும் ஊழியர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். இந்தப் பேரங்காடியின் ஊழியர்கள் ஒருவகையான மனித ரோபோக்கள்.

அவர்களது மின்னல் வேக இயக்கத்தை, அதன் விளைவாக அவர்கள் மீது திணிக்கப்படும் எந்திரத்தனமான அணுகுமுறையை படத்தில் காண முடியவில்லை. இந்த மனித எந்திர இயக்கத்தை, அடிமைத்தனத்தை சென்னை நகரைச் சேர்ந்த வேறு தொழிலாளியிடம் எதிர்பார்க்க இயலாது. எனவேதான் தென்மாவட்டங்களிலிருந்து வரும் ஏழைகள் இதற்குத் தேவைப்படுகிறார்கள். தொழிலாளிகள் மலிவாக நடத்தப்படும் இந்த அவலமும்தான் மலிவு விலையை சாத்தியமாக்குகிறது. இது பற்றிய கேள்வியை படம் எழுப்பவில்லை.

அந்த குறுகிய அங்காடித் தெருவில் எல்லா வகை விதிகளையும் மீறி சரவணா ஸ்டோர் போன்ற கடைகள் பிரம்மாண்டமாக எழுந்திருப்பதும், சட்டத் திருத்தங்களும் நீதிமன்றத் தீர்ப்புகளும் அவற்றுக்கு முன்னே குனிந்து வளைந்து கும்பிடு போடுவதும் எப்படி சாத்தியமாகியிருக்கின்றன? ஓட்டுக்கட்சிகள், அதிகாரவர்க்கம், மீடியாக்கள் ஆகிய அனைவருக்கும் சென்னை தியாகராய நகர் ஒரு அமுதசுரபி. தொழிலாளர்கள் மீதான சுரண்டலும் அடக்குமுறையும் கேட்பாரின்றி நடப்பதற்குக் காரணமும் அதுதான்.

நாயகி கனியின் கல்லூரி மாணவி போன்ற பாவனைகளை எக்காலத்திலும் அந்தக் கடையில் பார்க்க முடியாது. கனியை சற்று அழகாக காட்டவேண்டுமென்பதற்காக மற்ற பெண்களை வேண்டுமென்றே கருப்பைக் கூட்டிக் காண்பித்திருப்பது நல்ல இரசனையல்ல.

விளம்பரத்திற்காக சிநேகா அக்கா வருவதை திருவிழா போல சிப்பந்திகள் கொண்டாடுவது அதிசயமல்ல, பொய்யுமல்ல. ஆனால் விளம்பரமே தேவைப்படாத அந்தக் கடைக்கு பல இலட்சம் செலவழித்து விளம்பரம் செய்ய வேண்டிய அவசியமும், அந்த செலவின் சிறிய பங்கு கூட தொழிலாளிகளின் வாழ்வை மேம்படுத்தியிருக்கும் என்பது ஒரு வசனமாகவோ, காட்சியாகவோ வந்திருக்கவேண்டும்.

இந்த விமரிசனத்தில் கூறப்பட்டிருக்கும் எல்லா விசயங்களையும் ஒரு சினிமாவாக எடுப்பது சாத்தியமா, என்று சிலருக்குத் தோன்றலாம். இரண்டு மணி நேரத்தில் இரண்டாம் உலகப் போரையே காட்ட முடியுமென்றால் அதோடு ஒப்பிடும்போது சரவணா ஸ்டோரின் களமும், காலமும் குறுகியதுதான். பிரச்சினையின் மையப்பொருள் குறித்த படைப்பாளியின் கண்ணோட்டம்தான் சாத்தியத்தையும் சாத்தியமின்மையையும் தீர்மானிப்பதில் முக்கியப் பாத்திரமாற்றுகிறது.

•••

**ஒரு எளிமையான அழகான பண்பு ஏழைகளிடம் இருக்கிறது. உழைப்புதான் அந்தப் பண்பின் வெளிப்பாடு. அறியாமையில் உழலும்போது அதில் வெளிப்படும் அவலத்தையும், அறியாமை அகலும்போது அது வெளிப்படுத்தும் வீரியத்தையும், இந்தப் படம் அடையாளம் காணவில்லை.**

•••

படத்திற்கு வசனம் எழுதியிருக்கிறார் ஜெயமோகன். கொத்தனார் வேலை பார்க்கும் தொழிலாளி தனது மகனை பி.இ படிக்க வைக்கப் போவதாக பேசுகிறார். இது அபத்தம். குறுகிய காலத்தில் வென்று காட்டும் சூப்பர் மேன்களாக நாயகர்களை சித்தரிக்கும் மனோபாவம் இது. மாடிப்படியில் தண்ணீர் குடித்ததைப் போட்டுக் கொடுத்த சக ஊழியனை கோபத்தில் அடிக்கும் லிங்கம், வீட்டில் தன்னை ஒரு துரும்பைக் கூட எடுக்க விடாமல் அவனது தந்தை சீராட்டி வளர்த்திருப்பதாகவும், குடும்பத்தின் கஷ்டத்திற்காகத்தான் இந்த அடிமைத்தனத்தை சகிப்பதாகவும் பேசுவான். கிராமப்புற ஏழைகள் உழைப்புக்கும், வசதிகள் இல்லாத வாழ்க்கைக்கும் அஞ்சுபவர்களல்ல. ஏதோ அவர்களெல்லாம் வாழ்ந்து கெட்டவர்கள் போல ஜெயமோகன் கருதுகிறார். அதே போல கனி தனது சொந்த வாழ்க்கைத் துயரங்களை அழுது கொண்டு கூறுவதிலும் யதார்த்தத்தைக் காட்டிலும், ஜெயமோகனது நடுத்தர வர்க்கத்தின் உளவியலே வேலை செய்கிறது.

'யானை இருக்கிற காட்டில்தான் எறும்பும் இருக்கும்' என்ற பொருளற்ற, காலத்தின் உணர்வற்ற, கவித்துவமான வசனமெல்லாம் நம்மை ஈர்க்கவில்லை. ஆனால் கனியின் தங்கை நாகம்மை பெரிய மனிசியாக மாறிய பிறகு, வரும் காட்சியில் தனது தங்கை லிங்கத்தை யாரென்று அடிக்கடி கேட்டதாக கனி கூறும் போது 'நீ என்ன சொன்னாய்' என்று லிங்கம் கேட்பான். ஒரு அழகான மௌனம், புன்னகைக்குப் பிறகு, 'சிரிச்சேன்' என்று கனி கூறுவதுதான் நம்மைக் கவர்ந்த ஒரே இடம். ஆக ஜெயமோகன் எழுதாமல் அமைதியாக அடங்கும் இடம் அழகாகவே இருக்கிறது.

வாழ்வில் எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும், எத்தனை கனவுகள் நசுங்கினாலும், அவற்றையெல்லாம் புறந்தள்ளி முன் செல்லும் ஒரு எளிமையான அழகான பண்பு ஏழைகளிடம் இருக்கிறது. உழைப்புதான் அந்தப் பண்பின் வெளிப்பாடு. அறியாமையில் உழலும் போது அதில் வெளிப்படும் அவலத்தையும், அறியாமை அகலும்போது அது வெளிப்படுத்தும் வீரியத்தையும், இந்தப் படம் அடையாளம் காணவில்லை.

எனினும் சென்னையின் அடையாளங்களில் ஒன்றாகி நிலைத்திருக்கும் சரவணா ஸ்டோர் என்ற பேரங்காடியின் பின்னே இருக்கும் உழைப்பாளிகளது வாழ்க்கையை, ஆடை ஆபரணங்களுக்குள்ளும் பாத்திரக் குவியல்களுக்குள்ளும் புதையுண்டிருக்கும் அவர்களது துயரத்தை, அங்காடித் தெருவின் ஒளி விளக்குகளால் நுகர்வோரின் கண்களிலிருந்து மறைக்கப்படும் அந்த 'மனிதப் பண்டங்களை', திரையரங்கின் இருளில் காண்பதற்காகவாவது 'அங்காடித்தெரு'வுக்குள் நுழையலாம்.

கனவு அவர்களிடம் உழைப்பு என்ற வர்க்கப் பண்பாய் வெளிப்படுகிறது. அதுதான் அவர்களைத் திரட்டி அந்த ஏழைமையை விரட்ட முடியுமென்ற நடைமுறை நம்பிக்கையை கம்யூனிஸ்ட்டுகளிடம் தோற்றுவித்திருக்கிறது. ஏழ்மையின் அந்த 'அழகை' இயக்குநரும், வசனம் எழுதியவரும் புரிந்து கொள்ளவில்லை.

**(வினவு இணையத் தளத்தில் வெளிவந்த கட்டுரை)**



படிப்பகம்

www.padippakam.com

# நாப்கின்

பிள்ளைத்தாச்சிப் பெண் மீது எல்லோருக்கும் ஒரு அனுதாபம் உண்டு. என்னைக்கேட்டால் பத்து மாதம் சுமக்கும் துன்பம் (அப்படி சொல்லக் கூடாதோ) ஒரு தடவை இரண்டு தடவையில் முடிந்து விடும். கருத்தரிக்காததனால் மாதம் தோறும் அனுபவிக்கும் துன்பம் இருக்கிறதே, அதுதான் ஆயுள் தண்டனை.

ஃப்ரீடம், ஸ்டேஃப்ரீ, விஸ்பர்... எல்லா நாப்கின் விளம்பரங்களிலும் துள்ளித் திரியும் பெண்கள்... எந்தக் கவலையும் இல்லாமல் தூங்கி, காலையில் முழு உற்சாகத்துடன் சிரித்தபடி படுக்கையிலிருந்து எழும் பெண்கள்...

மெடிக்கல் ஷாப்களின் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்த நாப்கின்களை தூரத்திலிருந்தே ஏக்கத்துடன் பார்த்தபடி செல்லும் ஏழைச் சிறுமிகளைப் பார்க்கிறேன். இந்த ஏக்கத்தை நான் அனுபவித்ததில்லை. நான் பருவத்துக்கு வந்த நாளில் இதெல்லாம் இருந்ததா என்றே எனக்குத் தெரியாது.

தாமதமாகப் பூப்பெய்துவது ஏழ்மை பெண்ணுக்கு அளிக்கும் வரப்பிரசாதம் என்றுதான் சொல்லவேண்டும். எனக்கு அப்போது வயது 16. அரை வயிறு சோறு. அதுவும் ஒரு நாளைக்கு ஒரு வேளை. அதுவும் நிச்சயமில்லை. பள்ளி இறுதியாண்டு. அரைப் பரீட்சை நெருங்கிய நேரம். என்ன ஏது என்று அப்போது புரியவில்லை. வீட்டில் என்னை வைத்து ஒரு சின்ன கொண்டாட்டம். கொஞ்சம் சந்தோஷமாக இருந்தது.

முதல் ஆறு மாதங்களுக்கு வலி எதுவும் இல்லை. அப்புறம் அந்த நாட்களில் உதிரப் போக்கு அதிகமானது. இரண்டு கி.மீ நடந்து பள்ளிக்கூடம் போகவேண்டும். பஸ்ஸுக்கு காசு கிடையாது. காலையில் கிளம்பினால் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பி வரும் வரை தாக்குப் பிடிக்கின்ற அளவுக்கு பழந்துணிதான் பாதுகாப்பு. ஈரமான பகுதியைக் கீழே மாற்றி, உலர்ந்த பகுதியை மேலாக மாற்றி மடித்து வைத்துக் கொண்டு நடக்க வேண்டும்.

நல்லவேளையாக அது பெண்கள் பள்ளி. அரசுப் பள்ளியின் கழிப்பிட வசதி பற்றிக் கேட்க வேண்டுமா? தண்ணீர் இருக்காது. 10 நிமிட இடைவெளியில் வகுப்பில் உள்ள எல்லாப் பெண்களும் சென்று வரவேண்டும். இடையில் கேட்டால் டீச்சர் திட்டுவார்களோ என்று பயம். நடந்து வீட்டுக்கு வரும்போது ரத்தக் கசிவினால் ஈரமான துணி இருபக்கத் தொடையையும் உரசிப் புண்ணாக்கி இருக்கும்.

வீட்டுக்கு வந்தால் கழிப்பறை எப்போதும் மூடியே இருக்கும். நீண்ட காம்பவுண்டின் கோடியில் பத்து வீட்டுக்கும் பொதுவாக ஒரு கழிப்பறை. குழாய் கிடையாது. 2,3 முறை வந்து தண்ணீரை எடுத்துப் போக வேண்டும். இரவிலும் போக வேண்டியிருக்கும். வீட்டு ஓனரின் மகன் ஒரு பொறுக்கி. இருட்டில் வந்து மார்பில் கை வைப்பான். துணைக்கு அம்மாவைக் கூப்பிடலாம் என்றால், தம்பியோ தங்கையோ அம்மாவிடம் பால் குடித்துக் கொண்டிருப்பார்கள். அப்பாவைக் கூப்பிடலாம். இருந்தாலும் கூச்சம்.

பள்ளி முடிந்து ஐ.ஐ.டி.யில் சேர்ந்தேன். இடுப்பெலும்பில் வலி ஆரம்பித்தது. இடுப்பெலும்பின் சுற்று வட்டம் முழுவதும் அதன் நடுப் பகுதியில் ஒரு கம்பியை விட்டுக் குடைவது போன்றிருக்கும். வயிற்றின் முன்பக்கம் கீழ்ப்பகுதியில் தொடங்கி சிறுநீர்த்துவாரம் வரை அழுத்தும் வலி, தலை பாரம், கண்ணை இமை அழுத்தும். இடையிடையே வாந்தி, 4 நாட்களுக்கு அதிகமான உதிரப்போக்கு, எப்போதும் வாந்தி வருவது போன்ற உணர்வு, சாப்பிடப் பிடிக்காது, சாப்பிடவும் முடியாது, குளிர்ச்சியாக ஒரு சோடாவோ குளிர்பானமோ குடித்தால் கொஞ்சம் இதமாக இருக்கும். முடியாது. வறுமையில் அது ஒரு ஆடம்பரச் செலவு. படுத்துக் கொண்டு அம்மா, அம்மா என்று அரற்றுவேன். உருளுவேன். பரால்கான் மாத்திரை சாப்பிட்டு ஓரிரு மணி நேரங்களில் அரற்றலும் உருளலும் குறைந்து அசையாமல் படுத்து கொஞ்ச நேரம் அரை உறக்கத்திலிருப்பேன். அந்த 4 நாட்கள் முடிந்து விட்டால்.. அதுதான் சுதந்திரம்!

மாத விலக்குக்கு ஒரு வாரம் இருக்கும் போதே பயமாக இருக்கும். வெறுப்பும் விரக்தியும் தோன்றும். ஆனால் யாரிடம் சொல்வது? எங்கே ஓடி ஒளிவது? நாள் நெருங்க நெருங்க செத்துப் போய் விட்டால் நல்லது என்று தோன்றும். வலி குறைந்தவுடன் இன்னும் மூன்று வார காலம் வலியின்றி இருப்போம், அடுத்த முறை வலி வருவதற்குள் செத்துப்போய் விட வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன்.

அம்மாவுடன் ஈ.எஸ்.ஐ ஆஸ்பத்திரிக்கு போனேன். இந்த வலிக்கு மருந்தில்லை, கல்யாணமானால் சரியாகி விடும் என்றார் டாக்டர். திருமணம் என்றால் மாலைதானே போடுகிறார்கள், அந்த மாலையை இப்போதே போட்டுக் கொண்டால்? அந்த அளவுக்






படிப்பகம்

www.padippakam.com

குத்தான் அன்றைக்கு விவரம் தெரியும். அதையும் அம்மாவிடம் சொல்ல பயம்.

மாதங்கள் செல்லச் செல்ல உபத்திர வம் அதிகரித்தது. நான் படித்தது பெண் களுக்கான ஐ.ஐ.டி.தான் என்றாலும் சில பாடங்களுக்கு ஆண் லெக்சரர்கள் வரு வார்கள். ஒரு வகுப்பு முடிந்து அடுத்த வகுப்புக்கு ஆங்கில லெக்சரர் வருவதற் குள் கழிவறைக்குச் சென்று வந்துவிட எண்ணி அவசரமாய் வெளியேறினேன். அப்போதும் துணி தான் உபயோகம். துணி நழுவிக் கீழே விழுந்தது. லெக்சர ரின் கண்ணிலிருந்து அது தப்பியிருக் காது. கூசிப்போனேன்.

1977, 78 இருக்கும். சானிட்டரி நாப் கின் பற்றி அப்போது வாரப் பத்திரிக் கைகளில் பார்த்திருக்கிறேன். வகுப்பில் கொஞ்சம் வசதியான பெண்களும் இருந்தனர். தோழி சாரதாவிடம் கேட்ட தற்கு எலாஸ்டிக் பெல்ட் தாங்கி நிற்கும் நாப்கின் இருப்பதாகச் சொன்னாள். வீட் டில் காசு கேட்க முடியாது. வீட்டிலிருந் தது கல்லூரிக்கு வர இரண்டு பஸ் மாற வேண்டும். மொத்தம் 7 கி.மீ தூரம். ஒரு பஸ்ஸுக்கு மட்டும்தான் வீட்டில் காசு தருவார்கள். டிக்கெட் விலை 25 பைசா. கொஞ்சம் சீக்கிரம் கிளம்பி மொத்த தூரத்தையும் நடந்து காசு சேர்த்தேன். அதில் பெல்ட் தாங்கி நிற்கும் நாப்கினை சாரதா வாங்கித் தந்தாள். துணியை ஒப் பிடுகையில் மிகவும் மெலிதாக பார்க்க அழகாக இருந்தது. முதல் முறை உப யோகித்து பத்திரமாக உறையில் சுற்றி வீட்டுக்கு எடுத்து வந்தேன். இவ்வளவு சுலபமான வழி நமக்கு தெரியவில் லையே என்ற நினைத்துக் கொண்டேன். சோப் போட்டுக் கசக்கினேன். நாப்கின் துண்டு துண்டானது.

யூஸ் அண்டு த்ரோவெல்லாம் அப் போது எனக்குத் தெரியாது. ஒருநாள் சுதந்திரத்தின் விலை எத்தனை கிலோ மீட்டர் நடை? இப்போது நினைத்தாலும் கொஞ்சம் வலிக்கத்தான் செய்கிறது.

படிப்பு முடிந்து ஒரு எலக்ட்ரிகல் சாமான் கடையில் வேலை. மாதம் 100 ரூபாய் சம்பளம். தம்பி தங்கைகளுக்கு ஒரு வேளை சாப்பாடு நிச்சயம் ஆனது. எனக்கு அளவு கடந்த நிம்மதி. காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை வேலை. வீட்டிலிருந்து கடை 5 கி.மீ. தூரம். மாதத்தின் முதல் 10 நாட்கள் பஸ் ஸில். மீதி நாட்கள் நடை. எனது நெருங் கிய தோழியும் அங்கு வேலைக்கு சேர்ந்தாள். துணைக்கு ஆள் வந்தது எனக்கு பெரிய பலம் போல இருந்தது. காலையிலும் சரி, மாலையிலும் சரி,

**மெடிக்கல் ஷாப்களின் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்த நாப்கின்களை தூரத்திலிருந்தே ஏக்கத்துடன் பார்த்தபடி செல்லும் ஏழைச் சிறுமிகளைப் பார்க்கிறேன். இந்த ஏக்கத்தை நான் அனுபவித்ததில்லை. நான் பருவத்துக்கு வந்த நாளில் இதெல்லாம் இருந்ததா என்றே எனக்குத் தெரியாது.**

•••

ஒரு டீ குடிக்க வேண்டும் என்றால், ஓனர் சொல்வாரா என்று காத்திருக்க வேண்டும். டீ சொல்வதும் சொல்லாத தும் வாங்கி வரச்சொல்லும் நேரமும் அவர்களது மூடைப் பொறுத்தது. மாத விலக்கு சமயத்தில் தொண்டையும் நாக் கும் உலர்ந்து ஒரு டீ கிடைக்காதா என்று தவிக்கும்.

இந்த சமயம் பார்த்து ஸ்டாக் எடுக் கும் வேலையும் வரும். ஏணியில் ஏறி, உயரமான ஷெல்ஃபுகளில் இருக்கும்





படிப்பகம்

www.padippakam.com

**மாத விலக்குக்கு ஒரு வாரம் இருக்கும் போதே பயமாக இருக்கும். வெறுப்பும் விரக்தியும் தோன்றும். ஆனால் யாரிடம் சொல்வது? எங்கே ஓடி ஒளிவது? நாள் நெருங்க நெருங்க செத்துப்போய் விட்டால் நல்லது என்று தோன்றும்.**

•••

பொருட்களை இறக்கி, எண்ணி எழுதி தூசி தட்டி வைக்க வேண்டும். எத்தனை முறை ஏறி இறங்குவது? நானும் அவளும் சேர்ந்து தான் செய்வோம். வலி உயிர் போகும். ஸ்டாக் எடுக்கும் வேலையை ஆண்களைச் செய்யச் சொல்லுங்கள் என்று அவள் ஓனரிடம் ஒருநாள் தைரியமாக சொல்லி விட்டாள். அவள் சம்பளத்தை நம்பி குடும்பம் இல்லை. எனக்கோ தம்பி தங்கைகளை நினைத்தால் தைரியம் வராது.

ஒரு நீளமான பழைய வீட்டைத் தான் கடைக்காக வாடகைக்கு எடுத்திருந்தார்கள். கழிவறைக்கு மேலே கூரை கிடையாது. நின்றால் பக்கத்து மாடி வீடு, கடைகளில் உள்ளவர்களுக்குப் பார்க்க முடியும். அங்கும் தண்ணீர்ப் பிரச்சினை. மாதவிலக்கின் இரண்டாம் நாள் ஞாயிற்றுக் கிழமையாக இருந்தால் லீவு போட வேண்டாம். மற்ற நாட்களாக இருக்கும் பட்சத்தில் லீவு போடுவேன். ஓனர் கோபமாகக் கேள்வி கேட்பார். அழுவதற்கு என் தன்மானம் இடம் கொடுத்ததில்லை. வேலை செய்து கொண்டு அழுகையை அடக்கிக் கொள்வேன். ஒருநாள் இரண்டாவது பார்ட்னரின் மனைவி கடைக்கு வந்தார். வசதியான குடும்பத்திலிருந்து வந்தாலும் மனிதாபிமானி. நான் ரொம்பவும் சோர்ந்திருப்பதைப் பார்த்து, ''ஏன் இப்படி இருக்கிறாய்'' எனக் கேட்டார். 'என்ன செய்வது, செத்துப்போய் விட வேண்டும் என்று தான் நினைக்கிறேன், ஆனால் சாக முடியவில்லை' என்று சொல்லி விட்டேன். அப்போது எனக்கு வயது 20. மிகவும் வருத்தப்பட்டார்.

ஒரு பெண் டாக்டரிடம் அழைத்துப் போனார். மருந்துகள் சாப்பிட்டும் வலி நிற்கவில்லை. ''வலி நிவாரணிகள் தவிர வேறு வழி இல்லை, வேறு சில மருந்துகள் உள்ளன, ஆனால் அதையெல்லாம் தொடர்ந்து உபயோகித்தால் வேறு பக்க விளைவு வரும். திருமணமானால் படிப்படியாக சரியாகி விடும்'' என்றார். அன்று திருமணம் என் தேவையாக இல்லை. குடும்ப நிலைமை அப்படி. ''கர்ப்பப் பையை எடுத்து விட்டால் இந்தப்பிரச்சினை இருக்காது என்கிறார்களே டாக்டர், செய்வீர்களா'' என்றேன். ''இந்த வயதில் அதைச் செய்ய முடியாதும்மா'' என்றார் சோகம் கலந்த புன்னகையுடன். அப்புறம் நான் டாக்டரை பார்ப்பதில்லை. நான் லீவு போட்டால் ஓனரும் என்னைத் திட்டுவதில்லை.



அப்புறம் கொஞ்சம் நல்ல வேலை கிடைத்தது. எனினும் நாப்கின் வாங்கும் அளவு வசதி கூடிவிடவில்லை. துணிக்கு பதிலாக கட்டுக்கட்டாக பஞ்சு. வலி நீடித்தாலும், தொடை உரசிப் புண்ணாவது பெரிதும் குறைந்தது. அன்று அதுவே பெரிய சந்தோஷம்.

பின்னர் திருமணம். அந்த நாட்களில் நான் பட்ட வேதனையைப் பார்த்து அவரது கண்ணில் நீர் வழிந்தது. வலியை மறக்கும் அளவுக்கு அதுவே சந்தோஷமாகவும், பெருமையாகவும் இருந்தது. இரண்டாவது மாதம் சற்றே சோகமாக இருந்தார். மூன்றாவது மாதம் அந்த சமயத்தில் சினிமாவுக்குக் கிளம்பி விட்டார். கேட்டதற்கு 'ஆமாம், உனக்கு வலியாக இருக்கும்போது நான் என்ன செய்வது? நானாவது சினிமாவுக்குப் போய் பொழுதுபோக்கிக் கொள்கிறேன்' என்றார். துக்கம் தொண்டையை அடைத்தது. என் வலியை அவரால் வாங்கிக் கொள்ள முடியாது. ஆனால் அவர் இது போன்றொரு அவஸ்தையிலிருக்கும்போது நான் சந்தோஷம் தேட நினைத்திருப்பேனா?

வலியுடன் இரவு நேரத்தில் வாந்தி வருவதும் வாடிக்கையாகியிருந்தது. திருமணத்துக்கு முன் அம்மாவோ, தம்பியோ, தங்கையோ வந்து முதுகை நீவி விடுவார்கள். முடிந்தவுடன் கொஞ்சம் வெந்நீர் கொடுப்பார்கள். இதமாக இருக்கும். ஒருநாள் இரவில் வாந்தி வந்தது. நடுநிசி. அவரை எழுப்பி விட்டு அவசரமாக பாத்ரூமுக்கு ஓடினேன். வாந்தி எடுக்கும்போது முதுகை நீவி விடும் கை இல்லை. திரும்பி வந்தேன். நன்றாக தூங்கிக் கொண்டிருந்தார். மனம் கனத்தது. நாம் கூப்பிட்டது கூடத் தெரியாமல் அசந்து தூங்குகிறார் என்று சமாதானப்படுத்திக் கொண்டேன். ''நான் கூப்பிட்டது கூடத் தெரியாமல் அசந்து தூங்கி விட்டீர்களா?'' என்று கேட்டு விட்டு ஆமாம் என்ற பதிலுக்காக காத்திருந்தேன். ''நான் தூக்கத்தை விட்டு வருமளவிற்கு இது என்ன பிரச்சினை, எப்பவும் வரும் வாந்தி தானே'' என்றார். வலித்தது. இந்த மாதிரியான வலிகளும் கூட பெண்களுக்கே உரியவை. இல்லையா?



படிப்பகம்

www.padippakam.com

அவர் கொடுமையான ஆணாதிக்க வாதியெல்லாம் இல்லை. மனைவியின் குடும்பத்தையும் தன் குடும்பமாக நினைத்து உதவும் அளவுக்கு நல்லவர். கை நீட்டாதவர். இருந்தாலும்.. எப்போ தாவது சொற்களால் மட்டுமே சுடுகின்ற சராசரி ஆண். நான் சொன்ன சம்பவம் ஆண்களின் மனதைத் தொடுமா என்று தெரியவில்லை. சின்ன உதாசீனங்களை நான் பெரிதுபடுத்துவதாகக் கூட நினைக்கலாம். ஆனால் ஒரு தலைவலி யைச் சமாளிப்பதற்குக் கூட மனைவி யின் துணையைத் தேடும் ஆண்கள், வீக்கர் செக்ஸ் என்று பெண்களை சொல் கிறார்களே, சிரிப்புதான் வருகிறது.

இதைப் படிக்கின்ற ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்கள் சிலருக்கும் கூட கொஞ்சம் அலுப்பாக இருக்கலாம். இன் றைய நடுத்தர வர்க்கப் பெண்களுக்கு 'ஃப்ரீடம்' இருக்கிறது. எனவே 'கேர் ஃப்ரீ'யாகவும் இருக்கலாம். ஆனால் இன்றைக்கும் சாதாரண ஏழைப்பெண் களுக்கு இது பிரச்சினைதான். இதை பெண்ணின் பிரச்சினை என்று சொல் வதா, ஏழையின் பிரச்சினை என்று சொல்வதா தெரியவில்லை.

குறிப்பிட்ட நாட்களில் லீவு போட் டால், ஆண்களின் ஏளனமான சிரிப்பு, இதை சாக்கு வைத்துக் கொண்டு வேலையை தட்டிக் கழிக்கிறார்கள் என்று கிண்டல், கடமையை வலியுறுத் தும் மேலதிகாரிகள், அவர்களிடம் தனது பிரச்சினையைச் சொல்வதற்கு தன் மானம் இடம் கொடுக்காததால் தவிக் கும் பெண் ஊழியர்கள்... நடுத்தர வர்க் கத்துப் பெண்களும் கூட அன்றாடம் இதையெல்லாம் சந்தித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

சமீபத்திய தினமணியில் பார்த் தேன். இந்தியாவில் 65 சதவீத வீடுக ளில் கழிப்பறை வசதி கிடையாது என்று ஒரு கட்டுரை. கிராமமோ நகரமோ, காலைக் கடனைக் கழிப்பதற்கே விடிவ தற்கு முன் பெண்கள் புதர்களைத் தேடி ஓட வேண்டும். பிறகு இருட்டும் வரை யில் காத்திருக்க வேண்டும்.

பொறுக்க முடியாத வலி என்பது என்னைப் போன்ற சில பெண்களைப் பிடித்த சாபக்கேடு. ஆனால் அந்த நாட்க ளின் உதிரப்போக்கும், களைப்பும் பெண்கள் அனைவருக்கும் உடன் பிறந் தவை. தாங்க முடியாத போது இப்போ தெல்லாம் நான் லீவு போட்டு விடுகி றேன். அலுவலகத்தில் தரமான பாத்ரூம் இருக்கிறது. எனக்கு வாழ்க்கை மாறியி ருக்கிறது.

**இதைப் படிக்கின்ற ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்கள் சிலருக்கும் கூட கொஞ்சம் அலுப்பாக இருக்கலாம். இன்றைய நடுத்தர வர்க்கப் பெண்களுக்கு 'ஃப்ரீடம்' இருக்கிறது. எனவே 'கேர் ஃப்ரீ'யாகவும் இருக்கலாம். ஆனால் இன்றைக்கும் சாதாரண ஏழைப் பெண்களுக்கு இது பிரச்சினைதான்.**

•••

ஆனால் வீட்டு வேலை செய்யும் பெண்கள், கடைகளில் நாள் முழுவதும் நின்று கொண்டிருக்கும் பெண்கள், கார்ப்பரேசன் பள்ளிகளின் படிக்கும் சிறுமிகள்.. இவர்கள் யாருக்கும் வாழ்க்கை மாறவில்லை. என்னைப் போல இவர்கள் விவரம் தெரியாத அச டுகள் இல்லை என்றுதான் நினைக்கி றேன். பெண்களுக்கு ''ஃப்ரீடம்' இருக்கி றது என்பது இவர்களுக்குத் தெரிந்திருக் கும். அந்த 'ஃப்ரீடம்' தங்கள் கைக்கு எட் டாது என்பதும் புரிந்திருக்கும்.

இடுப்பு எலும்பைக் குடையும் அந்த வலியுடன் நாப்கின் வாங்குவதற்காக போன மாதம் கடையில் நின்று கொண்டி ருந்தேன். சாலை ஓரத்தில் மழைநீர் வடி கால் வேலை நடந்து கொண்டிருந்தது. ஒரு 16 வயதுச் சிறுமி கலவைக்கு ஜல்லி அள்ளிக் கொண்டிருந்தாள். கறுப்பான பொலிவான முகம். கொஞ்சம் சாயம் போன பாலியெஸ்டர் பட்டு பாவாடை சட்டை. வயசுக்கு வந்ததைக் கொண் டாட வாங்கித் தந்ததாக இருக்குமோ? நானும் அந்த நாளில் இப்படி ஏதோ ஒரு புதுப் பாவாடை சட்டை போட்ட ஞாபகம்.

கருங்கல் ஜல்லியை சட்டியில் அள் ளிப்போட்டு விட்டு சுற்றுமுற்றும் பார்த் தாள். தூக்கி விட ஆள் இல்லை. அவள் யாரையும் கூப்பிடவும் இல்லை. உதட்டை மடித்துக் கடித்துக் கொண்டு அந்தச் சட்டியைத் தூக்கினாள். எனக்குச் சுரீர் என்று வலித்தது.

அழுகையை அடக்கிக் கொண்டு, எலக்டிரிகல் கடையில் ஏணியில் ஏறி ஸ்டாக் எடுத்த அந்த நாள், நினைவுக்கு வந்தது. கல்லைக் கொட்டிவிட்டு அடுத்த நடைக்கு திரும்பிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண். பார்த்தேன். கொஞ்சம் கர்வமாகவும் இருந்தது.

**● சங்கரி**

***தோழர் சங்கரி ஒரு ம.க.இ.க. ஆதரவாளர். தனியார் நிறுவனத்தில் வேலை, சென்னையில் குடும்பத்துடன் வாழ்கிறார்.***

**(வினவு இணையதளத்தில் வெளிவந்த கட்டுரை)**





படிப்பகம்

www.padippakam.com

# தமிழக மக்களுக்கு மின்தடை! பன்னாட்டுநிறுவனங்களுக்கு தடையில்லை!!

கொளுத்துகிற இந்தக் கோடை இரவை நிம்மதியாகக் கழிக்க குறைந்த பட்சம் நீங்கள் ஒரு நகரவாசியாக மட்டுமே இருக்க வேண்டும். அதுவும் சென்னை மாதிரியான பெரு நகரங்களில் பிறந்திருந்தால் மட்டுமே ஆறு மணி நேர உறக்கம் சாத்தியம். நகர்ப் புறங்களுக்கப்பால் கிராமப்புறப் பகுதியில் நீங்கள் இருந்தால் ஓடிக் கொண்டிருக்கிற விசிறி பாதியிலேயே நின்று பல மணி நேரம் உங்கள் இரவுத் தூக்கத்தை பலிவாங்கி விடும். இப்படித்தான் கடந்த பல மாதங்களாக தமிழக மக்களின் வாழ்வை அன்றாடம் தாக்கி அதிர்ச்சி ஷாக் கொடுத்துக் கொண்டிருக்கிறது மின் தட்டுப்பாடு.

தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்வதுதான் மின் தட்டுப்பாட்டிற்குக் காரணம் என்று கருணாநிதி மீது குற்றம் சுமத்துகிறார் ஜெயலலிதா. அதிமுக ஆட்சியில் போதுமான மின் திட்டங்கள் செயற்படுத்தப்படாததே இந்நிலைக்குக் காரணம் என்று பழியை ஜெயலலிதா மீது திருப்புகிறார் கருணாநிதி. ஆனால் மக்களின் மின்சாரத்தைத் திருடி அந்நிய முதலாளிகளுக்கு வாரி வழங்கிவிட்டு மக்களை இருளில் தள்ளி கபடியாடுகிறார்கள் கருணாநிதியும் ஜெயலலிதாவும்.

நகரம், பெரு நகரம், கிராமம், சேரி, பெரிய கிராமம், பேரூராட்சி என விதவிதமாக பிரித்து வகை வகையாக மின் தடையை கொடுக்கிறது தமிழக அரசு. குறைந்தது மூன்று மணி நேரத்தில் துவங்கி ஆறு மணிநேரம் வரை அறிவிக்கப்படாத மின் வெட்டு அமுலாகிறது. சில இடங்களில் சீரமைப்புப் பணி நடைபெறுகிறது என்று அறிவித்தும் செய்கிறார்கள். பின்னலாடை ஏற்றுமதியில் குறிப்பிடத்தக்க பங்கை வகிக்கும் திருப்பூரில் மட்டும் மூன்று மணி நேரம் மின் தடை. ஏற்கனவே மூலப்பொருட்களின் விலையேற்றத்தாலும் பன்னாட்டு நிறுவனங்களின் நெருக்கடியாலும் விழி பிதுங்கி நின்ற திருப்பூர் சிறு நிறுவனங்கள் மாதக்கணக்காக கம்பெனியை இழுத்து மூடிவிட்டுச் செல்லும் நிலை. இந்தத் தொழிலை நம்பியே காலத்தைக் கழித்து வந்த தொழிலார்களோ பட்டினியின் விளிம்பில்.

## சென்னையில் மின்வெட்டு இல்லையா?

ஒரு வழியாக கிராமப்புறங்களில் மின்வெட்டு இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டிருக்கிறார் கருணாநிதி. ஆனால் சென்னையில் மின்வெட்டிலிருந்து விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று கூசாமல் பொய் சொல்கிறது மின்வாரியம். ஆனால் பராமரிப்புக் காரணங்களைக் காட்டி சென்னை நகரின் பெரும்பாலான இடங்களில் நாள் தோறும் நான்கு மணி நேரம் வரை மின் வெட்டு கடைபிடிக்கப்படுகிறது.

ஆனால் போட் கிளப், போயஸ் கார்டன், கோபாலபுரம் பகுதியில் தடையற்ற மின்சாரம், அதுவே உழைக்கும் மக்கள் அதிகம் வசிக்கும் திருவெற்றியூர், எர்ணாவூர், வியாசர்பாடி, காசிமேடு பகுதியில் பல மணி நேரம் மின் தடை என்று வசதிக்கேற்ப மக்களை வாட்டுகிறது அரசு.

காஞ்சிபுரம், தஞ்சை, கும்பகோணம், ஈரோடு, போன்ற பகுதிகளில் விசைத்தறி தொழிலாளர்கள் விழி பிதுங்கி நிற்கிறார்கள். அறிவிக்கப்படுகிற மின் தடை என்பது வெறுமனே மின் தடையாக மட்டும் இல்லை. -ல் விலையேற்றத்திற்கும் அதுவே காரணமாகி விடுகிறது. தருமபுரி மாவட்டத்தில் மட்டும் அன்னாசாரம். பாரதிபுரம், பாபிரெட்டிப் பட்டி போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான விசைத்தறி நெசவாளர்களுக்கும், தறிகளை நம்பி காலத்தைக் கழிக்கும் கூலித்தொழிலாளர்களுக்கும் கஞ்சித் தொட்டி திறக்கும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

விசைத்தறி நெசவாளர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 500 யூனிட் மின்சாரத்தை இலவசமாக இது வரை வழங்கி வந்தது தமிழக அரசு. விசைத்தறி உள்ளிட்ட நலிவடையும் எந்தத் தொழிலுக்கும் மானியம் என்றோ, இலவசம் என்றோ எந்த சலுகைகளும் காட்டாதே என்று மத்திய மாநில அரசுகளுக்கு பன்னாட்டு முதலாளிகள் உத்தரவிடுவதும் அதை அவன் சொல்வதற்கு முன்னமே இவர்கள் செய்து முடிப்பதும்தான் நடந்து கொண்டிருக்கிற நிலையில் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தையும் நிறுத்தக் கோரின பன்னாட்டு நிறுவனங்கள்.

ஒவ்வொரு ஆண்டும் இந்திய அரசு பட்ஜெட் போடுவதற்கு முன்னால் ஆலோசனை நடத்தும் இந்திய தொழில் கூட்டமைப்பினரும் இத்தகைய மானியங்களை நிறுத்துங்கள் என்றே பரிந்துரைத்திருந்தனர். இந்நிலையில்தான் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தை அரசு நிறுத்தி விட்டதாக செய்தி வெளியானது. ஆனால் மின் வாரியமோ இலவச மின்சாரத்தை நிறுத்தவில்லை என்று மறுப்பறிக்கை வெளியிட்டது. ஆமாம் உண்மைதான், இலவச மின்சாரத்தை நிறுத்தவில்லை பதிலுக்கு மின்சாரத்தையே நிறுத்தி விட்டார்கள்.

நாமக்கல் குமாரப்பாளையத்தில் சுமார் இருபதாயிரம் விசைத்தறி நெசவாளர்கள் மின்வெட்டைக் கண்டித்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். நாமக்கல் நகரமே அந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தது. ஆனால் இன்றுவரை அங்கு விசைத்தறிகள் இயங்கவில்லை. அல்லது மின்சாரம் வருகிற நேரத்திற்காக காத்திருந்து நெய்வதால் உற்பத்தியின் முழு அளவையும் எட்ட முடியவில்லை. ஆனால் உழைக்கிற தொழிலாளிக்கு கூலியும் கொடுத்து முழு வேலையையும் பெற முடியாமல் பலரும் மின் வெட்டு சரியாகட்டும் மீண்டும் நெய்யலாம் என வேறு வேலைகளுக்குச் செல்லத் துவங்கி விட்டார்களாம்.

காஞ்சிபுரம், கன்னியாகுமரி என எல்லா ஊர்களிலும் எல்லா தொழில்களும் பாதிக்கப்படுகின்றது. கரையோர மாவட்டங்களான சென்னை, கடலூர், நாகை, தஞ்சை, இராமே வரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மீன் பிடிப்பும், அதன் ஏற்றுமதியும் பிரதான தொழில்கள். ஆனால் மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் பன்னாட்டு நிறுவனங்கள் வாங்கும் மீனை பதப்படுத்த பிரமாண்டமான குளிரூட்டிகளை ஜெனரேட்டர்களைக் கொண்டு இயக்குகிறது. ஆனால் உள்ளூர் சில்லறை வணிகர்கள் ஆயிரக்கணக்கானோர், வாங்



படிப்பகம்

கிய மீனை பதப்படுத்த முடியாமல் திண்டாடி நிற்கிறார்கள்.

சிறிய தொழில் நிறுவனங்கள், சிறு வியாபாரிகள் என எல்லா தரப்பையுமே தொழிலை விட்டுத் துரத்துகிறது மின்வெட்டு. ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களை முதலில் நடத்தி விட்டு பின்னர் மசிந்து கொடுக்காத அரசைப் பார்த்து சலித்து விட்டு நகர்ந்து சென்று விடுகின்றார்கள் இவர்கள்.

**சொல்லப்பட்ட காரணங்களும்.... பொய்களும்.....**

நிம்மதியாக தொழில் செய்ய முடியவில்லை, வேலை இல்லை, வீட்டிற்கு வந்தாலும் கரண்ட் இல்லை இதுதான் இன்றைய கிராமத்து மக்களின் நிலை. மின்சாரத்தை தடுக்காதே.... எங்கள் தொழிலை பறிக்காதே... என்று அவர்கள் அரசை நோக்கிக் கேட்டால் அரசு சொல்கிறது காற்று வரட்டும் மின்சாரம் தருகிறேன் என்று. கன்னியாகுமாரி மாவட்டத்தின் ஆரல்வாய்மொழியை ஒட்டிய திருநெல்வேலி மாவட்ட எல்லையில் உள்ள குமாரபுரம், லெவிஞ்சிபுரம், காவல்கிணறு, பணகுடி, தண்டையார்குளம், சங்கநேரி, ஊரல்வாய்மொழி, இருக்கன்துறை, செட்டிக்குளம், மதகநேரி, வடக்கன்குளம், கோலியாங்குளம், யாக்கோபுரம் என ஆரல் கணவாயின் காற்று வீசும் பகுதியை ஒட்டிய கிராமங்களில் இந்த காற்றாலை மின் விசிறி வைக்கப்படுகிறது. சுமார் 3,500 மின் விசிறிகள் இப்பகுதியில் உள்ளதால் இதற்கு இணையான தொழிலாக வளர்ந்து நிற்கிறது ரியல் எஸ்டேட் தொழில்.

பத்து செண்ட் நிலத்தை பல லட்சம் செலவு செய்து வாங்கி ஒன்றரை கோடி ரூபாயில் காற்றாலை மின் விசிறியும் வைத்து விடுகிறார்கள்.. சினிமா நடிகர்களுக்கோ, தொழிலதிபர்களுக்கோ இந்தக் கோடிகள் ஒரு பிரச்சனையில்லை. காற்றிலிருந்து வரும் மின்சாரத்தை விட மின்சாரத்தின் மூலம் கிடைக்கும் சலுகைகள் தாராளம் என்பதால் அவர்கள் காற்றாலை மின் உற்பத்தியில் ஈடுபடுகிறார்கள்.

பெருமளவு தனியார் நிறுவனங்களாலும் பிரபலங்களாலும் தயாரிக்கப்படும் இந்த மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு ஏழு ரூபாய் கொடுத்து வாங்குகிறது அரசு. அதே நேரம் அரசுக்கு பல்லாயிரம் கோடி லாபம் ஈட்டிக் கொடுக்கும் நெய்வேலி மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு 2.50 காசுகள் மட்டுமே கொடுத்து வாங்குகிறது.



பன்னாட்டு நிறுவனமான செயிண்ட் கோபெயின் தொழிற்சாலை.

ஆனால் போதிய பராமரிப்பின்மை, ஊழியர்களுக்கு தொழில் உத்திரவாதமின்மை போன்ற பிரச்சனைகளால் நெய்வேலி நிலக்கரி சுரங்கத் தற்காலிக தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கானோர் அன்றாட வாழ்வுக்கே தள்ளாடி நிற்கிறார்கள். தனியார் காற்றாலை முதலாளிகளிடம் இருந்து ஏழு ரூபாய் கொடுத்து மின்சாரத்தையும் வாங்கி விட்டு அவர்களுக்கு ஏராளமான வரிச்சலுகைகளையும் கொடுக்கிறது அரசு.

இந்நிலையில்தான் மின் வெட்டு தொடர்பாக பல்வேறு தொழிலாளர்கள் போராட அதற்கு பதில் சொன்ன மின் வாரியமோ ''காற்றாலைகளின் மின் உற்பத்தி 400 மெகாவாட்டாக குறைந்தது தான் மின் தட்டுப்பாட்டிற்கு காரணம்'' என்று காற்றின் மீது பழியைப் போட்டது. சமீபத்தில் காற்றும் புயலும் கடுமையாக வீசியதால் வாழை, சோளம் பயிரிட்ட விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு. இப்போது முதல்வர் சொல்கிறார் காற்று வீசி விட்டது ஆகவே மின் வெட்டை கிராமப்புரங்களில் மூன்று மணி நேரத்தில் இருந்து இரண்டு மணி நேரமாக குறைத்து விட்டோம் என்று.

மக்களுக்கு போலியான மின் தட்டுப்பாட்டை உருவாக்கிய இந்திய ஆளும் வர்க்கங்கள் அடுத்து மக்களுக்கு தடையற்ற மின்சாரத்தை வழங்கப் போகிறோம் என்று பன்னாட்டு நிறுவனங்களை மின் உற்பத்தியிலும் அனுமதித்து விட்டது. ஏற்கெனவே பிரான்ஸ் நாட்டின் அரேவா என்னும் அணு சக்தி நிறுவனம் இந்தியாவுக்கு இன்னும் சில மாதங்களில் 300 டன் யுரேனியம் சப்ளை செய்வதாகக் கூறி பெரும் காண்ட்ராக்ட்டை வாங்கியுள்ளது. இது போக தலா 1,600 மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட 6 அணு உலைகளை இந்தியாவில் அமைப்பதற்கான பேச்சுவார்த்தையையும் அரேவா நிறுவனம் நடத்தி வருகிறது. பிரிட்டன், கனடா, ஜப்பானிய நிறுவனங்கள் இந்திய மக்களிடம் உருவாக்கப்பட்டுள்ள போலி மின் தட்டுப்பாட்டை ஒட்டி களமிறங்கக் காத்திருக்கின்றன.

தோஷிபா, கனடா அணுசக்தி லிமிடெட், எஸ் என்சி லவாலின், காமேகோ கார்ப்பரேசன் ஆகிய பெரும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் கமல்நாத்தை சந்தித்துப் பேரமும் பேசி முடித்து விட்டார்கள்.. அமெரிக்காவைச் சேர்ந்த பன்னாட்டு நிறுவனமான வெஸ்டிங் ஹவுஸ் எலக்ட்ரிக் கம்பெனி, இந்தியாவில் பல லட்சம் கோடி டாலர் அளவிற்கு அணு சக்தி வியாபாரத்தை மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாக, மும்பையில் தெரிவித்திருக்கிறது. இந்தியாவின் மின்சாரம் தயாரிப்பதற்கான பிரமாண்ட அணு உலைகளை அமைக்கப் போவது இந்த நிறுவனம்தான். இன்றைய மின் வெட்டின் பின்னால் உள்ள ஷாக்கடிக்கும் கதைகள் இதுதான்.

**மின் வாரியத்தின் பரிதாப நிலை**

மின்சாரத்தை வாங்கி மக்களுக்கு மின்சாரத்தை பகிர்வது மின்வாரியம். ஆனால் போதுமான அளவுக்கு மின் தயாரிப்புத் திட்டங்களைத் துவங்கக் கூட மின்வாரியத்திடம் பணம் இல்லை. அது மீளாக்கடனில் மூழ்கி மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது. அண்டை மாநி



படிப்பகம்

www.padippakam.com

லங்களில் இருந்து மின்சாரம் வாங்கக் கூட காசில்லாத மின் வாரியம் தங்களுக்குச் சொந்தமான 17 கோடி ரூபாய் மதிப்பிலான சொத்தை அடமானம் வைத்துத்தான் மின்சாரம் வாங்கியது. இப்படி கடன் பட்டு வாங்கும் மின்சாரத்தை மின் வாரியம் பன்னாட்டு முதலாளிகளுக்கு 1.60 காசுக்கு அடிமாட்டு விலைக்கு விற்கிறது. இதை விட மலிவான விலையில் பெற்றுக் கொள்ளும் பன்னாட்டு முதலாளிகளும் உண்டு.

**மின்சாரம் மக்களுக்கல்ல பன்னாட்டு முதலாளிகளுக்கே**

நிலக்கரியில், காற்றில், நீரில், சூரிய ஒளியில், கரும்பில், சோளத்தில் என பல வழிகளில் நாம் மின்சாரம் தயாரிப்பதில் உலக நாடுகளுக்கு இணையாக இருந்தாலும் இந்திய விஞ்ஞானிகள் தோரியத்திலிருந்தும் நமக்குத் தேவையான மின்சாரத்தை தயாரித்துக் கொள்ளலாம் என்பதை ஆய்வுகள் மூலம் நிரூபித்தனர். ஆனால் இந்திய விஞ்ஞானிகள் கண்டுபிடித்த தோரியத்திலிருந்து மின்சாரம் தயாரிக்கும் எதிர்காலத் திட்டத்திற்கு அமெரிக்கா தடை போட்டது.

அமெரிக்காவின் அடியாளாக செயல்படும் இந்திய அரசின் கைக் கூலித்தனத்தை கண்டு மனம் நொந்த பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் இயக்குநரும், வியன்னாவில் இருக்கிற சர்வதேச அணு சக்தி முகமையின் ஆலோசகருமான அணு விஞ்ஞானி ஏ.என்.பிரசாத் இப்படிச் சொல்கிறார். ''நமது நாட்டில் உள்ள தோரியம் இருப்பைக் கொண்டு ஆண்டொன்றுக்கு 3,50,000 மெகாவாட் மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்ய முடியும் (தற்போது நாம் ஒரு இலட்சம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறோம்) நமது எதிர்கால எரி சக்தி தேவைக்கு உத்திரவாதம் வழங்க முடியும். இதை நீண்ட காலத்துக்கு முன்பே நாம் மதிப்பிட்டுள்ளோம். தோரியத்தை அடிப்படையாகக் கொண்ட 500 மெகாவாட் அதிவேக ஈனுலையின் முன்னேற்றத்தைக் கண்டு பல வளர்ந்த நாடுகள் புழுங்கிக் கொண்டிருக்கின்றன. இது நமது விஞ்ஞானிகளின் நாற்பதாண்டுகால உழைப்பு. இது அமெரிக்காவிற்கும் தெரியும். தோரியத்தை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் நமது திட்டத்துக்கு முட்டுக் கட்டை போடுவதுதான் அமரிக்காவின் நோக்கம் என்பது வெளிப்படையாக தெரியவில்லையா?'' எனக் கேள்வி எழுப்பியிருந்தார் ஏ.என்.பிரசாத்.

இப்படி உள்ளூரில் மின்சாரம் தயாரிக்க எத்தனையோ வழிகள் இருந்தும் அமெரிக்க முதலாளிகளுக்கும் பன்னாட்டு நிறுவனங்களுக்காகவும் உள்ளூர் உற்பத்தியைக் கொன்ற மத்திய அரசு, வளர்ந்த நாடுகளில் இருந்து நிலக்கரியை இறக்குமதி செய்து அதிலிருந்தே மின்சாரத்தை தயாரித்து வருகிறது. உள்ளூர் உற்பத்தியை முடக்கியதுதான் இந்த மின் தட்டுப்பாட்டிற்குக் காரணம் என்பது ஒரு பக்கம் இருந்தாலும் இன்னொரு பக்கம் கிடைக்கிற மின்சாரத்தை பன்னாட்டு நிறுவனங்களுக்கு சலுகை விலையில் தாரை வார்த்துக் கொண்டிருக்கிறது மாநில அரசு.

இந்தியாவிலேயே வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதில் தமிழகம் முன்னணி மாநிலமாக இருக்கிறது என்று

ஆனால் நிறுவனம் வருகிறது என்றாலே அந்தப் பகுதியில் உள்ள நிலங்களின் விலை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்து விடுகிறது. அடிமாட்டு விலைக்கு நிலம், தடையற்ற தண்ணீர், அது போல தடையற்ற மின்சாரம். இதுதான் பன்னாட்டு முதலீடுகளை தமிழகம் கவர்வதின் கம்ப சூத்திரம்.

நெய்வேலி மின்சாரத்தை 2.50 காசுக்கு வாங்குகிற அரசு மக்களுக்கும் அதே விலையில்தான் மின்சாரத்தைக் கொடுக்கிறது. ஆனால் பன்னாட்டு முதலாளிகளுக்கோ யூனிட் ஒன்று வெறும் இருபதே காசுகள்தான். அதுவும் தடையற்ற மின்சாரம்.இது போக இவர்களுக்கு இலவச மின்சாரமும் உண்டு. அராஜக உற்பத்திக்காக மக்களிடம்

•••

**நெய்வேலி மின்சாரத்தை 2.50 காசுக்கு வாங்குகிற அரசு மக்களுக்கும் அதே விலையில்தான் மின்சாரத்தைக் கொடுக்கிறது. ஆனால் பன்னாட்டு முதலாளிகளுக்கோ யூனிட் ஒன்று வெறும் இருபதே காசுகள்தான். அதுவும் தடையற்ற மின்சாரம். இது போக இவர்களுக்கு இலவச மின்சாரமும் உண்டு.**

•••

அடிக்கடி பெருமைப்படுகிறார் தமிழக முதல்வர். மின்சாரம் தயாரிக்க வரும் பன்னாட்டு நிறுவனங்களையும் தமிழகம் கவர்ந்திழுக்கத் தயங்காது என்பது கண்கூடாகத் தெரிகிறது. ஆனால் கவர்வதில் உள்ள கவர்ச்சி எதையும் தமிழகம் அனுபவிக்கவில்லை. அந்நிய முதலீடுகள் சென்னையில் கொண்டு குவிக்கப்பட குவிக்கப்பட, சென்னையின் பூர்வகுடிகள் எப்படி சென்னையில் இருந்து அப்புறப்படுத்தப் படுகிறார்களோ அதன் அடுத்தக் கட்டமாக இந்த பன்னாட்டு முதலீடுகள் மக்களுக்குக் கொடுத்திருக்கும் பரிசுதான் மின்வெட்டு.

நோக்கியா, மிட்சுபிஸி, மோட்டரோலா, செயின்ட் கோபெய்ன், போர்ட், ஹூண்டாய் என கார், மொபைல், கண்ணாடி என எல்லா தொழில்களிலும் முதலிட வரும் பன்னாட்டு முதலாளிகளுக்கு தமிழக அரசே நிலத்தை கிரயம் செய்து அடிமாட்டு விலைக்குக் கொடுக்கிறது.

திருடி பன்னாட்டு முதலாளிகளுக்குக் கொடுக்கும் அரசு அந்த உண்மையை மறைத்து விட்டு காற்றின் மீது பழியைப் போட்டு தப்பிக்கப் பார்க்கிறது. ஆனால் மக்களிடம் திருடுகிற மின்சாரத்தை வாங்கிக் கொழுக்கும் பன்னாட்டு முதலாளிகளை வாழையிலை வைத்து மாநில அரசு வரவேற்பதற்கு அவர்கள் சொல்லும் ஒரே காரணம் அவர்கள் வேலை வாய்ப்பைக் கொடுக்கிறார்கள் என்பதுதான்.

அடிமாட்டு கூலிக்கு ஆளும் கிடைக்கிறது.... இலவசமாக மின்சாரமும் கிடைக்கிறது கடை விரிக்க நிலமும் கிடைக்கிறது என்று நோகாமல் நொங்கெடுக்கும் பன்னாட்டு முதலாளிகளுக்காக மக்களை நிரந்தரமான இருளில் தள்ளி வேடிக்கைக் காட்டும் அர , தண்ணீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாக பயன்படுத்த மக்களுக்கு அறிவுரை சொல்கிறது.

• இராவணன்



படிப்பகம்

www.padippakam.com

# காட்டு வேட்டை நடவடிக்கையின் நகர்ப்புற அவதாரம்

## – அருந்ததி ராய்

கிராமப்புறங்களில் எழும் கிளர்ச்சியை அடக்குவதற்கு இராணுவத்தையும் விமானப்படையையும் பயன்படுத்த எண்ணியிருக்கிறது இந்திய அரசு. நகர்ப்புறத்திலோ விசித்திரமான நிகழ்வுகள் நடந்து வருகின்றன.

ஜூன் 2-ஆம் தேதியன்று ஜனநாயக உரிமைப் பாதுகாப்புக் குழு மும்பையில் ஒரு பொதுக்கூட்டத்தை நடத்தியது. கவுதம் நவ்லகாவும் நானும் அதில் முக்கியப் பேச்சாளர்கள். அச்சு ஊடகங்களிலும் தொலைக்காட்சியிலும் கூட்டம் குறித்த செய்தி பரவலாக வெளிவந்திருந்தது. கூட்டத்தின் ஒளிப்பதிவு இணையத்தில் யு-டியூபில் வெளியிடப்பட்டிருக்கிறது. மறுநாள் பிரஸ் டிரஸ்ட் ஆஃப் இந்தியா (செய்தி நிறுவனம்) என்னுடைய பேச்சை அப்பட்டமாகத் திரித்து வெளியிட்டிருந்தது. பி.டி.ஐ இன் இந்தச் செய்தியை இந்தியன் எக்ஸ்பிரஸ் இணைய இதழ் ஜூன் 3ஆம் தேதியன்று பிற்பகல் 1.35 மணியளவில் வெளியிட்டிருந்தது. அதன் தலைப்பு இதுதான்: ''மாவோயிஸ்டுகளுக்கு அருந்ததி ராய் ஆதரவு! 'முடிந்தால் என்னைக் கைது செய்து பார்' - அரசுக்கு சவால்!!''

வெளியிடப்பட்டிருந்த அந்தச் செய்தியிலிருந்து சில வரிகளைக் கீழே தருகிறேன்.

''மாவோயிஸ்டுகளின் ஆயுத வன்முறையை நியாயப்படுத்திய எழுத்தாளர் அருந்ததி ராய், அவர்களுடைய இலட்சியத்தை ஆதரிக்கின்ற காரணத்துக்காக தன்னைக் கைது செய்வதற்கு தயாரா என்று அதிகாரிகளுக்கு சவால் விடுத்தார்.''

''அது ஆயுதப் போராட்டமாகத்தான் இருந்தாக வேண்டும்.... ''நக்சல் இயக்கம் என்பது ஆயுதப் போராட்டம் தவிர்த்த வேறு எதுவாகவும் இருக்க முடியாது... காந்திய வழியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவற்றைக் காண்பதற்குப் பார்வையாளர்கள் வேண்டும். அது அங்கே கிடையாது. இந்தப் போராட்ட வடிவத்தை மேற்கொள்வதற்கு நெடுநாட்களுக்கு முன்பே மக்கள் இது குறித்து விவாதித்துத்தான் முடிவு செய்திருக்கிறார்கள்'' என்றார் அருந்ததி ராய்.

''பாதுகாப்புப் படையினர் மீதான கொடூரமான தாக்குதலில் 76 சி.ஆர்.பி.எஃப் படைவீரர்களை மாவோயிஸ்டுகள் கொன்று குவித்திருக்கும் இந்தச் சூழலில், ''தந்தேவாடாவின் மக்களுக்குத் தலைவணங்குவதாக'' தனது உரையில் கூறினார் அருந்ததி ராய்.''

''நான் கோட்டுக்கு இந்தப்புறம்தான் இருக்கிறேன். நான் கடுகளவும் கவலைப்படவில்லை. என்னைக் கைது செய்யுங்கள். சிறையில் தள்ளுங்கள்'' என்று உறுதிபடப் பிரகடனம் செய்தார்.

பி.டி.ஐ வெளியிட்டுள்ள செய்தியின் இறுதிப் பகுதியிலிருந்து தொடங்குகிறேன். சி.ஆர்.பி.எஃப் படைவீரர்கள் 76 பேரை மாவோயிஸ்டுகள் கொன்று குவித்ததை ஒட்டி, தந்தேவாடாவின் மக்களுக்கு நான் எனது வணக்கத்தைத் தெரிவித்தேன் என்று குறிப்பிட்டிருப்பது ஒரு கிரிமினல் தன்மை வாய்ந்த அவதூறு. சி.என்.என் - ஐ.பி.என் தொலைக்காட்சிக்கு நான் அளித்த பேட்டியில் இது குறித்து தெளிவு படுத்தியிருக்கிறேன்.

•••

**சி.ஆர்.பி.எஃப். சிப்பாய்களைக் கொன்றதைக் கண்டிக்க வேண்டும் என்று நம்மை நிர்ப்பந்திப்பது, நம்மில் பலருக்கும் உடன்பாடில்லாத இந்தப் போரில், அரசாங்கத்தின் தரப்பை ஆதரிக்கும்படி நம்மை நிர்ப்பந்திப்பதாகும்.**

•••





படிப்பகம்

www.padippakam.com

‘‘சி.ஆர்.பி.எஃப் சிப்பாய்களின் மரணம் வருந்தத்தக்கது. ஏழைகளுக்கு எதிராகப் பணக்காரர்கள் தொடுத்திருக்கும் இந்தப் போரில் அந்தச் சிப்பாய்கள் பகடைக்காய்கள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறியிருந்தேன்...

வன்செயல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்வது பொருளற்ற முயற்சி என்று நான் மும்பை கூட்டத்தில் குறிப்பிட்டேன். அவர்கள் ஒரு போரைத் தொடுப்பதற்காகத்தான் அங்கே சென்றிருக்கிறார்கள் எனும் போது, மாவோயிஸ்டுகள் சி.ஆர்.பி. எஃப். சிப்பாய்களைக் கொன்றதைக் கண்டிக்கவேண்டும் என்று நம்மை நிர்ப்பந்திப்பது, நம்மில் பலருக்கும் உடன்பாடில்லாத இந்தப் போரில், அரசாங்கத்தின் தரப்பை ஆதரிக்கும்படி நம்மை நிர்ப்பந்திப்பதாகும் என்று கூறினேன்.

மாவோயிஸ்டுகளைப் பற்றிய எனது கருத்துகள் தெளிவானவை... கார்ப்பொரேட் நிறுவனங்கள் நடத்தும் நிலப்பறிப்புக்கு எதிரான மக்கள் இயக்கங்கள் பல வகைப்பட்டவை, பல சித்தாந்தங்கள் கொண்டவை. மாவோயிஸ்டுகள் அவற்றில் போர்க்குணமிக்க பிரிவினர். எல்லாவிதமான எதிர்ப்பு இயக்கங்களையும் செயல்வீரர்களையும் ராணுவரீதியில் நசுக்குவதை நியாயப்படுத்துவதற்காகத்தான் அனைவர் மீதும் மாவோயிஸ்டு முத்திரையை அரசு குத்துகிறது என்று குறிப்பிட்டேன். ‘‘அது ஆயுதப்போராட்டமாகத்தான் இருக்க முடியும்’’ என்று நான் நிச்சயமாகக் கூறவில்லை. ‘‘ஏற்கெனவே பட்டினி கிடப்பவன் உண்ணாவிரதத்தை ஒரு போராட்டமாக எப்படி நடத்தமுடியும்?’’ என்றுதான் கேட்டேன்.

அடுத்து நான் பேசிய வார்த்தைகளை அப்படியே தருகிறேன். ‘‘நாம் ஆதரிக்கின்ற எதிர்ப்பு இயக்கங்கள் குறித்து பரிசீலனை செய்வது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். நான் கோட்டுக்கு இந்தப் பக்கம் இருக்கிறேன். அதில் தெளிவாக இருக்கிறேன். கைது செய்யுங்கள், சிறையில் வையுங்கள். நான் கவலைப்படவில்லை. நான் எதிர்ப்பியக்கங்களின் பக்கம்தான் இருக்கிறேன். ஆனால் கோட்டிற்கு இந்தப்புறம் நிற்கின்ற நாம், தோழர்களை நோக்கித் திரும்பி அவர்களிடம் கேள்வி எழுப்பவேண்டும் என்றும் கருதுகிறேன்.’’ இவைதான் நான் பேசிய வார்த்தைகள்.

மேற்கூறிய பி.டி.ஐ செய்தி பல பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சிகளில்



4-ஆம் தேதி வெளிவந்தது... ‘‘விளம்பர மோகம் பிடித்த அருந்ததி ராய் ஆங்சான் சுகி ஆக விரும்புகிறார்’’ என்று எகனாமிக் டைம்ஸ் தலைப்பிட்டிருந்தது. எனக்கு இது அதிசயமாகத் தெரிகிறது. பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் ஒரே செய்தியை இரண்டு முறை ஏன் பிரசுரிக்க விரும்புகின்றன? உண்மையாக ஒருமுறையும், பின்னர் பொய்யாக இன்னொருமுறையும்?

அன்றைக்கு மாலையே சுமார் 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேர் தில்லியில் என் வீட்டுச் சன்னலின்மீது கல்லெறிந்திருக்கின்றனர். தெருவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மீது ஒரு கல் பட்டுவிட்டது. இதைக் கண்டு ஆத்திரமடைந்த மக்கள் கூட்டமாகச் சேர்ந்துவிடவே வந்தவர்கள் ஓடிவிட்டனர். அடுத்த சில நிமிடங்களில் ஜீ டிவி நிருபர் என்று சொல்லிக்கொண்டு இண்டிகா காரில் வந்து இறங்கிய ஒரு நபர், ‘‘இதுதான் அருந்ததி ராய் வீடா? இங்கே ஏதாவது கலவரம் நடந்ததா?’’ என்று விசாரித்திருக்கிறார்.

சந்தேகமேயில்லாமல் இது ஒரு நாடகம். எனக்கெதிரான மக்கள் கோபம் என்று தொலைக்காட்சி முதலைகளுக்கு தீனி போட்டுப் பரப்புவதற்காக திட்டமிட்டே தயாரிக்கப்பட்ட ஒரு நாடகம். ஆனால் என்னுடைய அதிருஷ்டம், அவர்கள் தயாரித்த கதை வசனம் அன்று குளறுபடியாகிவிட்டது.

விசயம் இத்தோடு முடியவில்லை. ஜூன் 5-ஆம் தேதியன்று ராய்ப்பூரிலிருந்து வெளிவரும் தைனிக் பாஸ்கர் நாளேட்டில் ஒரு செய்தி வெளியாகியிருந்தது. ‘‘தைரியமிருந்தால் தன்னுடைய ஏ.சி அறையை விட்டு வெளியேறி அருந்ததி காட்டுக்கு வரட்டும்’’ என்பது அந்தச் செய்தியின் தலைப்பு. ‘‘காட்டுக்கு வந்து மாவோயிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டு, போலீசை எதிர்த்து சண்டை போடத் தயாரா?’’ ஏன்று சட்டீஸ்கர் மாநிலத்தின் டி.ஜி.பி, விசுவரஞ்சன் அந்தச் செய்திக் கட்டுரையில் எனக்குச் சவால் விட்டிருந்தார். கற்பனை செய்து பாருங்கள். ஒரு போலீசு டி.ஜி.பி யுடன் நான் ஒண்டிக்கு ஒண்டி மோதவேண்டுமாம். இதுவாவது பரவாயில்லை. பாரதிய ஜனதா கட்சித் தலை

**‘‘காட்டுக்கு வந்து மாவோயிஸ்டுகளுடன் சேர்ந்து கொண்டு, போலீசை எதிர்த்து சண்டை போடத் தயாரா?’’ ஏன்று சட்டீஸ்கர் மாநிலத்தின் டி.ஜி.பி, விசுவரஞ்சன் அந்தச் செய்திக் கட்டுரையில் எனக்குச் சவால் விட்டிருந்தார். கற்பனை செய்து பாருங்கள். ஒரு போலீசு டி.ஜி.பி யுடன் நான் ஒண்டிக்கு ஒண்டி மோதவேண்டுமாம்.**



படிப்பகம்

# எமது வெளியீடுகள்

1. நான் நாத்திகன் - ஏன்?
   - பகத்சிங்
2. ஊழியர்கள் தலைவர்கள்
   - சென் யுன்
3. மதம்: ஒரு மார்க்சிய பார்வை
4. மறுகாலனியாதிக்கக் கொலைக் களங்கள் (கவிதை)
   - துரை. சண்முகம்

**கீழைக்காற்று வெளியீட்டகம்**

10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600 002.

044-28412367


வர் பூனம் சதுர்வேதி என்ற பெண், என்னை முச்சந்தியில் நிறுத்தி சுட்டுக் கொல்லவேண்டும் என்று பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்திருக்கிறார்.

கணக்கில் அடங்காத பாலியல் வன்முறைகளையும் கொலைகளையும் நடத்தியிருக்கின்ற சல்வா ஜூடும் என்ற கொலைகாரப் படையின் தலைவர் மகேந்திர கர்மா, எனக்கெதிராக சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று கோரியிருந்தார். நான் வெளிப்படையாக மாவோயிஸ்டுகளை ஆதரிப்பதாக குற்றம் சாட்டி யாரோ இரண்டு பேர் சட்டிஸ்கார் மாநிலத்தின் இரு காவல் நிலையங்களில் எனக்கு எதிராகப் புகார் கொடுத்திருப்பதாக நயிதுனியா என்ற இந்தி நாளேடு, ஜூன் 8 ஆம் தேதியன்று செய்தி வெளியிட்டிருந்தது.

உளவியல் தாக்குதல்கள் என்று இராணுவ உளவுத்துறையின் மொழியில் கூறுவார்களே அது இதுதான் போலிருக்கிறது. அல்லது இது காட்டு வேட்டை நடவடிக்கையின் நகர்ப்புற அவதாரமா? உள்துறை அமைச்சகம் யாரை ஓரங்கட்டி அடிக்க நினைக்கிறதோ, அவர்களுக்கு எதிராக சாட்சியங்கள் ஏதும் இல்லாதபோது, அப்படிப்பட்ட சாட்சியங்கள் அடங்கிய கோப்பு ஒன்றை உருவாக்குவதற்காக அரசாங்கத்தின் செய்தி நிறுவனமே அத்தகைய சாட்சியங்களை இட்டுக்கட்டி உருவாக்கித் தருகிறதா? அல்லது எம்மில் பிரபலமானவர்களை கைது செய்தாலோ அல்லது ஒழித்துக் கட்டினாலோ அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் முன் கவுரவத்தை இழந்துவிடும் என்பதால், எங்களைக் கொலைவெறி பிடித்த கும்பல்களின் கையில் ஒப்படைப்பதற்கு பி.டி.ஐ செய்தி நிறுவனம் முயற்சிக்கிறதா?

எதுவாக இருந்தாலும் சரி, இது மிகவும் அபாயகரமானது, வெட்கக் கேடானது. ஆனால் இது புதியதல்ல. சாட்சியங்கள் எதுவும் இல்லாமல், அடிப்ப





படிப்பகம்

டையே இல்லாத பத்திரிகை செய்திகளை மட்டும் வைத்து, பயங்கரவாதி என்று கைது செய்து சிறை வைக்கப்பட்டிருக்கின்ற எந்த ஒரு முஸ்லிம் இளைஞனையும் கேட்டுப் பாருங்கள். அல்லது காஷ்மீர் மக்களைக் கேட்டுப் பாருங்கள். அல்லது சமூகத்தின் கூட்டு மனச் சாட்சியை திருப்திப்படுத்துவதற்காக மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கும் முகமது அப்சலைக் கேட்டுப் பாருங்கள். இது புதியதல்ல.

காட்டு வேட்டை நடவடிக்கை என்னைப் போன்றோரின் வீட்டுக் கதவுகளையே தட்டத் தொடங்கிவிட்டது என்றால், பிரபலம் ஏதும் இல்லாத அரசியல் ஊழியர்கள் செயல் வீரர்கள் ஆகியோருக்கு என்ன நடக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். சிறை வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொன்று ஒழிக்கப்படும் -றுக் கணக்கானோருக்கு என்ன நடந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.

•••

**காட்டு வேட்டை நடவடிக்கை என்னைப் போன்றோரின் வீட்டுக் கதவுகளையே தட்டத் தொடங்கிவிட்டது என்றால், பிரபலம் ஏதும் இல்லாத அரசியல் ஊழியர்கள், செயல் வீரர்கள் ஆகியோருக்கு என்ன நடக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.**

•••

ஜூன் 26-ஆம் தேதி அவசரநிலை அறிவிப்பின் 35-ஆம் ஆண்டு. இந்த நாடு ஒரு அவசரநிலை ஆட்சியின் கீழ் இருக்கிறது என்பதை (அரசாங்கம் சொல்லாது என்பதால்) மக்கள்தான் பிரகடனம் செய்யவேண்டுமோ? (கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், அவசரநிலை என்றைக்காவது விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதே கேள்வியாக இருக்கிறது) இந்த முறை செய்தித் தணிக்கை மட்டுமல்ல பிரச்சினை. செய்திகளை உற்பத்தி செய்வதென்பது அதைவிட இன்னும் ஆபத்தானது.

(14, ஜூன், 2010 - **டான் இதழில் வெளியான கட்டுரையின் சுருக்கப்பட்ட தமிழாக்கம்.**)

## “இன்டர்நேஷ்னல்” திரை விமரிசனம்:

# ஹாலிவுட்டின் புதிய வில்லன்கள்!

**உ**லகளாவிய சந்தையைக் குறி வைத்து இயங்கும் ஹாலிவுட்டிலும் கோடம்பாக்கத்தைப் போல ஃபார்முலா கதைகள்தான் புதிய மொந்தைகளில் வெளியிடப்படும். கம்யூனிஸ்டுகள், இசுலாமியர்கள் - அரேபியர்கள், வேற்றுக்கிரக ஜீவராசிகள் போன்றவர்கள்தான் அலுப்பூட்டும் விதத்தில் திரும்பத் திரும்ப வில்லன்களாக வருவதைப் பார்த்திருப்போம்.

என்னதான் வெண்திரையில் புனைகதைகளைக் கட்டியமைத்தாலும் வாழ்க்கை என்ற பெரிய உண்மை ஒன்று இருக்கிறதே! முதலாளித்துவ பொருளாதாரம், இந்த உலக மக்களை காக்கும் அருகதையை இழந்து வருவதை அமெரிக்காவில் துவங்கி இப்போது கிரீஸ் வரையிலும் 21-ஆம் -ற்றாண்டு வெளிச்சம் போட்டுக் காட்டிவருகிறது. மேற்குலகம் முழுவதும் ‘‘முதலாளித்துவம் ஒழிக’’ என்ற முழக்கம் ஐஸ்லாந்து எரிமலை புகை போல படர்ந்து வருகிறது. இப்படி மக்களின் பட்டுத் தெரிந்து கொண்ட ‘மூடு’ மாறிவரும்போது இன்னும் எத்தனை நாள் பின்லாடனே வில்லன் பாத்திரத்தை ஏற்க முடியும்? இப்போதைய புதிய வில்லன்கள் யார்?

•••

**கொ**லம்பியா பிக்சர்ஸ் தயாரிப்பில், டாம் டைக்வெர் இயக்கத்தில் சமீபத்தில் வெளியான படம், ‘‘இன்டர்நேஷ்னல்’’. படத்தின் கதையை சுருக்கமாகப் பார்ப்போம்.

நியூயார்க்கின் அட்டர்னி ஜெனரல் அலுவலகத்தைச் சேர்ந்த ‘எல்லா’ என்ற பெண் உலக அளவில் பயங்கரவாதிகளுக்கு பணம் வருகின்ற வழிவகைகளை ஆய்வு செய்கிறாள். அவளுக்கு இன்டர்போலைச் சேர்ந்த ஏஜெண்ட் சேலிஞ்சர் உதவுகிறான். இவர்களுடைய கூட்டு முயற்சியில் ஒரு ஜெர்மன் வங்கியின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்குரியவையாகத் தெரிகின்றன. ஐ.பி.பி.சி என்ற அந்த வங்கி உலகில் ஐந்தாவது பெரிய வங்கி. பெர்லினை தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. அதன் நடவடிக்கைகளை மேலும் புலனாய்வு செய்கிறார்கள்.

இத்தாலியைச் சேர்ந்த கால்வினி என்ற இராணுவத் தளவாட நிறுவனத்திடமிருந்து 200 மில்லியன் டாலர் மதிப்புள்ள ஏவுகணைகளை வாங்குவதற்கு அந்த வங்கி முயல்கிறது. ஒரு வங்கி ஆயுதங்களை வாங்க வேண்டிய அவசியம் என்ன என்ற கேள்வி எழுகிறது. அதைக் கண்டுபிடிக்க வங்கியைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவரை இரகசியமாக தொடர்புகொண்டு முயல்கிறார்கள். இந்த வேலையில் ஈடுபடும் சேலிஞ்சரின் நண்பன் தாமஸ் ஷூமர் திடீரென்று இறந்து போகிறான். ஆரம்பத்தில் அது மாரடைப்பு என்று கூறப்பட்டாலும், அது ஒரு கொலை என்பதை சேலிஞ்சர் பின்னர் கண்டுபிடிக்கிறான்.

இதனால் ஆத்திரம் கொண்ட எல்லாவும், சேலிஞ்சரும் வங்கியின் இரகசிய நடவடிக்கைகளை கண்டுபிடிக்க சங்கற்பம் செய்கிறார்கள். இதற்கிடையில் வங்கிக்கெதிரானவர்கள் மர்மமான முறையில் கொல்லப்படுகிறார்கள். கால்வினி நிறுவனத்தின் அதிபர் கால்வினி இத்தா

•••

**வங்கியைத் தண்டிப்பதாக இருந்தால் முழு அமைப்பையும் தண்டிக்க வேண்டிவரும். அந்த அமைப்பில் ஈரான், சீனா, ரசியாவின் கிரிமினல் மாஃபியாக்கள், சி.ஐ.ஏ, அமெரிக்க அரசு, இங்கிலாந்து அரசு மட்டுமல்ல ஹிஸ்புல்லாவும் இருக்கிறது.**



படிப்பகம்

www.padippakam.com

லியின் அடுத்த பிரதமராக வரவேண்டியவர், தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கொல்லப்படுகிறார். அதற்கு சற்று நேரம் முன்புதான் கால்வினியை எல்லாவும், சாலிஞ்சரும் சந்திக்கிறார்கள்.

கால்வினி நிறுவனத்தினுடன் ஏவுகணைகள் வாங்குவதாக வங்கி மேற்கொண்ட ஒப்பந்தம் முறியும் நிலையில் இருக்கிறது. ஒப்பந்தத்திற்கு ஆதரவாக வேலை செய்யும் வங்கி உயரதிகாரியும் கொல்லப்படுகிறார். இந்தப் பின்னணியில்தான் கால்வினியை இருவரும் சந்தித்து பல கேள்விகளை கேட்கிறார்கள். வங்கியின் ஆயுத கொள்முதலுக்கான பின்னணி அப்போதுதான் அவர்களுக்குத் தெரியவருகிறது.

சீனாவிலிருந்து மலிவான விலையில் சிறுரக ஆயுதங்களை கொள்முதல் செய்யும் அந்த வங்கி அவற்றை சிறு நாடுகளுக்கு விற்பனை செய்கிறது. பல போராளிக் குழுக்களுக்கும் இலவசமாய் கொடுக்கிறது. இதில் என்னதான் ஆதாயம்? ஆயுதங்களைக் கொடுத்த கையோடு அந்த நாட்டின் நிதிச் சந்தையை கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வங்கி கைமாறாக பெற்றுக் கொள்கிறது. கடன் சந்தையைக் கட்டுப்படுத்தினால் கிட்டத்தட்ட அந்த நாட்டின் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துவது போலத்தான் என கால்வினி கூறுகிறான்.

கால்வினி நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஈடேற முயன்ற வங்கியின் உயரதிகாரி ஒருவர், அவரும் கால்வினியின் நண்பர் என்பதோடு மர்மமான முறையில் கொல்லப்படுவதையும் சேலிஞ்சர் சுட்டிக்காட்டுகிறான். கால்வினி நிறுவனத்துடன் ஒப்பந்தம் முறிந்தால் வங்கி மிகப்பெரிய நெருக்கடியை சந்திக்கும் என்பது யாருக்கும் தெரியாது. சேலிஞ்சரும், எல்லாவும், கால்வினியுடன் உரையாடிவிட்டு வெளியே காத்திருக்கிறார்கள். அப்போதுதான் சதுக்கம் ஒன்றில் பேசத்துவங்கும் கால்வினி தூரக்குறித் துப்பாக்கிக்காரன் ஒருவனால் சுட்டுக் கொல்லப்படுகிறான்.

இத்தாலிய போலீசும், அரசும் இந்தக் கொலையை 'ரெட்பிரிகேடு' எனும் புரட்சிப்படை செய்திருப்பதாக கூறுகிறார்கள். சேலிஞ்சர் மட்டும் 'இது வங்கி செய்த கொலை' என பலமாக நம்புகிறான். அதற்கான ஆதாரங்களைத் திரட்டுகிறான். சுட்டவன் ஒரு தொழில்முறை துப்பாக்கிகாரன் என்பதையும் அவனது ஒரு கால் ஊனம் என்பதனால், இரும்பு ஷூ பயன்படுத்துவதையும் கண்டுபிடிக்கிறான். இவன்தான் வங்கி சம்பந்தப்பட்ட பல மர்மமான கொலைகளை செய்திருப்பான் என்றும் ஊகிக்கிறான். அவனது தடயங்களை பின்தொடர்ந்து அந்த கொலைகாரன் நியூயார்க்கில் வசிப்பதையும் கண்டுபிடிக்கிறான்.




இந்தக் கொலையாளிக்கு வங்கியின் உயரதிகாரியும், முன்னாள் கிழக்கு ஜெர்மனியில் கர்னலாக பணியாற்றிய வருமான பெரியவர் ஒருவர்தான், கொல்லப்பட வேண்டியவர்கள் பற்றிய விவரங்களை கொடுக்கிறார். அவர் வங்கியின் தலைவரான ஸ்கார்சனின் உள் வட்டத்தில் உள்ளவர். அவரும், நியூயார்க் கொலைகாரனும் சந்திக்கும் போது அவர்களைப் பிடிக்க சேலிஞ்சர் முயல்கிறான். அந்தக் கொலைகாரன் உயிருடன் பிடிபடுபவதை வங்கி ஏற்பாடு செய்திருந்த இன்னொரு கும்பல் தடுக்கிறது. பின்னர் அந்த வாடகைக் கொலைகாரனும் கொல்லப்படுகிறான். பெரியவர் மட்டும் பிடிபடுகிறார்.

பெரியவரை வைத்து வங்கியின் தலைவர் ஸ்கார்சனை சட்டத்தின் முன் நிறுத்தலாம் என்று திட்டமிட்டு அவரிடம் சேலிஞ்சர் உதவி கேட்கிறான். பெரியவரோ சட்டப்படி வங்கியை தண்டிக்க முடியாது என்றும் அமைப்பு முறைக்கு வெளியே சென்றுதான் தண்டிக்க முடியும் என்று ஆலோசனை கூறுகிறார். அதுவும் பெரிய இழப்புகளை கொண்டுவருமென்று எச்சரிக்கிறார்.

இடையில் கொல்லப்பட்ட கால்வினியின் மகன்கள் தனது தந்தையின் மரணத்திற்கு வங்கிதான் காரணமென்று சேலிஞ்சர் மூலம் அறிந்து ஏவுகணைகள் விற்கும் ஒப்பந்தத்தை முறிக்கிறார்கள். இந்த ஏவுகணைகளை வாங்கி சிரியா விற்கும், ஈரானுக்கும் விற்கவில்லை என்றால் வங்கி திவாலாகிவிடும் என்ற சிக்கல் வருகிறது.

வங்கித் தலைவன் ஸ்கார்சன் தலைமையில் ஆலோசனை நடக்கிறது. அதன்



படிப்பகம்

www.padippakam.com

படி கால்வினி நிறுவனத்திற்கு போட்டியாக இருக்கும் துருக்கி நிறுவனம் ஒன்றை அணுகிப் பார்ப்பதென்று அவர்கள் முடிவு செய்கிறார்கள். அந்த துருக்கி நிறுவனம் இசுரேலை முக்கியமான வாடிக்கையாளராக வைத்து இயங்கும் நிறுவனமாகும். வங்கி வாங்க இருக்கும் ஏவுகணைகளை வீழ்த்தும் வல்லமை கொண்ட ஆயுதங்களை அவர்கள் ஏற்கனவே இசுரேலுக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். இந்த தகவல் வெளியே தெரிந்தால் ஈரானும், சிரியாவும் வங்கி மூலம் வாங்க இருக்கும் ஏவுகணைகளுக்கான ஆர்டரை இரத்து செய்து விடும். அவ்வாறு நடந்தாலும் வங்கி திவாலாவது உறுதி என்பதால் இஸ்ரேல் விசயத்தை ஈரானுக்கும் சிரியாவுக்கும் தெரியாமல் மறைத்து வியாபாரத்தை முடிக்கத் திட்டம் தீட்டுகிறார்கள்.

அந்த துருக்கி நிறுவனத்துடன் பேச்சு நடத்த ஸ்கார்சன் செல்கிறான். இந்த தகவலை பெரியவர் சேலிஞ்சருக்கு தெரிவிக்கிறார். அவனும் பின்தொடர்கிறான். துருக்கியில் ஸ்கார்சனும், துருக்கி நிறுவனத் தலைவரும் பேசுகிறார்கள். ஏவுகணைகள் விற்பதற்கு துருக்கி நிறுவனம் சம்மதிக்கிறது. அந்த ஏவுகணைகளை வீழ்த்தும் தொழில் நுட்பத்தை இசுரேலுக்கு விற்பனை செய்திருக்கும் விசயத்தை இரகசியமாக வைத்திருக்குமாறு ஸ்கார்சன் கோருகிறான். இறுதியில் பணம் செலுத்தும் நடைமுறைகளெல்லாம் உறுதி செய்யப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தையை பெரியவரின் உதவியால் இரகசியமாக பதிவு செய்யும் சேலிஞ்சர் கடைசியில் முக்கியமான தருணத்தில் சிக்னல் கிடைக்காமல் திணறுகிறான். அது இல்லாமல் அவனால் சட்டத்தின் முன் வங்கியைக் குற்றவாளியாக நிறுத்த முடியாது. எரிச்சலில் இருக்கும் சேலிஞ்சர், பேசிவிட்டு வரும் ஸ்கார்சனை பின்தொடர்கிறான். வங்கித் தலைவனை கொல்ல யத்தனிக்கும் போது பின்னால் வரும் ஒரு இத்தாலிக்காரன் ஸ்கார்சனை சுட்டுக் கொல்கிறான். அவன் கால்வினியின் மகன்களால் அனுப்பப்பட்டவன்.

ஐ.பி.பி.சி வங்கியின் தலைவர் ஸ்கார்சன் துருக்கியில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற பத்திரிகைச் செய்தியுடன் படம் முடிகிறது.

•••

**வி**ல்லன் பாத்திரத்தை கோர கற்பனைகளோடு உருவாக்கப்பட்ட ஒரு தனிநபருக்கு கொடுக்காமல் ஒரு வங்கியை வில்லனாகச் சித்தரிக்கிறது இந்தப் படம். அது பிரதிநிதித்துவப்படுத்தும் மேற்கத்திய ஏகாதிபத்திய நாடுகளின் அரசமைப்பையும் கொஞ்சமாவது தோலுரிக்கிறது.

வங்கியின் தலைவர் ஸ்கார்சனுடன் நமீபியாவின் போராளிக் குழுத் தலைவர் உரையாடும் காட்சி ஒன்று வருகிறது. ஸ்கார்சன் அந்தக் கருப்புக் கமாண்டருக்கு தேவையான ஆயுதங்கள், தொழில்நுட்ப சேவை, போரில் வெல்ல ஆலோசனைகள் எல்லாம் அளிப்பதாகக் கூறுவான். கமாண்டரோ தமது இயக்கத்திடம் பணம் எதுவுமில்லை என்று பரிதாபமாகக் கூறுவார். அதனால் பரவாயில்லை. அடுத்த சில மாதங்களில் ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கம் அமைக்கும் போது நாட்டின் நிதிச்சந்தையை தங்கள் வங்கியிடம் விட்டுவிட்டால் போதும் என்று ஸ்கார்சன் தேர்ந்த ராஜதந்திரி போலக் கேட்பான்.

போராளிக் குழுக்கள் கிடக்கட்டும், சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவை, ஜனநாயக அரசமைப்பு கொண்டவை என்று கூறப்படும் நாடுகளுக்கு இடையிலான ஆயுதபேரங்களும், விற்பனைகளும் இன்றளவும் இரகசியங்களாகத்தான் இருந்து வருகின்றன. இதற்கான தரகு வேலையை பல முக்கியமான நிறுவனங்கள் செய்து வருகின்றன. நமதுநாட்டின் போபர்ஸ், ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல் போன்ற சிலவற்றில் ஊழல் வெளிச்சத்திற்கு மட்டும் வந்தது. ஆனால் குவட்டரோச்சியை பிடிக்கவோ தண்டிக்கவோ முடியவில்லை.

•••

**ஐ.பி.பி.சி எனப்படும் ஒரு வங்கியின் கதையை வைத்துத்தான் இதை புரிந்து கொள்ள வேண்டுமா என்ன? ஈரானுடன் போரிட்ட சதாம் உசேனுக்கு அமெரிக்கா, இரசாயன ஆயுதங்களை வழங்கக் காரணம் என்ன? தேன் அமெரிக்க சர்வாதிகாரிகளுக்கு ஆயுதங்களும், இராணுவ ஒத்துழைப்பும் அளிக்க வேண்டிய அவசியம் என்ன?**

•••

உலகின் பலபகுதிகளில் நடக்கும் போர்களுக்கும், உள்நாட்டுப் போர்களுக்கும் ஆயுதங்கள் தடையின்றிக் கிடைக்கின்றன. முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்துதான் ஆயுதங்கள் விற்பனையாகின்றன என்று மேலை நாடுகள் கூப்பாடு போட்டாலும், அந்த வியாபாரங்களையெல்லாம் மேற்கத்திய கனவான்களும், அந்த நாடுகளைச் சேர்ந்த பன்னாட்டு வங்கிகளும்தான் முடித்துக் கொடுக்கின்றன. இவற்றில் ஐ.நா உட்பட யாரும் தலையிடுவதில்லை. ஏகாதிபத்தியங்களின் ஆசியோடு நடக்கும் இத்தகைய சூதாட்டத்தில் சட்டபூர்வமான பரிவர்த்தனைகளும் சட்ட விரோதத் தொழில்களும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன.

ஆர்கனைஸ்டு கிரைம் எனப்படும் ஒழுங்கமைக்கப்பட்ட கிரிமினல் வேலைகளுக்கு பணம் எப்படிக் கிடைக்கிறது என்பதை அமெரிக்காவின் அரசுத்துறை ஒன்று ஆய்வு செய்யும்போது ஒரு வங்கி இப்படி திமிங்கலமாக சிக்குவதாக இந்தப் படத்தின் கதை கூறுகிறது. முதலீட்டு வங்கிகள், முதலீடுகளுக்கு தரச்சான்று தரும் பிரபல நிறுவனங்கள், காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவை எல்லாம் போர்ஜரி, பொய்க்கணக்கு உள்ளிட்ட எத்தகைய பஞ்சமா பாதகத்தையும் செய்யத் துணிந்தவை என்பது சமீபத்திய அமெரிக்க சப்-பிரைம் நெருக்கடியினை ஒட்டி உலகத்துக்கே தெரியவந்தது. கொள்ளை இலாபத்துக்காக எத்தகைய கிரிமினல் வேலைகளைச் செய்வற்கும் அவர்கள் தயங்குவதில்லை. மேலும், சொந்த நாட்டு மக்களின் எதிர்கால வருமானத்தையே மொத்தமாக சுருட்டுபவர்கள் ஏதோ ஒரு ஏழை நாட்டின் எதிர்காலத்தை பேரம் பேசுவதில் ஆச்சரியப்பட ஏதும் இல்லை.

மொத்த முதலாளித்துவ அமைப்பே நாறிவரும்போது ஒரு வங்கியை மட்டும் வில்லனாகக் காட்ட முடியாது என்பதையும் திரைப்படம் மறைமுகமாக ஒத்துக் கொள்கிறது. இன்டர்போலின் மேலதிகாரி சேலிஞ்சருக்கு அவ்வப்போது கடிவாளம் போடுகிறார். இன்டர்போல் எனப்படும் சர்வதேசபோலீசு வெறும் ஒற்றுத் தகவல்களை தேவையான நிறுவனங்களோடு பரிமாறிக் கொள்ளும் வரைதான் அதிகாரம், மற்றபடி அதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் இல்லை என்பதை கூறுகிறார். கூடவே இன்டர்போலின் விவகாரங்கள் கூட வங்கிக்கு தெரியும் விதத்தை கண்டு



படிப்பகம்

www.padippakam.com

சேலிஞ்சர் அதிர்ச்சியுறுகிறான். அதே போல நியூயார்க் அட்டர்னி ஜெனரல் அலுவலகத்தின் மேலிடமும் எல்லாவுக்கு கடுமையான எச்சரிக்கை விடுகிறது.

சேலிஞ்சரின் பிடியில் இருக்கும் வங்கிப் பெரியவரான கர்னல், சட்டப் பூர்வ முறையில் வங்கியை தண்டிக்க முடியாது என்று விளக்குவார். வங்கியைத் தண்டிப்பதாக இருந்தால் முழு அமைப்பையும் தண்டிக்க வேண்டி வரும். அந்த அமைப்பில் ஈரான், சீனா, ரசியாவின் கிரிமினல் மாஃபியாக்கள், சி.ஐ.ஏ, அமெரிக்க அரசு, இங்கிலாந்து அரசு மட்டுமல்ல ஹிஸ்புல்லாவும் இருக்கிறது. வங்கியின் இரகசிய நடவடிக்கைகளுடன் இவை அனைத்தும் ஊடும் பாவுமாகப் பின்னியிருக்கின்றன என்பதை விளக்குவார்.

இறுதிக்காட்சியில் கூட தன்னைச் சுட வரும் சேலிஞ்சரிடம் வங்கித் தலைவன் ஸ்கார்சன் அதையே கூறுவான். என்ன பெயரிட்டு அழைத்தாலும் இவற்றின் உள்ளடக்கம் ஒன்றுதான். ஒரு பொருளாதார அடியாளின் வாக்கு மூலங்கள் என்ற -லைப்படிப்பவர்கள் இதனைப் புரிந்து கொள்ளலாம்.

உண்மையில் இத்தகைய இரகசிய ஆயுத விற்பனை, சப்ளைகளை எல்லாம் நடத்துவதில் சி.ஐ.ஏ தான் முன்னோடி. இரகசிய வங்கிக் கணக்குகள், போதைப் பொருள் மற்றும் ஆயுத விற்பனை, உளவு வேலைகள், ஆட்சிக்கவிழ்ப்புகள் ஆகிய அனைத்துக்கும் மூல முதல்வர்கள் மேற்கத்திய ஏகாதிபத்தியங்கள் தான். அமெரிக்கா முதலான ஏகாதிபத்தியங்கள் ஆரம்பித்து வைத்து நடத்தி வருபவைதான்.

சின்னஞ்சிறிய ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் முடிவின்றி உள்நாட்டுப் போர்கள் தொடர்வதற்கும், நாளுக்கு ஒரு ஆட்சிக் கவிழ்ப்பு அரங்கேறுவதற்கும், சினிமா தயாரிப்பு போல ஒரு

கர்னலோடு சேலிஞ்சர்பேசும் போது ''முன்னாள் கம்யூனிஸ்டாக இருந்த நீங்கள், இத்தகைய அநீதிக்கு துணை போகலாமா?'' என்று கேட்பான். ஒரு ஹாலிவுட் படத்தில் கம்யூனிசத்தை மதிப்புக்குரியதாகக் கூறுவது கூட பெரிய ஆச்சரியம்தான்.

அந்தப் பெரியவர் தான் இளைஞனாக இருந்த போது சேலிஞ்சர் போல உருப்படியாக வாழ விரும்பியதாகவும் பின்னர் தோற்றுவிட்டதாகவும் கூறுவார். இறுதியில் சேலிஞ்சருக்கு தனது உயிரைப் பணயம் வைத்து உதவ முன் வருவார். ஒரு இன்டர் போல் அதிகாரியின் அட்வைசைக் கேட்டு ஒரு முன்னாள் கம்யூனிஸ்டும், இந்நாள் கிரிமினல் வங்கியின் உயரதிகாரியுமான ஒரு மனிதன் திருந்துவதாகச் சித்தரித்திருப்பது கூட யதார்த்தமில்லைதான். முன்னாளில் கம்யூனிஸ்ட்டுகள் என்ற போர்வையில் இயங்கிவந்த இந்த அதிகார வர்க்க முதலாளிகள்தான் இன்றைக்கு அந்த நாடுகளில் தனியார் முதலாளிகளாக வலம் வருகின்றனர் என்பதே உண்மை.

கள்ளத்தனமான ஆயுத வியாபாரம், அதனை மறைப்பதற்கான கொலைகள் என்பன போன்ற சட்டவிரோதமான கிரிமினல் நடவடிக்கைகளில் இரகசியமாக ஈடுபடும் ஒரு வங்கியின் நடவடிக்கைகள் வாயிலாக வரம்புக்குட்பட்ட அளவில் முதலாளித்துவ அமைப்பு இப்படத்தில் அம்பலப்படுத்தப்பட்டிருக்கிறது. ஹாலிவுட் முதலாளிகள் நம்பி முதல் போடும் அளவுக்கு முதலாளித்துவத்தின் மீது மேற்குலக மக்கள் மத்தியில் வெறுப்பு பரவிவருகிறது என்பதை, இத்தகைய திரைக்கதைகளைப் பார்க்கும்போது புரிந்து கொள்ள முடிகிறது.

•••

**சவப்பெட்டிக்கு சந்தை இருக்கிறது என்றால் முதலாளி வர்க்கம் அந்த வியாபாரத்திலும் இறங்கத் தயங்காது என்பதை நாம் அறிவோம். சொந்தச் சவப்பெட்டி என்று புரிந்த பின்னரும் அத்தகைய முயற்சியில் ஹாலிவுட் ஈடுபடுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.**

•••

ஐ.பி.பி.சி போய் விட்டால் இந்த நடவடிக்கைகளைத் தொடர -ற்றுக்கணக்கான வங்கிகள் வரும், எனவே தன்னைக் கொல்வதால் சேலிஞ்சரின் இரத்தவெறிதான் தீரும், நீதி கிடைக்காது என்பான் அவன்.

ஐ.பி.பி.சி எனப்படும் ஒரு வங்கியின் கதையை வைத்துத்தான் இதை புரிந்து கொள்ள வேண்டுமா என்ன? ஈரானுடன் போரிட்ட சதாம் உசேனுக்கு அமெரிக்கா இரசாயன ஆயுதங்களை வழங்கக் காரணம் என்ன? தென் அமெரிக்க சர்வாதிகாரிகளுக்கு ஆயுதங்களும், இராணுவ ஒத்துழைப்பும் அளிக்க வேண்டிய அவசியம் என்ன? இந்தியாவிற்கும், பாக்கிற்கும் மாறி மாறி ஆயுதங்களை பல பில்லியன் டாலருக்கு விற்பதன் மர்மம் என்ன? ரசியாவுக்கு எதிராக ஆப்கான் முஜாகிதீன்களுக்கு கணிசமான ஆயுதங்களை இலவசமாக வழங்கக் காரணம் என்ன? இவையெல்லாம் அரசியல் முடிவுகளா, இராணுவ நடவடிக்கைகளா அல்லது பொருளாதாரப் பரிவர்த்தனைகளா?

ஆட்சிக் கவிழ்ப்புக்கு எவ்வளவு செலவாகும் என்று பட்ஜெட் போட்டு ஆட்சிக் கவிழ்ப்பு நடத்துவதற்கும் ஏகாதிபத்திய அரசுகள்தான் காரணம். இந்த அரசுகள் அளிக்கும் பாதுகாப்பில் மட்டுமே சர்வதேச வங்கியொன்று இப்படி இயங்க முடியும். இந்த நிழல் உலக நடவடிக்கைகளை என்னவென்றே தெரியாமல் அமெரிக்க சட்டத்துறை ஆய்வு செய்வதாக இந்தப் படத்தில் சித்தரிக்கப்படுவது ஒரு நகைச்சுவை.

அதனால்தான் என்ன தவறு இருந்தாலும் இறுதியில் அமெரிக்க நீதி வெல்லும் என்ற நியதிப்படி சேலிஞ்சரின் போராட்டம் ஏதோ ஒரு வகையில் வெல்கிறது. படத்தில் வரும் ஆயுதத் தளவாட தயாரிப்பு நிறுவனத்தின் கால்வினி, நியாய அநியாயம் பற்றிப் பேசுவதே கூட முரண்பாடுதான். கால்வினி என்ற ஆயுத வியாபாரி, இத்தாலியின் பிரதமர் பதவியை ஏற்கப் போகிறார் என்பது சாத்தியமாகும் போது ஒரு வங்கி அதிபர் ஏன் ஆயுத வியாபாரம் செய்யக் கூடாது?

ஆயினும் தமது கிரிமினல் நடவடிக்கைகளையே சட்டபூர்வமானவையாக மாற்றி அவற்றுக்கு அங்கீகாரமும் பெறும் முயற்சியில் வல்லரசு நாடுகள் ஈடுபட்டிருக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஹாலிவுட் இவற்றையெல்லாம் திரைக்கதை ஆக்குமா?

சவப்பெட்டிக்கு சந்தை இருக்கிறது என்றால் முதலாளி வர்க்கம் அந்த வியாபாரத்திலும் இறங்கத் தயங்காது என்பதை நாம் அறிவோம். சொந்தச் சவப்பெட்டி என்று புரிந்த பின்னரும் அத்தகைய முயற்சியில் ஹாலிவுட் ஈடுபடுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

• இளநம்பி



படிப்பகம்

www.padippakam.com

## சிறுகதை:

# ஐஸ்

"பாங்கு ஊதியாச்சு போலருக்கு, தட்டி எழுப்பிவிடலாம்ல? நான் வேற நல்லா தூங்கிட்டேன்"

"எத்தனை தடவை தட்றது, சரி இன்னிக்கு ஏவாரத்துக்கு போவல போலருக்குன்னு நெனச்சேன்..."

விலக மறுத்த கெட்டாவியை ஏவ்வ் என சத்தமாக விட்டபடி விஜயா தலைமுடியை முடிந்து கொண்டே கண் எரிச்சலோடு எழுந்தாள். பேருக்கு அவசர அவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டே,

"அலுப்பை பாத்தா முடியுமா? கோடை சீசன்ல தினம் போனாதான் தவணை கட்டலாம்! உஹ்ஹூ.. உஹ்ஹூ.. இந்த வரட்டிருமல் வேற அடிக்கடி தொண்டை வலிக்குது.. நீராகாரத்த குடிக்க முடியல.."

பேசிக்கொண்டே பெட்டிக் கட்டும் கயிறு, ஹாரன், நாலு நீண்ட உரசாக்குபை இவைகளை கைகளில் சுருட்டிப் பிடித்தபடி.. வா! வா! பெட்டியைத் தூக்கு! என்று மனைவியை அழைத்துக் கொண்டே வாசல்பக்கம் ஓடினார் சாமிநாதன்.

"இப்படி இருமுறீங்களே.. போற வழியுல பெரியாசுபத்திரில்லதான் காட்றது!"

"அவன்கிட்ட போய் ஓ.பி. சீட்டு வாங்கறதுக்குள்ள ஐஸ் பெட்டியே கரைஞ்சிடும். நைட்டு சித்தரத்த கசாயம் போடு! ஹூம் நல்லா புடி.. போட்டு உடச்சே.. கம்பெனிக்காரன் எம் பொட்டிய ராவிடுவான்! சரி, சரி உப்பைக் கொடு! நீயும் வருசக் கணக்குல பொட்டியத் தூக்கி விடுற... கைல காசுதான் நிக்கல.. இந்த இருமலாவது நிக்குதா? உஹ்ஹூம்.." அலுத்துக்கொண்டே கேரியரில் பெட்டியை இறுகக் கட்டி முடிபோட்டு, ஹாரனை ஹேண்ட் பாரில் வாட்டமாக வைத்துக் கட்டியவாறு, சரியாக இருக்குதா என்று அசைத்துப் பார்க்க, விஜயாவுக்கு எரிச்சல் வந்தது.

"எல்லாம் சரியாத்தான் இருக்கு போங்க.. தேரை ஜோடிக்குற மாதிரி தான்.. பெருசா சரிபாத்துகிட்டு" பேசியதைக் கேட்டு பக்கத்து வீட்டில் சாணி கரைத்துப் போட்டுக் கொண்டிருந்த ராணி,

"என்னக்கா இப்படி சொல்லிட்டீங்க.. சொன்னாலும், சொல்லாட்டாலும் அண்ணன் வண்டி தேருதான்! எத்தனைய மாட்டிகிட்டு போறாரு!"

"வீட்ல உக்காந்துகிட்டு ஒரு கிலோ பூ கட்றதுக்கே இதுங்க அலுத்துக்குது.. இந்த வேகாத வெயில்ல.. இந்த பெட்டியே பதினஞ்சு, இருபது கிலோ இருக்கும், இதுக்குள்ள ஐஸ்ஸை வேற வச்சிகிட்டு நான் பிரேக்கையும் புடிக்கணும் ஹாரனையும் அடிக்கணும்.. இதுங்களுக்கு என்னா தெரியுது சொல்லு! முட்டவுடுற கோழிக்குத்தான் வலி தெரியும்.." சாமிநாதனின் பேச்சைக் கேட்டு ராணி குபுக்கென சிரித்தாள். "ஒரு கிலோ பூவ கட்டுனா தெரியும் நரம்பு வலி..!" விஜயாவின் பதிலுக்கு மெலிதாக சிரித்தபடி பெட்டியில் வலது கையை பொருத்தி ஒரு உந்தில் சைக்கிள் பாரில் லாவகமாக காலைத் தூக்கிப் போட்டு கிளம்பினார் சாமிநாதன்.

•••

"என்னங்க நாங்க கருக்கல்ல வந்துட்டோம் எங்கள விட்டுட்டு அவுருக்கு மொதல்ல சரக்குப் போடுறீங்க?" ஐஸ் கம்பெனி முதலாளியிடம் விளையாட்டாகக் குறைபட்டுக் கொண்டான் முத்து.

"ஏய் நீ தொழிலுக்கு வந்து ஒரு வருசமாகுமா.. அவுரு எங்க அப்பா காலத்துலேந்து ஏவாரம் பாக்குறாரு.. எனக்குத் தெரிஞ்சு முப்பது வருசமா இந்த ஐஸ் பெட்டியை தூக்கறாரு.. மன்னார்குடியிலேருந்து திருத்துறைபூண்டி வரைக்கும் லைன் போறாரு, நீ போவியா!.. அம்பத்தஞ்சு வயசுல தினமும் அம்பது மைல் சைக்கிள் மிதிக்குறாரு நீ மிதிப்பியா!.. நாலு பள்ளி கூடத்தையும், பெரிய கோயிலையும் சுத்தி வர்றதுக்குள்ள மேலு வலிக்குதுன்னு வாரத்துல மூணு நாள் பெட்டியைக் கழட்டிப் போட்டுர்ர.. அவுரு அப்படியா.. கொஞ்சம் பொறுங்கடா!"

"இப்ப உள்ள பசங்களுக்கு என்ன? வேர்க்காமலே சம்பாதிக்கனும்னு நெனக்குறானுங்க! எதிர்காத்துல மிதிக்குற மிதியுல சைக்கிள் போக்ஸ் கம்பி காலுக்கு வந்துரும்! என் கெண்டைக்காலயும், சாமிநாதன் கெண்டைக்காலயும் பாரு அது நரம்பு இல்ல இரும்பு!" சாமிநாதனுக்காக பரிந்து பேசி சேர்ந்து கொண்டார் மாரி.

"ஏய் முத்து பெரிச பாத்தியா டயலாக்க! இரும்பாம்!" சிரித்தனர் இளைஞர்கள்."சும்மா இல்ல தம்பி! என் கையைப் பாரு.. ஐஸ்ஸை எடுத்து எடுத்து ரோஸ் கலர்ல ரத்தக் கட்டு போல இருக்கு பாரு!" சாமிநாதன் உள்ளங்கையை விரித்துக் காட்ட மாரி, "இங்க பாருங்கடா.. உள்ளங்கையே செத்துப்போச்சு.. பொணத்து கை மாதிரி மரத்துக் கிடக்குது பாரு!" பார்த்த மாத்திரத்தில் இளைஞர்களுக்கு கேலித்தனம் போய் முகம் உன்னிப்பானது.

"சரி, சரி, மாரி.. அடுத்தவாரம் முத்துப்பேட்டை பள்ளிவாசல் திருவிழாவாம்! பத்துப்பெட்டி போனா கூட தாங்கும்!.." சாமிநாதன் தகவல் சொல்ல.. "அண்ணே! நாங்களும் வர்றோம்.. ஏவாரம் நல்லா இருக்கும்னு கேள்விப்பட்டுருக்கோம்.." முத்துவும், சீனுவும் ஆவல்பட்டனர்.

"வர்றது பெரிசு இல்ல அங்க வந்து ஒழுங்கு மொறயா ஏவாரம் பார்த்தா.. பள்ளிவாசல்ல பிரியாணியும் தருவாங்க.. இந்த கேலி, கிண்டல் வச்சிகிட்டா ஒழுங்கா ஊர் வந்து சேரமுடியாது.."

"இல்லண்ணே! ஏவாரத்துக்கு போற இடத்துல அதுவெல்லாம் வச்சுப் போமா.. டேய் அண்ணனுக்கு சரக்குப் பெட்டியைத் தூக்கி விடுறா.." முத்துவும், சீனுவும் தூக்கிவிட்டனர்.

"பாத்தியா சாமிநாதா.. தனக்கு தனக்குன்னா முடியும் கள வெட்டுமாம்! காரியம் ஆகணும்னோன என்னான்னா பண்ணுறானுக பாரு!"

சாமிநாதன் வேலையில் கவனமாக இருந்தார்.

"-று குச்சி, ஐம்பது பாலு, சேமியா ஐம்பது கோலா அம்பது.." முதலாளி கணக்குச் சொல்ல சாமிநாதன் தலையாட்டிக் கொண்டார்.

"ஏன் பால் ஐஸ் கொஞ்சம் கூட போட்டுக்கறது"



படிப்பகம்

www.padippakam.com



''வேணாங்க கிராமத்துல சேமியா தான் ஓடுது''

பெட்டிக்கு இடைவெளியில் மரத் தூளைக் கொட்டி, பனிக்கட்டி சிதறல் களை சிறிதுப் போட்டு, வீட்டிலிருந்து கொண்டுவந்த உப்பைக் கொட்டி அதற் குத் தகுந்த கட்டை குச்சியில் இடித்தார் சாமிநாதன்.

''நேத்தெல்லாம் வண்டியிலேந்து ஏறி, ஏறி இறங்கி இடுப்பெலும்பு தேஞ்ச துதான் மிச்சம்.. கூப்புடுறானுவ சரின்னு இறங்குனா ஒத்த ஐஸ் வாங்க பத்து பசங்க சுத்திக்குறான்.. நில்லு வர்ரேன்னு பசங்க வீட்டு பக்கம் போனா... திசைய பாத்து பாத்து கண்ணு மரத்ததுதான் மிச்சம். என்னதான் ஹாரனை அடிச்சுக் கௌப்புனாலும் ஒரு பய கிளம்ப மாட் டேங்குறான்.. பழைய மாதிரி ஏவாரம் இல்ல, மாரி!''

''ஆமாம், ஆமாம்! முன்னெல்லாம் மன்னார்குடிலேர்ந்து சவளக்காரன் போறதுக்குள்ளயே ஒரு முப்பது ரூவாய்க்கு விக்கும். இப்ப கூத்தா நல்லூர் தாண்டுனாலும் இல்ல! மூலைக்கு மூலை கோன் ஐஸ், இந்த கப் ஐஸ்லாம் வந்துட்டான்.. கிராமத்து சனந் தான் நம்ம ஏவாரம்... முன்னமாதிரி விவசாயமும் இல்ல.. காசு இல்ல.. சனங்க இதுல எங்கேர்ந்து ஐஸ் வாங் கும்.. ரெண்டு ஐஸ் வாங்கி நாலு சாப்பு டுது! நம்ப மச்சான் சோடா கலர் ஏவார மும் டல்லுதான்.. என்ன எழவோ! முன்ன மாதிரி இல்ல, நாலு காசை பாக்க றதுக்குள்ள தாவு தீருது போ! வா பாக்க லாம்.. எங்க டிபனு?''

''போற வழியுல வடை, டீதான்!'' ஒரு தம்கட்டி உந்தி காலைத்தூக்கிபோட வெறும் வயிறு துவண்டு துடித்தது, சைக்கிளும் முணகத் தொடங்கியது.

•••

**பூ**ம்.. பார்ம்.. ஹாரனை விடாது அழுத்தி. ஐஸ்.. சேமியா பால் ஐஸ்.. ஹாரன் ஒலியோடு ஏறி இறங்கி அடித் தொண்டையிலிருந்து வந்த குரல்.. பள்ளிவாசல் தெருவின் வீட்டுக் கதவு களை திறக்க வைத்தது..

''ஐஸ்சு, ஐஸ்சு..'' கத்திக்கொண்டே ஒரு பையன் வேகமாக விரட்டி ஓடி வந்தான்.. குரலையும், ஹாரனையும் பொருத்தியபடி கொஞ்சம் நிழற்பாங் கான திண்ணையோரம் போய் இறங்கி சைக்கிளோடு பெட்டியை விலாவில் சாய்த்துப் பிடித்துக் கொண்டார் சாமி நாதன்.

''நாலு சேமியா.. ஒரு பால் ஐஸ்சு..'' அதையே திருப்பித் திருப்பி நச்சரித் தான் பையன்.

''டேய்.. கைல தரமுடியாது கீழ விழுந்துரும் போய் ஏனம் எடுத்துட்டு வா.. பயப்படாத போக மாட்டேன் இங்கதான் நிப்பேன்..''

சந்தேகப் பார்வையுடன் கண்களை அடிக்கடி ஐஸ்காரர் மேல் வைத்தவாறே வீட்டுபக்கம் ஓடிப்போய் பாத்திரத் தோடு திரும்ப வந்தான்.

''இந்தா.. புடிச்சுக்க.. பாக்கி காசு.. பத்திரம்..''அவசரமாக ஒரு ஐஸை நக்கி யபடியே பாத்திரத்தோடு போனவனை ''வந்துதான் தின்னேன்'' என்று திட்ட ஆரம்பித்தாள் ஒரு பெண்.

''ஐஸ்காரரே.. நாளைக்கு புள்ளை பயணம் போறான், பிரியாணி போடு றோம்.. வந்துடுங்க உங்களுக்கு நாளைக்கு எங்க வீட்லதான் சாப்பாடு!



படிப்பகம்

www.padippakam.com

**ஒரு மாதமாய் சாமிநாதனுக்கு இருமல் கூடி, இழைப்பு வந்துவிட்டது. பெரியாசுபத்திரி போயும் பலனில்லை. போதாக்குறைக்கு கால் மூட்டுக்கள் வலி எடுத்து ஒரு அடி எடுத்து வைத்து நடப்பதே பெரும்பாடாகி விட்டது.**

•••

என்ன?'' உரிமையோடு கட்டளையிட்டார் பாய்.

''சின்ன தம்பிங்களா! சின்ன புள்ளைலேந்து பாத்த பையன். பயணம் போற அளவுக்கு வளந்துட்டாங்களா! நல்ல மகராசனா போயிட்டு வரட்டும்! ரம்ஜானுக்கு கூட தம்பிதான் கூப்புட்டு வீட்டுக்கு பிரியாணி கொடுத்து விட்டுச்சு...''

''இந்த வேகாத வெயில்ல சூரியன தலையில வாங்கிகிட்டு எங்க புள்ளங்களுக்கு உங்க கையால ஐஸ் தர்றீங்களே ஐயா.. அத விடவா? பயணம் போன பசங்க பூர உங்ககிட்ட ஐஸ் வாங்கி தின்னவங்கதான். இருங்க.. பெரிய தம்பி அனுப்புன சட்டை துணி ஒன்னு இருக்கு தாரேன்..''

''வேணாங்க பரவாயில்ல...'' பாசத்தில் நெகிழ்ந்தார் சாமிநாதன்.

''இருப்பா.. அந்த காலத்துலேர்ந்து நீ கண்ணுக்கு நேரா கவுரமா உழைக்குற ஆளு.. இரு வந்துடறேன்...''

பேசிக்கொண்டே அனிச்சை செயலாய் ஹாரனை அடித்து ஒலியெழுப்ப ஓரளவு வியாபாரமானது.

சட்டைத் துணியை வாங்கி கொண்டு, ''வர்றங்க.. ரொம்ப நல்லது'' என நன்றி சொல்லி ரோட்டு பக்கம் விரைந்தார்.

நடவு நேரம். ''இப்படியா லேட்டா வர்றது.. மன்னார்குடி ஐசு.. என் மாமன் வீட்டு ஐசுன்னு இவ வேற.. உங்ககிட்ட தான் வாங்குவேன்னு நின்னு கெடக்கா?''

''ஏய் உங்க வயசுல அவுருக்கு பொண்ணு இருக்கு! அவரே வெட்கப்படுற ஆளு.. நீங்க வேற!'' கேலியாய் பேசிய நடவாட்களை இடைமறித்து பழகிய தோரணையுடன் கரையேறினாள் முத்துலட்சுமி.

''என்ன ஐஸ்காரரே பொண்ண கட்டிக் குடுத்துட்டீங்களா?''

''எங்க எவன எடுத்தாலும் ஏழு பவுனுங்குறான்.. பத்து பவுனுங்குறான்.. விதி விட்ட வழி!''

''அய்யோ பாவண்டி முத்துலட்சுமி. இவரும் நான் சின்னபுள்ளையா இருக்குறப்பலேந்து ஐஸ் விக்குறாரு.. வயித்துக்கும், வாயுக்கும் சரியாய் இருக்கு பாரு! உன் நல்ல மனசுக்கு நல்லதே நடக்கும் ஐஸ்காரரே.. ஆண்டவன் மேல பாரத்த போடுங்க!...'' நடவாள் பவுனும் வருத்தப்பட்டு பேசினாள்.

''அய்யே! மனுசன வெயில்ல நிக்க வெச்சிகிட்டு கத பேசிட்டு! வேணுங்குற ஐஸை வாங்கிட்டு அனுப்புனாதான அவுரும் நாலு இடம் பாப்பாரு! ஏம் புள்ள எத்தனன்னு கணக்கு போட்டு வாங்கு! மச மசன்னு நிக்காதே!''

''பதினொன்னு! சேமியாவா கொடுங்க! இந்தாங்க காச எண்ணிப்பாருங்க.. எவ்ளோ இருக்கு!''

''ஒரு ரூபா கொறையுது.. பரவாயில்ல.. நாளைக்கு தாங்க'' கிளம்பி இருந்தவரை பவுனு தடுத்தாள். ''அட நீங்க வேற அந்த பாவம் எங்களுக்கு ஏன்? இந்த ஒரு ரூபாய்க்கு தான ஐஸ்காரரே வெயில்ல சுட்டு, வேர்வைல அவியுற... தே! சின்ன பொண்ணு.. கொடு தாரேன்..'' பக்குவமாக வாங்கி கையில் திணித்தாள்.

''ஐஸ்காரரே நாளைக்கு வாங்க! ஒரு மரக்கா நெல்லு தாரேன்.. பொங்கி சாப்பிடுங்க பாவம்! அடுத்த வாரம் பாருங்க அறுப்பு முடிஞ்சு ஊரு கொஞ்சம் தெம்பா இருக்கும்.. ஐசும் விக்கும்.. காலனி பக்கம் போங்க.. விருந்தாளி வந்து கெடக்கு ஏவாரம் ஓடும்!'' அக்கறையுடன் வழிகாட்டினாள் முத்துலெட்சுமி.

சொன்னமாதிரி காலனித்தெருவில் காசுக்கும், சிலபேர் நெல்லு போட்டும் ஐஸ் வாங்கினர். நெல்லுப்பை எடை ஏறிப் போனது.

•••

மெல்ல ஹாரனை அழுத்திக் கொண்டே வேறு தெருவுக்குள் நுழைந்தார். கோவில் மரத்தடியில் சீட்டுக் கச்சேரி தூள் பறந்தது. சீட்டுக்கட்டை அவிழ்த்து போட்டபடி தன்னை மறந்து சத்தமாக பேசிக்கொண்டிருந்தனர்.

''ஒரு வழியா கரும்பை வெட்டிட்ட போலருக்கு!''

''ஏன் கேக்குற உளுந்து பறிக்க தவிச்ச மாதிரிதான் ஆயிபோச்சு கரும்பு வெட்டவும்.. ஒரு பய முன்ன மாதிரி கூலிக்கு கெடைக்க மாட்டேங்குறான். விருந்து வச்சு அழைக்க வேண்டி இருக்கு!''.

''ஊரப்பாத்து பயந்ததெல்லாம் பழனித்தேவர் காலத்தோட போயிடுச்சு போல.. இப்ப அவனவன் டவுனுக்கு போயி படிக்கறதென்ன? கால்ல பூட்ஸ் என்ன? இந்த பாரு நம்ப பொம்பளங்கெல்லாம் புடவைய ஏத்திக்கட்டிகிட்டு அலையுது. அவுளுகள பாரு தழைய தழைய இடுப்புச் சேலை ரோட்ல கெடந்து புரளுது! மொதல்ல இந்த பய மவன் கவர்மெண்ட் சரியில்லயா.. அவுனுகளுக்குதான சலுகை!'' பேசியபடி ''வக்கா....'' என்று கெட்ட வார்த்தையோடு மடியில் கிடந்த துண்டை அவசரமாக எடுத்து முதுகில் ஒட்டிய உண்ணியை அடித்து விரட்டினான் பாலு.

''ஐஸ் காரரே என்ன வந்து ஒரு கை போடறது!''

''என்ன இத்தன பேரு இருக்கோம்.. கண்டுக்காம போறீங்க!'' ஆளாளுக்குப் பேச, கொஞ்சம் மிரட்சியோடு சைக்கிளிலிருந்து பொத்தென்று குதித்தார் சாமிநாதன்.

''அதெல்லாம் இல்லீங்க.. உங்க தெருவுக்குத்தான் போறேன்... இந்தாங்க.. எத்தன வேணும்? உங்களுக்கு இல்லாததா?'' பரபரத்தார்.

''ஏய் மாப்ள எத்தன பேரு..'' என்று ஒருவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே.. நெருங்கி வந்தனர். ஒருவன் தானாகவே ஐஸ் பெட்டியை திறந்து கையை விட்டான். வகைவாரியாக அடுக்கி வைத்திருந்ததை அவன் கிளறி, கலைப்பதைப் பார்த்து ஆத்திரம் வந்தாலும் இவர்களிடம் வாய் கொடுத்து மீள முடியாது என்ற அச்சத்தில், ''நல்ல ஐஸ் தான்.. நான் தர்றங்க'' என்று பால் ஐஸை பாதுகாக்க எத்தனித்தார்.

''இருய்யா ஐஸ்காரரே! என்னா தங்கமா வச்சிருக்க பொத்திப் பொத்தி வக்கிற..'' என்றவாறு அவனே ரெண்டு



படிப்பகம்

பால் ஐஸை எடுத்தான், வரிசையாக கோலா, சேமியா என கலந்து எடுத்து கூட்டத்துக்கு விநியோகித்தான்.

''அப்புறம் பாதி ஏவாரத்த நானே பாத்துட்டேன்... காசு எவ்வளவு?'' சிரித்துக் கொண்டனர்.

''பதினைஞ்சு.. இல்ல பத்து.. டேய் எட்டுதான்டா..'' என்று ஆளாளுக்கு குழப்பினர்.

''ஐஸ்காரரே இன்னும் நாலு ஐசு கொடு! ஏய் ரமேசு இத வீட்ல கொடுத்துடு.. பழைய பிராந்தி பாட்டில் ஒரு நாலு கெடக்கும். கொண்டாந்து ஐஸ்கார் கிட்ட கொடு.. காசுல பாட்ல கழிச்சுக் கய்யா..''

''சரிங்க''.. அலமலப்புக்கு இடையில் கணக்குப்போட்டு காசுகேட்க,

''என்னய்யா இருபது இருபத்தஞ்சுங்கற.. நாலு பிராந்தி பாட்ல கழிச்சுமா இவ்வளவு வருது!'' என்று அவரைக் குடைந்தான்.

''எல்லாம் பால் ஐசு, சேமியா, கோலா எடுத்தீங்கள்ல அதான் கூட வருது.''

சம்மதிக்காதவனாய், ''என்னமோ போ! எங்க ஊர்ல வந்து ஏவாரம் பாத்துட்டு எங்களையே ஏமாத்தாம இருந்தா சரி.. ரமேசு இவ்வளவா வருங்குற?..'' அவனும் கணக்குப் பார்ப்பது போல் பாவனை செய்தான். கூட்டல், கழித்தல் தெரியாதவன் போல் அவன் விழி மழுமாறியது. ''சரியோ தப்போ ஒரு இருபதைக் கொடு!'' என்றான்.

''ரொம்ப குறையுதுங்க. ஒரு அஞ்சு சேத்து கொடுங்க.''

''என்ன ஐஸ்காரரே ஒரு அஞ்சு ரூபாய்க்கு இந்த இழுப்பு இழுக்குற.. அப்புறந்தான் வாங்கிக்கறது, அஞ்சு ரூபாய்க்கு எங்க ஊரு மேல நம்பிக்கை இல்லையா.. நாங்களும் மன்னார்குடி தென் கொண்டார் வகையறாதான்யா.. என்ன! குரல் கொஞ்சம் அதட்டலாக வர, சாமிநாதன் உடனே,

''அதெல்லாம் ஒண்ணுமில்ல, பரவாயில்லீங்க கணக்குதான் சொன்னேன்'' என்று மேற்கொண்டு ஏவாரத்தை பார்க்க விட்டால் போதும் என்று தெருவுக்குள் சைக்கிளை வேகமாக அழுத்தினார்.

''என்ன ஐஸ்காரரே ஒரு தேங்காய்க்கு நாலு ஐஸ் தரக்கூடாதா?'' பெண்கள் தேங்காயைப் போட்டு ஐஸ் வாங்கிக் கொண்டே முனகினர். வலது பக்கம் உள்ள பையில் தேங்காயைப் போட்டபடி பதிலேதும் பேசாமல் சிரித்து சமாளித்தார். ஒரு வழியாக முக்கால்வாசி பெட்டி காலியானது மாதிரி காலுக்குத் தெரிந்தது. வேகமாக தெருவைத் தாண்டி சாலைக்கு வந்து மரத்தடியில் சைக்கிளை சாத்திவிட்டு அருகில் மதகிலேயே சற்று உட்கார்ந்தார். வெறும் வயிற்றோடு செருமிய செருமலுக்கு..



அரச மரக்காற்று சற்று மருந்து போல நெஞ்சை வருடிக் கொடுத்தது. குனிந்து ஒரு முறை தன் உடலைப் பார்த்து வாயால் ஊதிக் கொண்டார். வாயிலிருந்து வந்த காற்று உலையிலிருப்பது போல சூடாக வெறுப்பேற்றியது. கழுத்தை அறுத்துக் கொண்டு கொட்டுவது போல வியர்வை நரம்புகள் போல நாலாபக்கம் ஓடியது. விலா அரிப்புக் கொடுத்தது... முண்டாசை அவிழ்த்து உதற, முடிந்து வைத்திருந்ததைப் போல அதற்குள்ளிருந்தும் வேர்வை உதிர்ந்தது. இனி அவ்வளவு தான் டீ கடையில் ஏதாவது ஒரு கலப்புச் சோறு பொட்டலத்த தின்னுட்டு வீட்ட பாக்கப் போனா நேரம் சரியாயிடும்.. என்று தனக்குள் முடிவெடுத்தவாறு 'அம்மா' என்று கையை மதகில் ஊன்றி எழுந்திருக்க இடுப்பு கழண்டு விழுந்தது போல இருந்தது. வீட்டை நோக்கி சைக்கிள் முகத்தைத் திருப்பியது.

•••

''ஏ விஜயா.. விஜயா..''

''வர்றப்பவே அலறிக்கிட்டே வாங்க! தோ வாரேன்..'' உதிரிப்பூக்களை ஓரம் தள்ளிவிட்டு பூக்கட்டியதை பாதியிலேயே போட்டுவிட்டு வாசல் பக்கம் வந்தாள்.

''வர்றப்பவே முனகாத!.. பாத்து புடி.. இது பொட்டி அல்ல நம்ப இரைப்பை.. எங்க சாந்தி?''

''எங்க போறது அவளும் பூ கட்டி கிட்டுதான் இருக்கா!''

''சலிச்சுகிட்டு என்ன ஆகப்போவுது! ஆகவேண்டியதப்பாரு! இன்னைக்கு நான் பட்டபாடு எனக்குதான் தெரியும்! நல்லவேளை மிச்ச ஐஸை வீணாக்காம, கரைஞ்சிராம, வேகமாக சைக்கிளை ஓட்டிகிட்டு வந்து திரும்பத் தள்ளிட்டேன்...''

வேகமாக வீட்டுக்குள் நுழைந்து சட்டையைக் கழட்டிய வேகத்தில் சீப்பைத் தூக்கி, மனைவி கையில் கொடுக்க, வழக்கமான வேலைகளைச் செய்வதைப் போல் விஜயாவும் முதுகுப் பக்கத்தை சீப்பில் வருக், வருக்கென்று சொரிந்து கொடுத்தாள். ''இங்க குடு! என்னா செய்யுற! போட்டு முதுகு புடுங்கி எடுக்குது.. இப்பதான் நீ வீணை வாசிக்குற'' என்று எரிச்சலுடன் சீப்பைப் பிடுங்கி விலா பக்கம் கையைத் தூக்கி சொறிந்தார்.

''வெயிலு முதுக புடுங்கி எடுத்துடுச்சு..''



படிப்பகம்

www.padippakam.com

''சரிதான் தம்பி! பாடிய இன்னும் வெச்சிருக்கணும்னா ஐஸ் வேணுமே.. ஐஸ்ல வெக்கற அளவுக்கு அவங்களுக்கு வசதி இல்லையே தம்பி, என்ன பண்றது... ஐஸ் இல்லாமத்தான் பாடிய உடனே தூக்கும்படி ஆயிடுச்சு..''

•••

''போதும் வுடுங்க! தோலே செவந்து போச்சு.''

ஒரு வழியாக சொரிந்து முடித்து பையில் உள்ள சரக்கை வகைபிரித்தார். பிராந்தி பாட்டில், சோடாமூடி, தேங்காய், நெல் என சிறிது சிறிதாக விழுந்தது. சிறிய துணிப்பையில் முடிந்து வைத்திருந்த காசை தரையில் கொட்டி கால்ரூபாய், ஐம்பது காசு, ஒரு ரூபாய் என பிரித்து அடுக்கினார்.

''ஊக்கும்.. முக்கி முனகி வித்தும் கடைசில இரு-ற்றைம்பது ரூபாதானா? இதுல கம்பெனிக்கு போக என்ன கெடைக்கும்?'' சலித்துக் கொண்டாள் விஜயா.

''இப்பெல்லாம் இது கெடைக்குறதே பெரும்பாடா இருக்கு.. நீ வேற.. சரி சரி தண்ணிய ஊத்து குளிச்சிட்டு சாப்புடணும்...'' முதுகில் தண்ணீர் பட்டதும் கொள்ளிக்கட்டையால் சொரிந்தது போல எரிந்தது. இருமிக்கொண்டே தண்ணியை மொண்டு ஊற்றிக் குளித்து முடிக்கையில் பசியும், தூக்கமும் ஆளை இழுத்தது.

•••

ஒரு மாதமாய் சாமிநாதனுக்கு இருமல் கூடி, இழைப்பு வந்துவிட்டது. பெரியாசுபத்திரி போயும் பலனில்லை. போதாக்குறைக்கு கால் மூட்டுக்கள் வலி எடுத்து ஒரு அடி எடுத்து வைத்து நடப்பதே பெரும்பாடாகி விட்டது. கொல்லைப் பக்கம் போகும் போதெல்லாம் சந்துக்குள் அனாதையாக நிற்கும் தனது சைக்கிளை பார்த்து பார்த்து வருந்தத் தொடங்கினார். ''எத்தனை ஊரு நானும் இந்த சைக்கிளும் சுத்தியிருப்போம் இப்படி ஆயிடுச்சே.. பாரு லைனுக்கு போகாம துருபுடிச்சே போச்சு..'' வருந்திய கணவனிடம் விஜயா கடிந்து கொண்டாள்.. ''உடம்பே நடக்கமுடியாம போச்சு.. இதுல எதுக்கு இத்தன தடவை அந்த சைக்கிளை போய் போய் பாக்குறீங்க.. பேசாமல் ஒரு இடத்துல படுங்க... நடக்க முடியாம விழுந்து கிழுந்து வச்சிடாதீங்க..'' கைத்தாங்கலாய் பிடித்து இழுத்துவர, பார்த்துக் கொண்டிருந்த மகள் சாந்தி தேம்பித் தேம்பி அழுதாள்.

''அழாத சாந்தி, தைரியமா இரு! இல்லாதபட்டவங்களதான் ஆண்டவன் சோதிக்கிறான்.. அவரு பாட்டும் ஏவாரத்துக்குப் போயிட்டு வந்துட்டு இருந்தாரு.. எங்கேர்ந்துதான் வந்துச்சோ இந்த வியாதியெல்லாம்.. சரியா சாப்பிடாம வெக்காம சைக்கிள் மிதிச்சு மிதிச்சே இப்படி ஆயிடுச்சு போ! வயித் தெரிச்சலா இருக்கு..என்னதான் சொல்றாங்க டாக்டரு'' கண் கலங்கியவாறு பக்கத்து வீட்டு ராணி விசாரித்தாள்.

''எக்ஸ்ரேயும் எடுத்துப் பாத்தாச்சு.. நெஞ்செலும்பெல்லாம் தேஞ்சு கெடக்கு.. ஆஸ்துமா வேற இருக்குறதுனால முடியாம இருக்கு.. சத்து மாத்திர குடுத்திருக்கோம்.. சாப்பிட்டா மூட்டு வலி சரியாப் போயிடும்.. பெடல சேர வேண்டாம்னு சொல்றாங்க.. தஞ்சாவூரு மெடிக்கல்லயும் இதத்தான் சொல்றாங்க.. என்னா பண்றதுன்னு ஒண்ணுமே புரியல போ! திடீர்னுஇப்படிப் படுப்பார்னு கனவுலயும் நெனக்கல..'' கண்கள் கசிய சாமிநாதனை மெல்லப் பக்குவமாக பிடித்து வந்து படுக்க வைத்தாள்.

•••

அவன் எதிர்பார்க்கவே இல்லை.. ஊரிலிருந்து இப்படி சேதி வருமென்று.. ''சாமிநாதன் எக்ஸ்பையர்டு ஸ்டார்ட் இம்மீடியட்லி'' தந்தியை படித்தவுடன் ஆடிப்போனான் முருகன். யோசிப்பதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. பேசாமல் மெட்ராஸூக்கே அவரை அழைத்து வந்து வைத்தியம் பாத்துருக்கலாம். கொஞ்சநாள் வாழ்ந்திருப்பார். காலங் கடந்த யோசனைக்கு தன்னையே நொந்து கொண்ட மனதோடு மன்னார்குடி பஸ்ஸைப் பிடித்தான். போய்ச் சேருவதற்குள் மணி மாலை ஐந்தாகிவிட்டது.

வாசல்பக்கம் பிணம் தூக்கியதற்கான தடயங்கள் தென்பட்டன. வீட்டிற்குள் செல்லவேண்டும் என்று கூட தோன்றவில்லை. உடனடியாக சுடுகாட்டுக்குச் செல்ல மனம் உந்தித் தள்ளியது.

''உங்களுக்காகத்தான் இவ்வளவு நேரம் வெச்சிருந்தாங்க.. லேட்டாகவும் இப்பதான் தூக்கிட்டுப் போனாங்க, டேய் சுரேசு அண்ணன சைக்கிள்ல ஏத்திகிட்டு வழிகாட்டுறா..'' நின்று கொண்டிருந்தவர் சுடுகாட்டுக்கு விரைவாகப் போக உதவி செய்தார். பையனை பின்னால் உட்காரவைத்து வழியைக் கேட்டுக் கொண்டே சைக்கிளை வேகமாக மிதித்தான். எவ்வளவு வேகமாகப் போயும் பலனில்லை. வறட்டியை அடுக்கி தீ மூட்டியாகி விட்டது. பார்த்து விசும்பி விசும்பி அழுதான்.

ஆறுதல் சொல்ல அவன் பக்கம் வந்தவர் ''நீங்கதானா மெட்ராஸ்ல இருக்குற அவரு அண்ணன் பையன், உங்களுக்காகத்தான் தம்பி பாடிய ரொம்ப நேரம் வச்சிருந்தாங்க.. சீக்கா இருந்த உடம்பா லேட்டானா தாங்காது.. அதான் எடுத்துட்டாங்க.. இதுக்கே நீ நான்னு பக்கத்துல நாலு பேரு ஒதவி செஞ்சுதான் காரியம் ஆயிருக்கு.. நல்ல மனுஷன்.. சாகுற வரைக்கும் உழைச்சாரு.. ஊர் ஊராப் போயி எவ்வளவு ஐஸ் வித்துருப்பாரு தெரியுமில்ல... உழைப்பாளி மனுஷன்.. போய் சேந்துட்டாரு..

''ஏங்க இன்னுங் கொஞ்ச நேரம் வச்சிருக்கக் கூடாதா.. முகத்தைக் கூட பாக்க முடியாம போயிடுச்சே'' தேம்பினான்.

''சரிதான் தம்பி! பாடிய இன்னும் வெச்சிருக்கணும்னா ஐஸ் வேணுமே.. ஐஸ்ல வெக்கற அளவுக்கு அவங்களுக்கு வசதி இல்லையே தம்பி, என்ன பண்றது... ஐஸ் இல்லாமத்தான் பாடிய உடனே தூக்கும்படி ஆயிடுச்சு..'' பேசிக் கொண்டே நகர்ந்தார்.

உள்ளுக்குள் அழுதுகொண்டே கூட்டத்தோடு நகர்ந்த அவன் ஒருமுறை திரும்பிப் பார்த்தான். பொறுக்க முடியாமல் வெடித்துக் கிளம்பிய சிதையின் தீநாக்கு ஆத்திரமாக ஏதோ பேசுவது போல தெரிந்தது.

• துரை.சண்முகம்



படிப்பகம்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

இதோ பொன்மனச்செல்வி அம்மா அவர்களின் ஆணைப்படி மக்கள் உங்கள் கதையை முடிக்க காத்திருக்கிறார்கள்...! பேச்சு நீளமும், ஆங்காங்கே பஞ்ச் டயலாக்கும், சொல்லி வைத்தார் போல விசில் சத்தமும் எதற்குத்தான் இத்தனை களேபரம் என்று ஆவல் மிகுந்து இன்னும் பந்தல் பக்கம் நெருங்கினேன்.

‘‘இப்போது அம்மாவின் போர்ப் படைத் தளபதி... இதயதெய்வம் அம்மாவின் உண்மை விசுவாசி.. காவல் தெய்வம் அம்மாவின் கழக முழக்கம்...’’ மேற்கொண்டு அடுக்கிக் கொண்டே போவதைக் கேட்க விரும்பினாலும், கேட்க முடியாமல், திடீரென்று மேலிடத்தை நினைவுக்கு வந்தவர் போல சடக்கென எழுந்து மைக்குக்கு முன் நயினார் நாகேந்திரன் எழுந்தருளினார். குரலைக் கனைத்துப் பேசத் தொடங்குவது போல பாவனைகள் காட்ட... வரிசையாக பொன்னாடை வந்து விழுந்தது. முகம் பாலிஷ் போட்ட கிரானைட் போல வழு, வழு என பளிச்சிட்டது. ஆளை நிற்க வைத்து நெசவு செய்தது போல சட்டையும், வேட்டியும் சன்னமாக மின்னியது.



வெயிலை எப்போதாவது பார்க்கும் நெற்றியில் வியர்வை அரும்ப புத்தம் புது வெள்ளைக் கைக்குட்டையை ஒற்றி எடுத்தபோது இரட்டை இலை தங்க மோதிரம் நயினாரின் கைவிரல்களை அடைத்து தகதகவென மின்னியதை முப்பது அடி தூரத்திலிருந்து பார்க்க முடிந்தது. அங்கே எல்லாம் புதுசு, பிரமுகர்கள் வந்த கார்கள் புதுசு, பேசியவர்கள் பாதாதி கேசம் வரை பார்க்குமிடமெல்லாம் புதுசோ புதுசு, சுற்றுவட்ட தெருக்காட்சிகளும் புதுசு, பந்தலின் ஓரத்தில் நின்ற - மன்னிக்கவும் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருந்த - கொஞ்சம் மக்கள் மட்டும் கந்தலான பழசாக தனியே தெரிந்தனர்.

‘‘என்னதான் நடக்கும் நடக்கட்டுமே’’ என்ற எம்.ஜி.ஆர். பாட்டை நினைத்தபடி இன்னும் கூட்டத்தை விலக்கி முன்வரிசைக்கே போனேன்.. விசயம் விளங்கியது.. அங்கே பந்தலுக்கு கீழே குவிக்கப்பட்ட மணலில் அ.தி.மு.க கொடியின் நிறத்தை பெயிண்டில் வரைந்து மூன்று பெரிய தண்ணிப் பானைகள் இடைவெளிவிட்டு குந்தியிருந்தன. முப்பெரும் பானைகளின் தாய் பானையாய் அவைகளுக்குப் பின்னால் டிஜிட்டலில் அச்சிடப்பட்ட ஜெயலலிதாவின் முகம் தொங்கியது. ஒரு கோணத்தில் முதுமக்கள் தாழிபோலவும் ஜெயலலிதாவின் உருவம் தெரிந்தது. மறக்காமல் பானைகளில் இரட்டை இலை சின்னம் கண்ணைப் பறிக்கும்படி பளிச்சிட்டது.

தண்ணீர் பந்தலை திறக்கும் நிகழ்ச்சியாக.. பானைக்குள் டம்ளரில் மொந்து நயினார் குடிக்க.. மீத தண்ணியை காசி தீர்த்தம் போல கரை வேட்டிகள் தள்ளுமுள்ளோடு பகிர்ந்து கொண்டன. ‘‘த்தூ இதுக்குத்தான் இவ்வளவு படாடோபம், ஆர்ப்பாட்டமா’’ என்று நான் மனம் நொந்த வேளையில், நயினாரின் குரல் வெடித்தது.

‘‘மக்களின் தாகம் தீர்க்க, தாயுள்ளத்தோடு அம்மா தமிழகமெங்கும் தண்ணீர் பந்தல் திறக்கச் சொல்லி ஆணையிட்டதற்கிணங்க.. இந்தப் பகுதியில் தண்ணீர் பந்தல் திறந்த கழகக் கண்மணிகளே.. இதே சுறுசுறுப்போடு பணியாற்றி கருணாநிதி ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும்வரை இரத்தத்தின் இரத்தங்கள் தாகம் தணியாது.. ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களின் தாகம் தணிக்கும் மக்கள் தெய்வம் அம்மாவின் ஆட்சி அரங்கேறும் நாள் வெகு தொலைவில் இல்லை... இது சத்திய வாக்கு...’’ நைனார் நீட்டிக்கொண்டே போனார். சங்கு பாஸ்கரும் கொஞ்சம் நம்பிக்கை வந்தது போல சுற்றியிருப்பவர்களை திரும்பிப்பார்க்க, கைதட்டல் இன்னும் பலமானது.

பக்கத்து பக்கத்து தெருக்களில் திரும்பியபோது விஜயகாந்த் பானை, கலைஞர் பானையும் கண்ணில்பட்டது. ‘அறுபதாண்டு சுதந்திரத்தில்’ தண்ணீர் பானை வைப்பதே ஒரு மாபெரும் அரசியல் நடவடிக்கையாகவும், மக்கள் தொண்டாகவும் வளர்ந்திருக்கிறது. இந்த மானக்கேட்டிற்கு ஒரு திறப்பு விழா, அதை ஒலிபரப்ப மைக்செட்டு!

ஏரியும், ஆறும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு. ஏமாளி மக்களுக்கு தண்ணிப்பானை!

● சுடர்விழி

பக்கத்து பக்கத்து தெருக்களில்
திரும்பியபோது
விஜயகாந்த் பானை,
கலைஞர் பானையும்
கண்ணில்பட்டது.
‘அறுபதாண்டு சுதந்திரத்தில்’
தண்ணீர் பானை வைப்பதே
ஒரு மாபெரும் அரசியல்
நடவடிக்கையாகவும்,
மக்கள் தொண்டாகவும்
வளர்ந்திருக்கிறது.
இந்த மானக்கேட்டிற்கு
ஒரு திறப்பு விழா,
அதை ஒலிபரப்ப
மைக்செட்டு!



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA KALACHARAM
(Tamil Monthly)

REGISTERED WITH THE REGISTRAR OF
NEWSPAPERS FOR INDIA UNDER No: 42847/87

Regd. No: TN / CCN / 434 / 09-11



# கலைஞரின் துரோகத்தால் ஈழமே சுடுகாடு
# துரோகத்தை மறைக்கவே செம்மொழி மாநாடு!

**விவசாயித் தமிழனுக்குத் தண்ணியில்ல**
**நெசவாளித் தமிழனுக்கு நூல் இல்ல**
**தொழிலாளித் தமிழனுக்கு உரிமையில்ல..**
**பட்டதாரித் தமிழனுக்கு வேலையில்ல**
**மாணவத் தமிழனுக்கு கல்வியில்ல**
**மீனவத் தமிழனுக்கு கடல் இல்ல**
**தமிழன் வாழாமல் தமிழ் வாழுமா?**
**தண்ணியே இல்லாமல் மீன் வாழுமா?**

படிப்பகம்